
கோவை வானொலியில்

# தமிழ்மணம்







## மலர்

தொகுப்பு

புலவர் மணியன்

கோவை வானொலி நிலையம்
கொண்டாடும்
இந்திய ஒலிபரப்பின்
பொன்விழாவைச் சார்ந்து
வெளிவரும் மலருக்கு

எங்கள்

**உள்ளம் கனிந்த**
**நல்வாழ்த்துக்கள்**

# Sakthi Sugars Limited

**COIMBATORE**

*REGISTERED OFFICE*

73 A, RACE COURSE ROAD
P. B. No. 3775
COIMBATORE

*

*FACTORY*

SAKTHINAGAR P. O.
(via) ERODE R.M.S.

*MANUFACTURERS OF*

**HIGH QUALITY**
**WHITE CRYSTAL SUGAR**
**AND**
**INDUSTRIAL ALCOHOL**
**AND**
**PRODUCERS OF**
**HIGH YIELDING HYBRID SEEDS**
(CERTIFIED BY THE GOVERNMENT)

T-UN-253

கோவை

# வானொலியில் தமிழ் மணம்


வரலாறு—சமூகஇயல்—இறைமை—கலை தொடர்பான ஒலிபரப்பின் தொகுப்பு

ரசிகர்கள் வெளியிடும்

கோவை வானொலி நிலையத்தின்

இந்திய ஒலிபரப்பு

# பொன் விழா மலர்




வெளியீடு:

மலர்க் குழுவினர்

11—6—'78

# நன்றி மலர்கள்



மலர்கள் மலருகின்றன; அவை,

வண்ணத்தால், கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

மணத்தால், மூக்கிற்கு விருந்தளிக்கின்றன.

இந்த இரண்டாலும் மனத்துக்கு மகிழ்ச்சி;

இந்த மலர்,

கண்வழி புகுந்து கருத்துக்கு விருந்து தருகின்றது.

கோவை வானொலி நிலையம், கொங்கு நாட்டு வரலாற்றை— நாகரிகத்தை — பண்பாட்டை இறை உணர்வை — கலை நலத்தை, கற்று வல்ல சான்றோர்களைக் கொண்டு ''பேச்சுக் களாக'' ''உரைச் சித்திரங்களாகத்'' தொடர்ந்து ஒலிபரப்பி வருகிறது.

இந்த ஒலி பரப்புக்கள், வெறும் ஒலி பரப்புக்கள் மட்டுமல்ல. சிறந்த ஆராய்ச்சியின் உயர்ந்த வடிவங்கள்! இவை,

இவை முன்பு நம் செவிவழி புகுந்து, சிந்தை கவர்ந்தவை. அது மட்டும் போதுமா?

காற்றில் கலந்து விட்ட அந்த ஒலி, அச்சு வடிவம் பெற்றால் அனைவர்க்கும் நிலைத்த பயன் தருமல்லவா? அதற்காக, இன்று அச்சு வடிவில் ''மலராக'' உங்கள் கையில் விளங்குகிறது.

கோவை வானொலியில் முன்பு பல சமயங்களில் ஒலிபரப்பான நிகழ்ச்சிகளே இம் மலரில் எழுத்துரையாக இடம்பெறுகிறது.

இவற்றை எழுதிய அறிஞர் பெருமக்கள், அச்சிட்டு வெளி யிட்டுக் கொள்ள அனுமதியளித்தமைக்கு என் உளங்கலந்த நன்றி உரியது.

இவை ஒலிபரப்பாக ஊக்கம் தந்த நிலைய இயக்குநர், **திருமிகு ஞா. பிரேமானந்தா** அவர்கள், ஒரு இயக்குநர்க்கு இருக்கவேண்டிய பல்துறைப் பயிற்சியும் உடையவர்கள்.

சிறந்த தமிழ் அன்பர். 'இம் மலர்' எங்கள் நிலையம் எடுக்கும் ''பொன்விழா'' சமயத்தில் வெளிவருவதானால் பொருத்த மாயிருக்குமல்லவா? என்று சொல்லி இதனை வெளியிட ஒரு நல்ல தருணத்தை உருவாக்கிக் கொடுத்தார்கள். அவர்களுக்கு எங்கள் உள்ளம் கனிந்த நன்றி!

கொங்குநாட்டு சமூக இயலை, வரலாற்றை, கொஞ்சங் கொஞ்சமாக ஒலிபரப்பாகக் கொண்டுவந்துவிட வேண்டு மென்ற பேரார்வத்துடன் இத்தகைய தலைப்புகளை உருவாக்கி ஊக்கமும் ஆக்கமும் தந்தவர், கோவை வானொலி நிலை யத்தின் தலைமை, நிகழ்ச்சிகள் அமைப்பாளர், **திருமிகு ஈ. எஸ். சுந்தரமூர்த்தி** அவர்களே ஆவார்கள். அவர்கள் தமிழ் உணர்வும், அதற்கேற்ற புலமையும் உடையவர்கள். பார்க்கவும், பழகவும் இனியவர்; எளியவர்; அவர்களே இம் மலர் மணம்பரப்பப் பேருதவி செய்தவர்கள்! அவர்களுக்கு எங்கள் நெஞ்சு நிறைந்த நன்றி!

இந்த மலரை வெளியிட்டுப் பெருமைதரும், **வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள், என் சொல்லுக்கு அப்பாற்பட்ட பெருமையுடையவர்கள்.** அவர்களுக்கு எங்கள் நெஞ்சங்கனிந்த நன்றி!

இந்த மலரின் முதல் 'படி'யைப் பெற்றுக்கொள்ளும் வானொலித் துணைத் தலைமை இயக்குநர் **திரு. எம். எஸ். கோபால்** அவர்கள் நல்ல தமிழன்பர்! கவிஞர்! அவர்கட்கும் எங்கள் நன்றி!

இந்த மலர் வெளிவர சிறந்த யோசனைகளைத் தந்துதவிய **தமிழறிஞர் ஆர். இருசப்பிள்ளை,** எம். ஏ., அவர்கட்கும், இரவு-பகல் பாராது என்னுடனிருந்து உழைப்பை நல்கிய **ஓவியர் க. கோட்டீசுவரன்** அவர்கட்கும் என் மனங்கலந்த நன்றி!

இம் மலர் மணக்க விளம்பரம் தந்து உதவிய வணிகப் பெருமக்கட்கும், இதனைக் குறுகிய காலத்தில் — மிகச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்துதவிய **கலைக்கதிர் அச்சகத் தாருக்கும்,** அதற்குத் துணையாயிருந்த அதன் மேலாளர் **ஆர். இராமச்சந்திரன்** அவர்கட்கும் என் அன்பு நன்றிகள்!

ஒரு நிலையம் ஒலிபரப்பிய பல்வேறு நிகழ்ச்சிகள் கருத் தமைதிக்கிணங்கத் தொகுக்கப்பட்டு ஒரு மலராக இவ்வாறு வெளிவருவது இதுவே முதல் முறை என்று நம்புகிறோம்.

இனி, மலர் உங்கள் கையில்!

அன்புடைய

**புலவர் மணியன்**


மலர்க்குழுச் செயலர்

8-A, அரசு ஊழியர் குடியிருப்பு,
ரேஸ் கோர்ஸ், கோவை-18.
8—6—1978




# மலர்சிந்தும் தேன் துளிகள் . . . . . .


| | பக்கம் |
|---|---|
| **கொங்குநாட்டுக் கோயிற் சிற்பங்கள்**<br>—தவத்திரு. வித்வான் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் | 1 |
| **கொங்குநாட்டு வழிபாட்டு முறைகள்**<br>—தவத்திரு. சுந்தர சுவாமிகள் | 7 |
| **கொங்குநாட்டு ஊர்ப் பெயர்கள்**<br>—புலவர் ஐ. இராமசாமி | 11 |
| **கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் - பவானி**<br>—இரா. பூங்குன்றன், எம். ஏ. | 17 |
| **கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் - வெள்ளலூர்**<br>—புலவர் செ. இராசு | 21 |
| **கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் - விஜயமங்கலம்**<br>—கொடுமுடி சண்முகம், பி. இ. | 25 |
| **கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் - தாராபுரம்**<br>—கே. வெள்ளிமலே, எம். ஏ, | 31 |
| **கொங்குநாட்டுப் பழமொழிகள்**<br>—இல. செ. கந்தசாமி, எம். ஏ. | 35 |
| **கொங்குநாட்டுப் பழங்குடி மக்கள் ''காடர்கள்''**<br>—மந்திரிபாளேயம் மா. நடராஜன், எம். ஏ. | 41 |
| **கொங்குநாட்டுப் பழங்குடி மக்கள் ''இருளர்''**<br>—வி. கே. பத்மனுப்ன் எம். ஏ. | 47 |
| **கொங்குநாட்டுப் பழங்குடி மக்கள் ''குறும்பர்''**<br>—டாக்டர் ஆர். சந்திரசேகரன், எம். ஏ. | 51 |
| **கொங்குநாட்டுக் கோட்டைகள் - சங்ககிரிக்கோட்டை**<br>—புலவர் மணியன் | 55 |
| **கல்லும் கலேயும்**<br>—புலவர் மணியன் | 61 |
| **கொங்குநாட்டுப் பண்டிகைகள்**<br>—திரு. கே. வெள்ளிமலே, எம். ஏ. | 71 |
| **கொங்குநாட்டு நடுகற்கள்**<br>—புலவர் சு. வேலுசாமி | 75 |




மலரை வெளியிடும்
பொள்ளாச்சி, தொழிலதிபர்
**வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள்**



மலரின் முதல் 'படி'யைப் பெற்றுக்கொள்ளும்
வானொலி துணைத்தலைமை இயக்குநர்
**எம். எஸ். கோபால் அவர்கள்**



கோவை வானொலி நிலைய இயக்குநர்
**ஞா. பிரேமானந்தா அவர்கள்**



கோவை வானொலி நிலைய,
தலைமை நிகழ்ச்சி அமைப்பாளர்
**ஈ. எஸ். எஸ். மூர்த்தி அவர்கள்**

# *கொங்கு நாட்டுக் கோயிற் சிற்பங்கள்

தவத்திரு. வித்வான். சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள்,
முதல்வர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர்.

**தமிழகமும் கலைகளும்**

மக்களினத்தின் நாகரிகத்தை—பண்பாட்டை வெளிப்படுத்துவன கலைகள். ஒவ்வொரு இனமும் தன் பழமைக்கேற்ப தன் மரபுகளையும், கூரிய அறிவுத் திறத்தையும், கலை நுட்பங்களால் வெளிப்படுத்தும். பாரதநாட்டின் மிகப்பெரும் பழமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன தொன்மைக் கலைகள். இவ்வாறு கலை நுட்பங்கள் நிறைந்த வடிவங்கள், சிற்பம், ஓவியம் எனவளர்ந்து, பண்பாட்டுணர்வையும், அறிவு நலத்தையும் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளன. நமது தமிழகம் சிற்பக்கலையில் மிகச் சிறந்து விளங்குவது. நமது பண்டைச் சிற்பங்கள், அழகும் தொன்மையும் உடையவை. கலையுள்ளம் கொண்ட அனைவரையும் கவர்ந்து ஈர்ப்பன. இச்சிற்ப நுட்பங்கள் பிற நாட்டவரையும்கூடப் பெரிதும் கவர்ந்துள்ளன. நம் நாட்டுச் சிற்பக்கலை பல்லாயிரம் ஆண்டுகளாக — வழி வழியாக வளர்ந்து வருவது. நமது பழமை இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் இதற்கான குறிப்புக்கள் உள்ளன.

**கொங்கு நாட்டில்**

தமிழகத்தின் மேற்குப் பகுதியாகிய கொங்கு நாட்டின் சிற்பங்கள் உலகத்திலேயே மிகச் சிறந்தன என்று கூறுவது புனைந்துரையாகாது. ஏனெனில் கொங்கு நாட்டுச் சிற்பங்கள் மருந்து, கல், உலோகம், மரம், சுதை என்ற கூறுபாட்டில் வளர்ந்துள்ளன. அவற்றைப் பற்றி முழுமையாகக் கூறுவது குறுகிய நேரத்தில் இயல்வதன்று. எனினும் அறிமுகமாகச் சிலவற்றைக் கூறலாம்.

**திருச்செங்கோட்டில்**

தொன்மைக் காலம் என்பது அம்மையப்பனுக விளங்கும் சிவபெருமான் திருவடிவமே ஆகும். இக்கோலம் திருச்செங்கோட்டு மலையின் உச்சியில் கருவறைத் திருவுருவமாக விளங்குகிறது. இத்திருவுருவம் பேரழகு வாய்ந்த சிற்பமாகும்,

---

*7—12—77-ல் ஒலிபரப்பாயிற்று

ஒருபாதி பெண்ணாக, பெண்ணுக்குரிய தோடும், தலையணியும், ஆடையும் அணிகலன்களும் மிளிர்கின்றன. மறுபாதி ஆணுக்குரிய குழை, சடை முடி, சிவனுக்கே உரிய புலித்தோல் ஆகியவை அமைந்த அருமைச் சிற்பமாக ஓங்கிய தண்டுடன் வெள்ளிய வடிவத்தில் இலங்குகிறது. இச்சிற்பத் திருவுருவம் சிலையால் ஆனதன்று. தெய்வ அருளையும், மன வலிமையையும் பெற்ற சிறந்த சித்தர்களால் மருந்துகளைக் கொண்டு அமைக்கப்பெற்றது. இக்கோலத்தை மாணிக்க வாசகர், நெஞ்சை உருக்கும் தமது திருவாசகத்தில்,

''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ''

என்று நெஞ்சங் கனியப் பாடுகிறார்.

**திரு ஆவி நன்குடியாகிய பழநியில்**

கொங்கு நாட்டுத் தென்பகுதியாக விளங்குவது வைகாவூர் நாட்டுப் பகுதியான பழநி. பழநி மலையின் உச்சியில் கோவணத்துடன் தண்டு கொண்டு மேற்கு நோக்கி நிற்கும் முருகன் பேரழகும், திருவருள் நோக்கும் மக்களது மனக் கவலையைப் போக்கித் துன்பச் சுமையை நீக்குவன. அந்த அழகிய இளமைச் சிற்பம் எத்தனை வகையாகப் புனைந்தாலும், மேலும் அழகியதாய்க் காட்சி தருவது. இது, ஒன்பது வகையான ''மருந்துகளால்'' சித்தர்கள்தம் மூதறிவால் உருவானது. மருந்துகளைக் கற்களாக மாற்றி இணைத்து அமைத்தது. இதனை ''நவ பாடாணம்'' என்பர். இத் திருவுருவம் மருந்தாய் இருப்பதால் அபிடேக மாய்ச் சார்த்தும் சந்தனமும் திரு நீறும், பாலும் மருந்துடன் சேர்ந்து உடற் பிணிகளை நீக்கி உளப் பிணியை மாற்றிப் பிறவிப் பிணியையும் போக்குகின்றன. திருச்செங்கோட்டு அம்மையப்பன் உருவமும் பழனியில்உள்ள குழந்தைவடிவேலன் உருவமும் மருந்துகளால் ஆகிய சிற்பங்கள். இது போன்ற சிற்பங்கள் உலகில் வேறு எங்கும் இருப்பதாய்க் கேள்விப்பட்டதில்லை. கொங்கு நாட்டுச் சிற்பக்கலை வல்லமைக்கு இதனைவிட வேறு சான்றும் வேண்டுமோ?

**நாமக்கல்லில்**

நாமக்கல் ஒரு அழகிய மலை. ஒரே பாறையாக விளங்குவது. கொங்கு நாட்டில் குடைவரைக் கோவில் இல்லை என்ற குறையை நாமக்கல் குடைவரைக் கோவில் போக்குகிறது. நாமக்கல் குடைவரைக் கோவில் பல்லவன் காலத்தது என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதியமான் மரபில் வந்த சோமன் என்ற சிற்றரசன்—சோமன் என்னும் அதியமான் இங்குள்ள இரண்டையும் அமைத்தான் என்பதை அங்குள்ள கல்வெட்டைக் கொண்டு அறியலாம். ''அதி யேந்திர விண்ணகரம்'' என்றே இக்கோவிலைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

கிழக்குப் பார்த்த குடைவரை, பள்ளிகொண்ட பெருமாள் கோவில். இதன் கருவறை முழுவதும் மலையைக்குடைந்து செதுக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டது. ஐந்து தலைமீது பெருமாள் பள்ளி கொண்ட கோலம், கால் பகுதியில் மது, கைடவர் என்ற இரு அரக்கர்கள் இருக்கின்றனர். மார்க்கண்டேயர், வருணன், தக்கன், சந்திரன், சூரியன், பஞ்சாயுதங்கள், தும்புரு நாரதர் ஆகிய சிற்பங்களும் கல்லில் செதுக்கிய கைவண்ணங்களே.

சிவனும் திருமாலும் சேர்ந்த நிலை, சங்கர நாராயணர் உருவம். சமய ஒற்றுமையின் சின்னம். வலப்பக்கம் சிவன்; இடப்பக்கம் திருமால்; சிவன் கையில் பாம்பும் மானும்; திருமால் கையில் சங்கு.

**தாரமங்கலத்தில்**

சேலம் மாவட்டத்திலுள்ள தாரமங்கலம், சிற்பக்கலையின் கருவூலம். இங்குள்ள கயிலாயநாதர் கோவில் சிற்பங்கள், பேரூர்க் கோவில் சிற்பங்களை ஒத்த கலையழகு உடையன. முனிவர் மனைவியின் வடிவமும், ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் வடிவமும் நம் கண்களை வேறொன்றிலும் செல்லவிடாமல் ஈர்க்கும் கலையழகு கொண்டவை. திருச் சுற்றில் உள்ள வாலிவதை என்னும் இராமாயணக் காட்சியை நல்கும் சிற்பம், சிற்பியின் கைவண்ணத்தைக்— கலைத்திறனை— இலக்கிய உணர்வை வெளிப்படுத்துவது. இராமன் மறைந்து நின்று வாலிமீது அம்பெய்தான் என்ற செய்தியை இராமாயணத்தால் அறிகிறோம். இங்குள்ள வாலி— சுக்ரீவன் போர்க்காட்சிச் சிற்பத்தில் வாலி இருக்குமிடத்தில் நின்று பார்த்தால் இராமனுடைய வில்லேந்திய சிற்பம் தெரிவதில்லை. ஆனால் இராமன் இருக்குமிடத்திலிருந்து பார்த்தால் வாலியின் உருவம் தெரிகிறது. இதிலிருந்து எவ்வளவு நுட்பமாகக் கலைத் திறமையைக் கலைஞன் வெளிப்படுத்தியுள்ளான் என எண்ணி நாம் வியப்படைகிறோம். இது போலவே மன்மதன்—ரதியின் சிற்பங்களும் அமைந்துள்ளன. ஒரு கோணத்திலிருந்து பார்க்கும்போது மன்மதனுக்கு இரதியின் உருவம் தெரிவதில்லை. ஆனால், அதே கோணத்தில் இருக்கும் இரதி கண்ணுக்கு மன்மதன் தெரிகிறான். இத்தகைய அருமையான கலைநுட்பம் நிறைந்த சிற்பங்கள் பல இங்கு விளங்குகின்றன.

**கொல்லி மலையில்**

வள்ளல்களில் சிறந்து விளங்கிய பெருவீரன் வல்வில் ஓரி. அவன் ஆட்சி புரிந்த இடம் கொல்லிமலை. வல்வில் ஓரியின் கை வண்மையும், வில் வன்மையும் சங்க இலக்கியங்களால் மிகச் சுவைபட விளக்கப்படுகின்றன. அவனுடைய சிற்ப உருவம் ராசீபுரம் கோவில் மண்டபத்தில் பெருமிதத்தோற்றத்தோடு விளங்குவதை இன்றும் காணலாம். பலரும் இவ்வுருவத்தை இராமனுடைய உருவம் என்றே கருதியிருந்தனர். இது வல்வில் ஓரியின் உருவந்தான் என்பதை பெரும் புலவர் திரு. தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்கள் ஆய்ந்து கண்டு வெளிப்படுத்தினர்.

இது போலக் கொங்கு நாட்டு வைப்புத் தலங்களில் ஏழூர், தோழூர் என்பன சேலம் மாவட்டம் ராசீபுரம் வட்டம் வையப்ப மலைக்கண்மையில் உள்ளன. ஏழூர்க் கோவிலின் கலை நலம், அறியாதவர்களால் இன்று பாழ்பட்ட நிலையில் காணப்படுகிறது. சீரழிந்துள்ள இத் திருக்கோவிலின் சிற்பங்களின் பேரழகுதான் என்னே! வியத்தகு சிற்பங்கள் சில இன்னமும் கூட அழகாகக் காட்சியளிக்கின்றன. விடைமேல் அமர்ந்த இறைவன், இடையே இளங்குமரன் அமர, சோமாஸ்கந்தராய் விளங்கும் பெருமித அருட்கோலம் காணற்கினிய அரிய காட்சி. இறைவன் மேலிரு கையில் மானும் மழுவும். கீழிருகையில் அபய வரத கோலங்கள். இந்த அருட் காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய விருந்து. ஒரு பாகத்தாளாகிய அன்னை, பூவேந்திய கையினளாய்க் காட்சியளிக்கிறாள், இடையிலே அமர்ந்துள்ள முருகன், மலர் ஏந்திய கரங்களுடன் விளையாடும் குழந்தையாய் விளங்குகிறான். இத்தகைய சிற்பங்களைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையல்லவா?

**பிரமியத்தில்**

தாராபுரத்திற்கு அருகில் பிரமியம் என்ற தலம் உள்ளது. இதனைப் பல்லவ னீச்சுரம் எனக் கல்வெட்டுக் கூறுகிறது. இறைவன் வலஞ்சுழிநாதர். அமராவதிக் கரையில் கட்டப்பட்டிருந்த இக்கோவிலும் இடிபட்டுக் கிடக்கிறது. வேடன், குறத்தி, செங்கோட்டு வேலவர் உருவங்கள் மிக அருமையானவை. கஜலட்சுமியை உருவாக்கிய சிற்பியின் கைவண்ணம் காண்பவர் கண்களை நிலை கொள்ளச் செய்கிறது. நிற்கின்ற தூண்கள் நரசிம்மத்துடன் கூடிய பல்லவர் கலைப்பாங்கினைக் காட்டுகின்றன. கொங்குநாட்டின் சிற்பங்களைப் பற்றி விரிவாக ஆராய வேண்டும்.

**பல இடங்களில்**

திருச்செங்கோட்டில் குமரகுருபரர் வரலாற்றை நினைவூட்டும் வகையில் சிங்கத்தின்மேல் குமரகுருபரர் எழுந்தருளியுள்ள சிற்பமும், அழகர்மலை, தாடிக்கொம்பு, பெரியபாளையம் ஆகிய இடங்களில் உள்ள சிற்பங்களும், சேவூர் சிற்பங்களும் அதற்கண்மையில் உள்ள மொக்கணீச்சுரத்தின் பழைய கோவில் தூண்களின் அருமை மிகு வேலைப்பாடுகளும் சிற்பக்கலையின் சிறப்பினை எடுத்துக் கூறுவன. (மொக்கணீசுவரம் மாணிக்கவாசகரால் திருவாசகத்தில்,

''மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி,
சொக்கதாகக் காட்டிய தொன்மையும்...''

எனப் போற்றப்படுவது, அதுபோல அவிநாசியும், மாணிக்கவாசகரால் 'அவிநாசியப்பா, பாண்டி வெள்ளமே' என வாழ்த்தப்படும் திருத்தலம்). அவிநாசியில் சைவக்குரவராகிய சுந்தரர், பதிகம்பாடி முதலைவாய்ப் பிள்ளையை வரவழைத்தார். அச்செய்தியை நினைவுறுத்தும் வகையில் முதலைவாயிலிருந்து பிள்ளையை வரவழைப்பது போன்ற புடைப்புச் சிற்பம் முன்புள்ள விளக்குத் தூணில் அமைந்திருக்கிறது. 'உரைப்பார் உரையுகந்து...... என்னும் தேவாரப்பாடல் இதற்குச் சான்றாக விளங்குகிறது.

**பேரூரில்**

கொங்குநாட்டுச் சிற்பங்களில் மிகச் சிறப்பு வாய்ந்தவை பேரூர்ச் சிற்பங்கள். 'திருவான் பட்டியுடையார்' எனக் கல்வெட்டுக்களால் சிறப்பிக்கப் பெறும் அருள்மிகு பட்டிப் பெருமான் திருக்கோயிலில் சிற்பத்திறன் மிக்க மண்டபம் இருக்கிறது. இம் மண்டபத்தில் பன்னிரண்டு தூண்கள் சிற்பக்கலை கவினும் தூண்கள். மண்டபத்தினுள் கூத்தப்பெருமான் எழுந்தருளியுள்ளார். பட்டிப்பெருமான் திருக்கோயில் கோபுரவாயிலில் நுழைகின்றோம், இடப்பக்கமும் வலப்பக்கமும் வரிசையில் உள்ள தூண்களைக் காண்கின்றோம். பாண்டியன், பேரூர்க் காஞ்சிவாய் நிலங்கடந்த நெடிமுடியண்ணலுக்கு குன்றமன்னதோர் கோவிலமைத்தான். அக்கோவில் சிதைவுக்குப் பிறகு எஞ்சிய தூண்கள் இவை. இவற்றில் திருமால் நெறிக்குரிய சிற்பங்களைக் காண முடிகின்றது. இத்தூண்களில் இராமாயணக் காட்சிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்று அனுமன் கடல்தாவி இலங்கை சென்றபோது இடையே சிங்கிகை என்ற அரக்கி அனுமனை விழுங்கினாள். அவள் வயிற்றைக் கீறி அனுமன் வெளிவந்த அற்புதக் காட்சியை சிற்பி வடித்திருக்கிறார் சிங்கிகை மகர மீன் வடிவில் இருந்தாள் என்று வால்மீகி இராமாயணத்தில் வருகின்றது. இதுபோன்று பல மொழியும் கலையும் கற்ற சிற்பிகளின் படைப்புக்கள் பலப்பல. மண்டபத்திற்கு உள்ளே செல்வோம்.

இங்கு கூத்தப்பெருமான் ஆடுகின்றார். அவரது ஆடலைப் பட்டி முனியும், கோமுனியும் தவம் செய்து கண்டார்கள். கோமுனி என்பதற்கேற்ப மாட்டின்

தலையுடன் வடித்துள்ள சிற்பத்தினைக் காண்கின்றோம். இங்கு சுந்தரர் போற்றி வழிபட்டார். இப்பெருமான் காட்சி அவர் மனம்விட்டு அகலவில்லை. தில்லைக் கூத்தன் காட்சியை அப்பரடிகள் கண்டு 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே' என்று கசிந்துருகுகிறார். ஆனால் சுந்தரரோ தில்லைக் கூத்தரைக் காணும் போதும், பேரூர்க் கூத்தர் கோலம் தம்மைக் கவர்ந்தது என்று பேரூர்ப் பெருமானைப் 'புலியூர் சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே' என்று வியக்கும் நிலையில் ஐம்பொன்னால் ஆன அற்புதக் கூத்தனது உருவத்தைச் சிற்பி வார்த்திருக்கிறார். இதன் கலையழகு எடுத்துக்கூறும் தரத்ததன்று; கண்டு மகிழ வேண்டியதாகும்.


தூண்களில் முதலாவதாகத் தோன்றுவது யாளி சிற்பங்கள், போர் வீரர் சிற்பங்கள் திறன் மிக்க வேலைப்பாடுடையன. யானையுரி போர்த்த சிவன் சிற்பம், மிகமிக அருமையான வேலைப்பாடுடையது. மெல்லிய யானைத்தோலாகச் செதுக்கி உள்ளான் கலைஞன். விரல் நகங்கள் எடுத்துவிடப்பட்டுள்ளன. ஏன்? நரம்புத் தாரைகளும்கூடச் சிலையில் வடித்திருப்பது நுண்மான் நுழைபுலச் சிறப்பைக் காட்டுகிறது. அடுத்து விளங்கும் சிற்பம் ஊர்த்துவ தாண்டவம். இதில் எவ்வெவ் வகையில் சிற்பியின் சிற்றுளி செயல்பட்டிருக்கிறது என்பதை நோக்குந்தோறும் நமது முன்னோர்களது கலைத்திறனை வியக்கின்றோம். நம்நாட்டில் இவர்கள் இருந் திருக்கிறார்கள் எனப் பெருமையடைகின்றோம். எதிரில் ஆலங்காட்டுக் காளியின் திருவுருவம். ஆடலில் சளைக்காத அன்னை, ஆடமுடியாத காதின் குழையைக் காலால் தொடும் பெருமானது கூத்துக்கு நாணுகின்றாள். இச்சிற்பத்தில் ஒருபுறம் நோக்கினால் நாணத்தின் குறிப்பும், இன்னொருபுறம் வெகுளியின் குறிப்பும் வெளிப்பட அமைந்திருக்கும் முகபாவத்தை என்னென்று வியப்பது! இப்படியே பன்னிரு தூண் சிற்பங்களும் அள்ளிக்கொள்ளும் பேரழகில் உலகில் எல்லாப் பகுதியிலும் உள்ள கலையுணர்வுடையோரை ஈடுபடச் செய்கிறது. இவையன்றி தூண்களின் எல்லாப் பக்கங்களிலும் சிற்பத் திறன்கள், வரலாற்றுச் செறிவுகள், அற்புதக் கதைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இன்னும் ஐம்பொன்னா லான செப்புத் திருவுருவங்கள் சிற்பத் திறன்களனைத்தும் பற்றி எடுத்துக்கூற இயலவில்லை.

**சிங்கரநல்லூரில்**

கோவையையடுத்த சிங்காநல்லூரில் எழுந்தருளியிருக்கும் உலகளந்த பெருமாள் திருவுருவம் மிகப் பழமையானது; பேரழகு வாய்ந்தது என்பதை மட்டும் கூற முடிகிறது. மரத்தால் ஆகிய சிற்பங்கள் பல, தேர்களிலும் காணலாம். பேரூரில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் செய்த பழைய தேர் ஒன்று சிதைந்து அதன் அருமையறியாது நின்றது. கொங்குநாட்டு வரலாற்றுப் பேரறிஞர் திரு. கோவை கிழார் அவர்கள் விருப்பப்படி அத்தேரினது சிற்பங்களைப் பிரித் தெடுத்தோம். இலக்கியப் பெருமைகளை உள்ளடக்கிய பல்வேறு சிற்பங்கள் கிடைத்தன. அவற்றுள் சில மிக அருமையானவை, இராமன் முடி சூடுதல். அதில் கம்பர் கூறும் 'அரியணை அனுமன் தாங்க .....' என்னும் பாடலில் காணும் பாத்திரங்கள் அனைத்தையும் உரியமுறையில் அழகாக அமைத்த சிற்பியின் திறம் வியத்தற்குரியது. அதுபோல பிரமன் ஆடல், கலைமகள் ஆடலாதியன அரிய சிற்பங்களாகும்.

இன்னும் வெள்ளிங்கிரியை அடுத்துள்ள முட்டத்துவாளியம்மன் திருவுருவம் கல்லால் ஆயது. அதில் முன்னழகும், பின்னழகும் நுண்ணிய வேலைப்பாடும் சிற்பத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இவை மட்டுமா? கொங்குநாட்டு நடுகற்கள், சிற்பங்களுடன் கூடியவை. பல இடங்களில் நடுகற்களில் எழுத்துக்கள் மட்டுமே இருக்கும். கோவில்பாளையம் கவையகாளியம்மன் கோவில் பழமையானது. அங்கு சென்றிருந்தபோது ஒரு மூலையில் இருந்த சிற்பம் எமக்குக் கலிங்கத்துப் பரணிப் பாடலை நினைவுக்குக் கொண்டு வந்தது. அப்பாடல் 'அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அறியுமாலோ; அரிந்தங்கே அணங்கின் கைக்கொடுப்பதாலோ' என்பது. இக்கருத்துப் பொதிய சிற்பி, கழுத்தில் வாள் பூட்டிஅரியும் நிலையில் வடித்திருக்கின்றான். கொங்கு நாட்டில் கண்ணப்பர் சிலையும், கண்ணனது காளிங்க நடனத்தில் கையில் வெண்ணையுடன் விளங்கும் காட்சியும் மிகுதியாக உள்ளன. ஏனெனில் கொங்கு நாடு மலை சார்ந்த நாடாக உள்ளது. எனவே, மலைவாழ் வேடுவரும் காடுவாழ் ஆயரும் மிகுந்திருத்தலால் இவ்வாறமைந்திருக்கலாம். விமானங்களில் வடித்துள்ள கதைகள், மிகுந்த கலைத்திறனுடன் விளங்குகின்றன. இச் சிற்பக்கலை வளர வேண்டும். பழைய சிற்பங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகங்கள் நமது முன்னோர்கள் கண்ட கலைத்திறத்தைப் பேணிவளர்க்க முற்படவேண்டும். அதற்கான பாடங்களை வகுத்துக் கலைத்துறையை வளர்ப்பது நமது பண்பாட்டுக்கும் நாகரிகத்திற்கும் புத்துயிர் ஊட்டுவதாகும். வளர்க சிற்பக்கலை.



கோயம்புத்தூர் சிறிய வானொலி நிலையமாக இருப்பினும் "புதுமை" *(Innovate)* நிகழ்ச்சிகளுக்கென வழங்கப்படும் அனைத்திந்தியப் பரிசினை முதல் முறையாகப் பெற்றுள்ளது. அதுவும் அப்பரிசு அறிவிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே.

# *கொங்குநாட்டு வழிபாட்டு முறைகள்

தவத்திரு சுந்தர சுவாமிகள் அவர்கள்
கௌமார மடாலயம், சிரவணம்பட்டி.

கொங்கு நாட்டில் பாடல் பெற்ற சிவத் தலங்கள் ஏழு. பாடல் பெறுமல் வரலாற்றுச் சிறப்புடன் உள்ள கோவில்கள் பல. சேவூர்ச் சிவன் கோவில், திருமுருகன் பூண்டியிலுள்ள, மாதவி வளம், அன்னூரில் சேரமன்னனுல் திருப் பணி செய்யப் பெற்ற மன்னீஸ்வரராலயம், சர்க்கார் சாமக்குளம், என்னும் கோவில் பாளையத்தில் யமதருமனுல் எழுந்தருளச் செய்யப் பெற்ற கலாகாலேசுவரர் கோயில், அவ்பூந்துறையிலுள்ள புட்பவன நாதர் கோயில், காடையூர் காடேஸ்வரர் கோயில், மற்றும் எழுமாத்தூர், காங்கேயம், சேலம், பாரியூர், கூகலூர் முதலாகப் பல இடங்களிலும் சிவாலயங்கள் உள்ளன.

சிவபெருமானை வேல் வடிவில் வைத்து வழிபடும் முறை சிறப்பாகக் கொங்கு நாட்டில் மட்டுமே உள்ளது.

''திருவருட் சக்தி வடிவான வேல் படை''

என்ற வேல் அலங்காரப் பாடலின்படி கொங்கு நாட்டில் பல ஊர்களில் பரமசிவன் கோயில் என வழங்கும் கோயில்களில், மூலத் தானத்தில் ஐந்து வேல்களையே அமைத்துள்ளனர். பூரண்டாம் பாளையத்தில் வேல் வடிவம் அமைந்துள்ள சிவன் கோயில் மிகவும் பிரசித்தமானது. தோல் நோயுடைய பலர், மடைப் பள்ளி திரு நீறு பெற்று நோய் நீங்கப் பெற்றுச் செல்கின்றனர். விஷக்கடி, காணுக்கடி, நீங்க நாளும் பலர் வந்தும், சிலர் சிலநாள் தங்கியும் குணம் பெற்றுச் செல்கிருர்கள். இது போலவே பல்லவராயன் பாளையத்தில் வேல் வழிபாடுள்ள பரமசிவன் கோவிலிலும் பலர் வந்து வழிபட்டும் தங்கி வழிபட்டும் செல்கின்றனர். கப்பாங்கரை என்னும் கற்பிளந்தான் கரைப் பரமசிவன் கோவிலிலும், பச்சா பாளையம் பரமசிவன் கோவிலிலும் இப்படி வழிபட்டு நலம் பெறுகின்றனர். நஞ்சே கவுண்டன்புதூரில் உள்ள சிவன் கோவிலில் வாக்குக் கேட்டல்

*31—8—77-ல் ஒலிபரப்பாயிற்று.

என்ற வகையில், பூசாரியிடம் திங்கட்கிழமை தோறும் மக்கள் வந்து செல்கின்றனர். வேலைச் சிவனுகக் கொண்டு விளங்கும் சிவன் கோவில் அனைத்திலும், கொங்கு வேளாளர்கள்தாம் பூசை செய்கின்றனர்.

கொங்கு வேளாளரிலும் குறிப்பிட்ட கூட்டத்தார் மட்டுமே பரமசிவன் கோவிலில் வாய் கட்டி அதாவது பூசை செய்யும்போது பூசாரி அய்யன் என்னும் கவுண்டர் நீளமான காவித் துணியால், தலைக்கு உருமாலை கட்டி அதே துணியால் வாயையும் கட்டிக் கொண்டு பூசை செய்கிறுர்கள். பூரண்டாம்பாளையம் சிவன் கோவில் பூசை மட்டும் இதற்கு விதி விலக்கு.

பரமசிவன் கோவில் அனைத்திலும் சிவராத்திரிதான் பெரிய விழா. சிவராத்திரிக்குப் பலநாள் முன்பே வேல்களையும் வாள்களையும் காவடிகளையும் எடுத்துக் கொண்டு "படி விளையாடுதல்" எனச் சுற்றிலும் உள்ள ஊர்களுக்குப் பூசாரி அய்யன் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் பக்தர்களும் கடலைபயிறு அவரை துவரை ஆகியவற்றைப் பெற்றுவந்து பெரிய அளவில் சிவராத்திரியன்று சுண்டல் போடுவார்கள். அதனைப் "பள்ளையம்" என வழங்குவர். சிவராத்திரியிலும் படி விளையாடும் போதும், சுவாமியாட்டுதலும் வாக்குச் சொல்லுதலும் சிறப்பாக இருக்கும்.

ஸ்ரீரங்கத்தின் அமைப்பில் பெருமாள் கோவிலும் இங்கு உண்டு. மற்ற நாட்டில் இல்லாத வகையில் சிவலிங்க வடிவில் பல கோவில்களில் பெருமாள் உண்டு. வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்தவை காரமடை, பாலமலை, மொண்டிபாளையம் ஆகிய கோவில்களாகும். காரமடையில் உள்ள மூலவர் அரங்கநாதர் சிவலிங்க வடிவில் காட்சி தருகிறுர். காரமடையில் நடைபெறும் மாசிமகம் தேர்த்திருவிழா கொங்கு நாட்டில் மிகச் சிறப்பானது.

கோவிலில் வைணவ பட்டாச்சாரியர்கள் பூசை செய்வார்கள். தேர்த் திருவிழாவின்போது பல்லாயிரம் பக்தர்கள் தோலினுல் செய்த பைகளில் தண்ணீர் எடுத்து ஆடிக் கொண்டு வந்து அரங்கநாதருக்குத் தீர்த்தமாக விடுவார்கள். அதற்குத் 'தண்ணீர் சேவை' எனப் பெயர்.

> "சினைவழி அடிமைப்பக்திதோய்
> தண்ணீர்ச் சேவையர் ஆட்டயர்ந்தெங்கும்
> நனைவழி காரமடை மருவு
> அரங்கநாதனே சீதாமணியே"

என்பது காரமடை மாலை.

தேரில் பெருமான் எழுந்தருளும்போது பல்லாயிரம் பக்தர்கள் தீப்பந்தங்களை எடுத்துக் கொண்டு, 'கோவிந்தா பராக்கு, கோவிந்தா' என்று கூறிக் கொண்டு ஆடுவார்கள். கொடியேற்றம் முதல் ஏழு நாட்கள், தாசர்கள் ஊரிலும் தீப்பந்தம் எடுத்துக் கொண்டு, சங்கு ஊதியபடி ஆடுவார்கள். இதற்குப் 'பந்த சேவை' என்று பெயர்.

> "கோடணை பெறக் கோவிந்தா பராக்கு,
> கோவிந்தா எனும் ஒலி துறக்க
> நாடணை காரைமடை மருவு
> அரங்கநாதனே சீதாமணியே"

என்பது காரமடை மாலை.

பந்த சேவையின்போது தாசர்களுக்கு வாழைப்பழமும் கொடுப்பார்கள். அதற்குக் 'கவாளம்' கொடுத்தல் என்று பெயர். பல்லாயிரம் மக்கள் தாசர் களுக்குக் கவாளம் கொடுக்கும் காட்சியும் பந்தசேவையும், தண்ணீர் சேவையும், காரைமடைத் தலத்துக்குரிய சிறப்பு வழிபாடாகும்.

மொண்டிபாளையம் சீனிவாசப் பெருமாள் கோவிலில் தைத் திங்கள் புனர்ப்பூச நட்சத்திரத்தில் தேர்த் திருவிழாவாக இருந்தாலும், புரட்டாசி மாதம் ஐந்து சனிக்கிழமைகளில்தான் பக்தர்கள் திரண்டு வந்து வழிபாடு செய்வார்கள். பெருமாள் வீதியில் உலா செய்வதை 'மெரவணை' என்பர். மெரவணை செய் வதற்காகப் பல்லாயிரம் பேர் வேண்டிக்கொண்டிருப்பர். பெருமாள், மாடவீதியில் தொடர்ந்து உலா வந்து கொண்டே இருப்பர். பிரார்த்தனைக்காரர்கள் வந்து, அதற்குரிய தொகை கட்டிவிட்டு வேலினைக் கையிலே பெற்றுக் கொண்டு வரு வார்கள். ஐந்து வாரமும், பெருமாள், பிரார்த்தனைக்காரர்களுக்காக மெரவணை வந்து கொண்டே இருப்பர்.

கொங்கு நாட்டில் மலைக்கோவில்களாக முருகன் கோவில்கள் பல உள்ளன. சென்னிமலை முருகன் கோவிலின் நினைவாகப் பல ஊர்களில் சென்னியாண்டவர் கோவில்தான் உள்ளது. இவற்றுக்குக் கொங்குவேளாளர்கள்தாம் பூசாரிகள். இங்கு தைப்பூசம்தான் பெருவிழா. கருமத்தம்பட்டியை அடுத்த விராலிக்காடு சென்னியாண்டவர் கோவிலில் மட்டும், அண்மைக் காலமாக சிவாசாரியர் பூசை நடைபெறுகிறது.

கொங்கு வேளாளர்களின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் குல தெய்வம் உண்டு. கோவில்பாளையம் கவைய காளியம்மன், கொங்குவேளாளர்களில் சில கூட்டத்தாருக்கும், நாயுடு, செட்டியார், கோனர் முதலியவர்களில் சிலருக்கும் குல தெய்வம் ஆகும்.

செல்லாண்டியம்மன், பெரிய நாச்சியம்மன், தேவாத்தாள், தங்காத்தாள், கரிய காளியம்மன், ராஜா கோவில் என்ற பெயர்களினல் கொங்கு வேளாளர் களின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் குல தெய்வம் உண்டு. கூட்டத்தின் முதல்வர் களை, 'வீரமாச்சி', 'வீரமாஸ்தி', 'வீரமாசதி' என்ற பெயரால் குலதெய்வமாக வழிபடுவர். குலதெய்வக் கோவில்களில் அந்தந்தக் கூட்டத்தாரே வழிபடுவர். சில கோவில்களில் பண்டாரங்களும் வழிபடுவர். இதில் நோன்பு சாட்டினல், அந்தந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் வந்து, பொங்கலிட்டு, மாவிளக்கு எடுத்து வழிபடுவர்.

நாயுடுமார்களில் ஒவ்வொரு கோத்திரத்தார்க்கும் குல தெய்வம் உண்டு. மாடுகட்டிப்பாளையத்திலுள்ள ரங்கம்மாள் கோவிலும், மற்றும், பேரம்மாள், சின்னம்மாள், போலம்மாள், ஏண்டம்மாள், சித்தம்மாள் ஆகிய அம்மன் கோவில் களும் குலதெய்வக் கோவில்களாகும். இங்கு பௌர்ணமிதோறும் விழா எடுப்பர். கார்த்திகைப் பௌர்ணமியில் ஆண்டுவிழாவும் கல்யாண உற்சவமும் நடைபெறும்.

கொற்றவையாகிய துர்க்கைக்கோவில்களிலும், மாரியம்மன் கோவில்களி லும், தருமராசா கோவில்களிலும் திருவிழா நாட்களில் தீக்குண்டம் இறங்குவர். தீச்சட்டி எடுப்பர். இது மிகச் சிறப்பு. 'கம்பம் சுற்றிப் பூச் சட்டி எடுத்தல்' என்னும் தீச்சட்டி எடுத்து ஆடுதல், கொங்கு நாட்டில் மட்டும் உள்ள ஒன்று.

தேவாங்க செட்டியார்களின் குலதெய்வமாகிய சவுடம்மன் கோவில்களில் அவர்கள் இனத்தவரே, குருவாகவும் பூசாரியாகவும் இருப்பர். நோன்பின் போதே சாட்டை போட்டுக் கொண்டும், வாள் வீசிக் கொண்டும், அம்மனை ஆவாரஞ் செடியின் கீழிருந்து அழைத்து வந்து வழிபடுவர்.

தேவமார்கள் கண்ணமா, இருளப்பன், முனியாண்டி, மீனுட்சி, உமா மகேசுவரர் முதலான தெய்வங்களைக் குல தெய்வமாகக் கொண்டு அவர்களே பூசை செய்து விழா எடுத்து வழிபடுவர்.

கொங்கு நாட்டுச் செங்குந்த முதலியார்கள் காமாட்சியம்மனைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள். திருவிழா சமயத்தில் அலகு குத்தி, தேர் இழுத்து வழிபாடியற்றுவர்.

அரிசனங்கள் தங்கள் குல தெய்வமாகிய 'பட்டத்தரசியை' 'பட்டைத் தலைச்சி அம்மன்' என்ற பெயருடன் வழிபாடு செய்வர்.

கிராமக் கோவில்களில் பண்டாரங்கள் பூசை செய்வார்கள். கிராமங்களில் உள்ள பெருமாள் கோவிலில் 'சாத்தாண்டி' என்னும் வைணவர்கள் பூசை செய்வர். இவை எல்லாம் கொங்கு நாட்டில் மட்டும் உள்ள வழிபாட்டு முறைகளாகும்.

பெரிய சிவாலயங்களிலும், முருகன் கோவில்களிலும், அம்மன் கோவில்களிலும், சிவாசாரியர்களும், பெருமாள் கோவில்களில் பட்டாச்சாரியார்களும், மற்ற நாட்டில் நடைபெறும் முறையில் ஆகம முறைப்படியும், பாஞ்ச ராத்திர முறைப்படியும், வைகானச முறைப்படியும் வழிபாடு செய்வர்.

வேதியர்கள் செய்யும் வைதீக வழிபாடும் சில கோவில்களில் உண்டு.

---

***ஜூன், 1977-ல், அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கை விளக்கத்தினை, வானொலி நிலையங்களின் ஒலிபரப்பு வாயிலாக வெளியிட்டன. இது இந்திய வானொலி வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றே சொல்லவேண்டும்.***

---

# *கொங்குநாட்டு ஊர்ப் பெயர்கள்

**புலவர் ஐ. இராமசாமி**
*தமிழாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, ஆலாந்துறை.*

வடக்கே தலைமலை, தெற்கே பழனி, கிழக்கே குளித்தலை, மேற்கே வெள்ளிமலை இவற்றின் இடைப்பட்ட நாடே கொங்கு நாடு. இது மேற்கு மலைத் தொடர்களின் கீழ் உள்ளது. ''நாடும் நகரமும் நளிமலை முட்டமும்'' எனப் பெருங்கதையில் கூறப் பெற்றவாறு இந்நாட்டில் முட்டானதும் மூலை யானவையுமான நிலப்பகுதிகள் மிகுந்துள்ளன. பேரூர் முட்டத்தின் கல் வெட்டுக்களின்படி, அப்பேரூர்க்கு மேற்கே மூலைநாடு இருந்தது. நாட்டின் மேல் பகுதியில் குன்றுகள் மிக்குள்ளன. சிறிதும் பெரிதுமான மலைகட்கு, இரும் பொறை, எனப்பெயருண்டு. சிறுமுகைக்குக் கிழக்கே 'இரும் பொறை' என்ற ஊர் உள்ளது. சேலமாநாட்டிலும் குன்றுகள் உள்ளன. சென்னிமலை, சிவமலை, ஊதியூர்மலை, ஓதிமலை, கபிலமலை, என இம்மலைத்தலங்களில் தெய்வ மணம் கமழ்கின்றது. அருணகிரியார் போன்ற தெய்வப் புலவர்களால் பாடப் பெற்ற மலைத்தலங்களில் சில நாட்டின் தலைமையிடங்களாகவும் இருந்தன.

குறிஞ்சி, முல்லை, மருதம் என மூவகை நிலவளமும் பெற்ற நாடா தலின், ஆற்றங்கரைகளில், சரித காலத்துக்கும் முற்பட்ட பண்டை நாகரிக மக்கள் வாழ்ந்திருந்தனர். நாடெங்கிலும் முது மக்கள் தாழிகள், பானைகள் இவை கிடைக்கின்றன. சேலத்தின் எஃகு எகிப்து நாட்டின் பிரமிடுகளில் இருந்தன. கொங்கு நாட்டில் கிடைத்த வைரக் கற்கள் அக்காலம் மேல் நாட்டாரைக் கவர்ந்தன. இங்கே செல்வம் குவிந்தது. ரோமானியர் தங்க நாணயங்கள் ஆங்காங்குக் கிடைத்தன. இவை இக் கொங்கு நாட்டின் பழ மையும் பெருமையும் பற்றியனவாம்.

**மிகப் பழைய ஊர்கள்**

சங்க காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களிற் சில அக்கால வள்ளல்கள் வாழ்ந்த ஊர்களின் பெயர்களாக உள்ளன. கொழுமம், தகடூர், ஆய்குடி, பழனி, கொல்லிமலை என்பன. ஆனைமலைக்கு நன்னனூர் என்ற பெயர். அவை இருந்ததை அவ்வூர்க்கோயில் கல்வெட்டில் இப்பெயர் உள்ளது. சேரர்களோடு

*2—11—77ல் ஒலி பரப்பாயிற்று

தொடர்பு கொண்ட, அமரபுயங்க சதுர்வேதிமங்கலம், இரவிவர்ம சதுர்வேதி மங்கலம் என்ற பெயர்களும், பட்டத்து அரசியின் பெயரால் அருண்மொழி தேவி சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் பேரூர் முட்டத்துக் கல்வெட்டுக் களில் உண்டு. அம்மடி சதுர்வேதிமங்கலம் எனப் பேரூரிலும், உடைய பிராட்டி சதுர்வேதிமங்கலம் எனக் கொழிஞ்சிவாடியிலும், மூவேந்த சோழ சதுர்வேதி மங்கலம் என ஈரோட்டிலும் கல்வெட்டப் பெற்றுள்ளமை காண்க. சதுரர் என்ற அறிஞர், அந்தணர் ஆகியோருக்குத் தானமாக வழங்கிய ஊர்களின் தொகுதியே சதுர்வேதி மங்கலங்கள். ஈரோடு, காஞ்சிக் கோவில் நாட்டின் ஒரு துண்டாகக் கிழக்கே இருந்ததால் காஞ்சித் துண்டத்து ஈரோடு என அவ்வூர்க் கல்வெட்டில் காணக் கிடக்கின்றது.

பல்லவர் ஆண்ட காலம் முதலே, சதுர்வேதி மங்கலங்கள் பேசப்படு கின்றன. சதுர்வேதி மங்கலங்கள் அக்காலம் எந்தெந்த ஊர்களை அடக்கி யிருந்தன வென்ற செய்திகள் நமக்கு முழுக்கக் கிடைக்கவில்லை.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் மீகொங்கு எனத் தம் பதிகத்தில் குறிப்பதால் அவருக்கும் முன்பே மேல் கொங்கு என்ற பெயர் இருந்திருக்க வேண்டும். வடகொங்கு, மழகொங்கு என்ற பெயர்களும் உண்டு. அக்கால மன்னர்கள் தத்தம் ஆட்சி முறைக்கும் வசதிகளுக்கும் ஏற்ப நாட்டின் பகுதிகளை பல்வேறு பெயர்களால் வழங்கி வந்தனர். ஆதிபுரி, பிப்பிலாரண்யம் எனப் பேரூரையும் மாட்டூர், ரிஷபபுரி என்று சேவூரையும், தீங்கு நண்ணாத நணா என்று பவானி யையும், அழைத்தமை புராண மரபுகள் பற்றியேயாம். பல திருத்தலங்கள் பல பெயர்களால் அழைக்கப் பெற்றன. கொங்கு நாட்டின் தலைமையூர் 'கொங்கூர்' எனப்பெற்றது.

**கோட்டைகள், குறிச்சிகள், பேட்டைகள்**

அக்காலம் வாணிகச் சிறப்புப் பெற்றிருந்த கோட்டைப் பகுதிகள், கோட்டைக் காடுகளாகி விட்டன. கோட்டைகளின் அகழிகள், உள்நகர், புறநகர்களின் பகுதிகள் அண்மைக் காலத்தில் இயந்திரங்களின் வாய்ப்பட்டுச் சிக்கி அழிந்து போயின. ஆயினும் பெயர்கள் சில உண்டு. கோட்டையை அடுத்துள்ளவை பேட்டைகள் எனச் சோழன் பூர்வ பட்டையம் கூறும். கோட்டையில் அரசரும் வணிகரும், பேட்டையில் ஏனைய மக்களும் வாழ்ந் துள்ளனர். அரச காரியத்தினரான சாமந்தகரும், சிற்றரசரும் வாழ்ந்த குறிச்சிகள் பல இந்நாட்டில் உள்ளன.

குறிச்சிக் கோட்டை, அரவக் கோட்டை, கருடன் கோட்டை, இடைய கோட்டை, பழைய கோட்டை என்பனவும், கொக்கராயன் பேட்டை, நாமகிரிப் பேட்டை என்பனவும் அரவக் குறிச்சி, முடக் குறிச்சி, அங்கலக் குறிச்சி என் பனவும் நம் கொங்கு நாட்டனவே. கோட்யின் கரையில் இருந்த ஊர் கோட்டைக் கரையாயிருந்தது.

**நீர் நிலைகளுக்கு அடுத்தவையும், பிற பெயர் ஊர்களும்**

முடுக்கன் துறை, குள்ளன் துறை, ஓடந் துறை, ஆப்பக் கூடல், பூந் துறை, கோட்டைத் துறை, புக்குளம், குளத்தூர், உடையகுளம், வாழ்கரை, வெங்கரை, தாளிக்கரை கூடக்கரை, காவேரிபுரம் என்பன ஆறு-குளம் இவற்றின் கரையில் அமைந்தன. ஆறுகள் வளைந்து செல்லும் இடங்களில் நீர்

தேங்கியிருக்க அவற்றின் அருகே சதுப்பு நிலங்களில் இருந்த சிறுமுகை, சது முகை, பெருமுகை என்ற ஊர்களும், ஈரோடு, சித்தோடு, பேரோடு, வெள் ளோடு என்பனவும் நீர் ஓடைகளின் காரணமாக ஏற்பட்டவை. ஆற்றின் கரையைக் கடக்கும் இடங்களாகவும், பல இடங்கட்கும் குறுக்கு வழிகள் உள்ளனவுமான கூத்தம் பூண்டி, வேளாண் பூண்டி, திருமுருகன் பூண்டி அமரர் பூண்டி என்பனவும் உள.

அறச் செயல்கள் மல்கிய இடங்களும், தெய்வங்களும் தேவர்களும், தவத்தோரும் பள்ளி கொண்ட இடம் சிலவாம். வள்ளியறச்சாலை, பனையம் பள்ளி, அனுமன்பள்ளி, கஞ்சப்பள்ளி, செங்கைப்பள்ளி, தென்பள்ளி என்பன இத்தகையன. முல்லை நில வளம் மிகுந்து, ஆங்காங்கு அமைப்புகளுடன் கூடிய பாசறைகளைப் போன்ற இடம் பாடி, வாடி எனப்பட்டன போலும். அவை வெள்ளைப்பாடி, கரியாம்பாடி, கிழாப்பாடி, மாம்பாடி, கவுந்தப்பாடி, புங்கம் பாடி, தகடைப்பாடி, கன்னிவாடி, தும்பிவாடி, மணவாடி, வாழைவாடி என் பனவாம். இராமாபுரம், கோபாலபுரம் என்ற தெய்வமணம் கமழும் பதிகளும் மலையாண்டி பட்டணம், இராமபட்டணம் என்ற பட்டணங்களும், பெருமா நல்லூர், பொம்ம நல்லூர், சங்கிராம நல்லூர், சிங்கநல்லூர், முட்டத்து நல்லூர் என்ற நல்லூர்களும் நம் கொங்கில் மிகப்பழமை வாய்ந்த ஊர்களாகும். சீனுபுரம் என்பது சமணசமயப் பெரியார்கள் வாழ்ந்த இடம். நன்னூல் இயற்றிய பவணந்தியார் வாழ்ந்த இடம். குறுப்பு நாட்டில் அக்காலம் சமண் சமயம் மிக்கிருந்தது. துடுப்பதி, சீனுபுரம், வெள்ளோடு, அரசண்ணாமலை திங்களூர் என்பன சமண்சமயத் தீர்த்தங்கரர்களின் பெயர்களோடு தொடர் புடையவை.

**மங்கலங்கள்**

விஜயமங்கலம், விசயாபுரி-எனப்படும். சமண்சமயம் சிறந்த காலத்தே வீரகுமாரன் என்ற மன்னன் ஆண்ட இடம் விசயாபுரி பட்டணமாகும். வீர குமார நாடகத்தில் வரும் விசயாபுரி கோஷணம் (கோசலாபுரி) எனப்பட்டது. குருமந்தூர், மாக்கினுன் கோம்பை என்பனவும், வரலாற்றுச் சிறப்புடையன. சத்தியமங்கலம், சத்திய புத்திரரான - தாய்மை மிகும் - வாய்மொழிக்கோசர் பெயரால் அமைந்த தென்பர். மங்கலங்கள், மங்கை எனக்கூறப்படுவதும் உண்டு. குமரமங்கலம், குடிமங்கலம், தாரமங்கலம், பாண்டமங்கலம், தத்த மங்கலம் என்பனவும் பிறவுமாம். கோவைக்குக் கோமங்கை என்ற பெயரும் உண்டு.

**பாளையங்களும் பட்டிகளும், பிறவும்**

மதுரை அரசு நாளில் பாளையங்கள் வகுக்கப் பெற்றன. வள்ளல், செட்டிபிள்ளை யப்பன் மரபினன் கோபி என்பான் நிறுவியதே கோபி செட்டிப்பாளையம் எனப் பெறும். பட்டிகள் பல பிற்காலங்களால் காடுகளுக்கிடையே புதிதாகத் தோன்றியவையாம். இவை தோற்றியவன் பெயரால் அமைவன. பிற்காலம் பாளையங்கள் பற்பல இவ்வாறு தோன்றியுள்ளன. சிங்களாபுரம், சாமளாபுரம், வீரபாண்டி சோழமாதேவிக்கரை என்ற கிராமங்கள் அக்காலம் அரசமரபினர் பரம்பரையில் வந்த பெயர்கள்.

கொங்குமண்டல சதக ஊர்த்தொகை, சோழன்பூர்வபட்டையம் என் பவற்றோடு, பிற்காலம் அரசினர் கணக்கில் இருந்து இப்போது மறைந்து போனவற்றைக் குறிக்கும் சில ஆதாரங்களும், வேறு செப்புப் பட்டையம்

கல்வெட்டு முதலான பலவற்றுள்ளும் வேறு வேறு மறைந்து போன ஊர்களைப் பற்றிய குறிப்புகளும் உண்டு.

**பெயர் விளக்கத் தெரியாதவை**

அகரம், அருக்குளி, அலங்கியம், அந்தியூர், அரூர், ஈங்கூர், உடுப்பம், உழலை, உக்கிரம், உலகடம், ஓழலக்கோவில், கடத்தூர், கத்தேரி, களந்தை, கலிங்கியம், காகம், சம்பை, சிகசை, தளிகை, நவனி, நகலூர், நிரம்பை, நிகமம், பரளி, முளசை, மானத்தி மொட்டணம், வாங்கல் என்பனவற்றின் பெயர்கள் ஆராயத்தக்கனவாக உள்ளன. காரணம் தெரியவில்லை

**புத்தூர் முத்தூர் என்பன**

புத்தூர்கள் புதியன. முத்தூர்கள் பழையன. கோயன்முத்தூர், சுண்டைக்காயன் முத்தூர், குனிய முத்தூர் என்பன அருகருகேயுள்ளன. இவற்றுள் கோயன் என்பான் அக்காலம் தோற்றிய முத்தூர் பழையவூராகும். கோவன் கட்டியது புத்தூர். பழைய ஊர் ஒன்று இல்லாமல் அங்கு புத்தூர்கள் என்ற பெயரால் இவை ஏற்பட நியாயமில்லை. 'கோவன் புத்தூரான வீர கேரளம்' என்ற பேரூர்க் கல்வெட்டில் வரும் வீர கேரளம் வடக்கே உள்ளது. அதன் அருகே தோற்றுவிக்கப் பெற்றது புத்தூர். அது கோவன் என்ற இருளனுக்குத் தொடர்புடையது. தெற்கே கோயன் என்ற கோசன் ஒருவன் ஆதியில் தோற்றிய ஊர் கோயன் முத்தூராக இருக்க வேண்டும். கோயன் கட்டிய கோட்டையும் பேட்டையும் மீண்டும் மதுரை அரசினரால் ஆதரிக்கப் பெற்றும் இன்று இல்லையாயின. ஒய்சளர் கல்வெட்டு ஒன்றில் 'கோயத்தூர்' குறிக்கப் பெற்றதென்பர்.

**பாரியூர்**

வள்ளல் பாரியின் பெயருள்ள பாரியூர் கொங்கு நாட்டில் உள்ளது. இவ்வூரருகே சத்தியமங்கலம் உள்ளது. அருகே மிக உயர்ந்த மலைகளும், மலைகளை அடுத்துக் காடுகளில் அழிந்த கட்டடச் சிதைவுகளும், வட்டக்கல் சமாதிகளும் மிகுந்துள்ளன. கபிலர் கூறுமாறு, ''வான்கணற்றவன் மலையே வானத்து மீன்கணற்றவன் சுனையே'' என்பதுபோல ஏராளமான சுனைகளும் உள்ளன. உழவர் உழாது வருவன. நான்கு பயன்கள். மூங்கில் நெல், வள்ளிக்கிழங்கு, தேன், பலாப்பழம் இன்றுவரை மிகுந்து காணப்படுவன. இது சந்தன மரங்கட்குப் பெயர்போனமலை. மூவேந்தர்கள் முற்றுகையிட்டாலும் முற்ற இயலாத பெருமலைத் தொடர்களாகும். அன்றைய பெயர்கள் மறைந்தாலும் இன்றுவரை கபிலர் புறப்பாடலிற் கூறும் வளங்கட்குக் குறைவின்றியுள்ளது. இத்தொடரை பறம்பு எனக்கூறல் தகும். பாரியூரில் அப்பெயர்க் கல்வெட்டுகளும் உள்ளன. தெற்கேயுள்ள பிரான்மலையைக் கூறுகின்றார்களே யெனின், அஃது திருஞான சம்பந்த சுவாமிகளால் கொடுங்குன்றம் எனக் கூறப்பெற்றுள்ளமையாலும், இத்துணைச் சுனைகளும் வளமும் இன்றுவரை இல்லாமையாலும் ஆராய்ந்து தெளிய வேண்டிய தொன்றாக இருக்கிறது.


வெள்ளலூர், வள்ளலூர் என்றும் அன்னதான சிவபுரி என்றும் கல்வெட்டால் அறிகின்றோம். சங்க நாளைக்கு முன்பே சிறந்து விளங்கியது. ரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம். வஞ்சி, காஞ்சி என்ற புறத்திணைகள் பற்றிய காஞ்சிக்கோவில் வஞ்சிபாளையம், என்பனவும் காரமடை, புளியன்பட்டி

என வருபவை மரம் செடிகளின் பெயர்களுமாம். தொண்டைமான் புத்தூர் என்பது பல்லவர் காலத்துக்கும் முற்பட்டதாகலாம். இராயர்கள் காலத்தவை இராயபுரங்களாயின. பொழில் வாய்ச்சி எனக் கல்வெட்டில் வருகின்ற ஊர் பொள்ளாச்சியாயிற்று. உடுமலை முன்பு சக்கரகிரி துர்க்கம் எனப் பெற்றது. காங்கயம், உத்தம சீலத்துக் காங்கய மன்னர்களை நினைவூட்டுகிறது. படை திரும்பிய ஊர், திருப்பூர். படிகம் கிடைத்த இடம் படியூர். வயிரம் கிடைத்த இடம் வயிரமங்கலம். துடியன் நிறுவியவூர் துடியனூர். இவ்வாறே இருகூர் பல்லடம், சூலூர் போன்றவை இருளர் தோற்றுவித்தனவே. மிகவும் பெரிய வூரே பேரூர். பெருமை பொருந்தியவூரும் கூட, என்றறிக. தண்ட நாயக்கன் ஆண்ட கோட்டை தணுயக்கன் கோட்டையாம்.

கோயில் மிகுந்த கோவில்பாளையங்களும், பெரிய கோட்டை சூழ்ந்த பெரியகோட்டையும், கொங்கில் உளது. நம்பிபேரூர் என்பது நம்பியூராயிற்று. பாண்டவர் பாரதகாலத்சில் ஒருதிங்கள் தங்கியது திங்களூராம். தாராபுரம் இராசராசபுரமாகும். களந்தையின் பெயர் ஆதித்தேசுவரம். கவயன்புத்தூரே கோவில்பாளையம். சங்கிராமநல்லூர் என்பது, கொழுமம். கொங்கூரின் பெயர் ஜெயங்கொண்ட சோழநல்லூர். நடுவாச்சேரி செவளாபுரி எனப்படும். பெருமா நல்லூரைப் பழனி என்பர். கூவல் என்ற கிணற்றுவளம் நிறைந்தது கூகலூர். இழந்தகரை மேவியது இடிகரையாம். குரக்குத்தளி என்பது பெரியபாளையம்;

கோபியை அடுத்த சோழமாதேவிக்கரை, 'சோழமன்னரைதேவி' எனப் படும். மன்னரை என்பது மன்னர்களால் தானமாகக் கொடுக்கப்பெற்ற வளப்பம் மிக்க நன்செய்ப்பகுதி எனப்படும். இப்பெயர் பேரூர்க் கல்வெட்டுக்களிலும் உண்டு. நன்செய்ப் பகுதிகளில் மன்னரைகள் மிகுந்துள்ளனவென்பதைக் கல்வெட்டுக்கள் உரைக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு ஊருக்கும் அதன் பெயர்க்கும் காரண காரியங் களோடு விளக்கம் வேண்டுமெனில் கொங்குநாடு முழுவதும் சுற்றித் திரிந்து ஆங்காங்குக் கிடைக்கும் விளக்கங்களைச் சேகரித்து அவற்றை நூல்வடிவமாகச் செய்து வெளியிட்டாலல்லாமல் இத்தலைப்பு நமக்கு நிறைவு தராது. அறிஞர்கள் இதற்கு ஆவன செய்தருளுவார்களாக!






*WITH THE BEST COMPLIMENTS FROM*

**K ARUMUGAM**
**K MURUGESHAN**
Mg. PARTNERS

## MURUGESHAN ENTERPRISES

PROPRIETORS OF

THEATRE
Geethalaya

COIMBATORE 641 009 □ Phone 36266

# *கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் பவானி

**இரா. பூங்குன்றன் எம்.ஏ., அவர்கள்,**
பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை.

தனக்கெனத் தனியொரு வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டது கொங்கு நாடு. பண்டைய வரலாற்றுக் கலாசாரத்தினை இன்றுவரை காத்து வருவதும் கொங்குநாடுதான். இத்தகைய சிறப்பு வாய்ந்த கொங்குநாடு பண்டைக் காலத்தில் இருபத்தி நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்நாடுகளில் ஒன்றே வடகரை நாடு. பவானி ஆற்றின் வடகரையில் அமைந்திருப்பதால் வடகரை நாடு என்று பெயர் பெற்றது. இன்றைய பவானி வட்டத்தின் சமநிலப் பகுதி முழுவதும் 'வடகரை' நாட்டினுள் அடங்கியிருந்தது. இந்நாட்டின் தலைநகர் அந்தியூர். கொங்கு நாட்டின் வடபகுதியில் இருந்த காரணத்தால் 'வடகொங்கு நாட்டு வடகரை' என்று அழைக்கப்பட்டது. வடகரை நாட்டில் இருபத்து நான்கு ஊர்கள் இருந்தன. கொங்கு மண்டல சதகத்தில் ஊர்த்தொகைப் பாடலில், அவ்வூர்கள், தொகுத்துக் கூறப்படுகின்றன. அவற்றில் 'வானி' என்று கூறப்படுவதே இன்றைய பவானியாகும்.

'வானி' என்பது 'பவானி' ஆற்றின் பழம்பெயர். வானியாற்றின் பெயர், ஊருக்கும் ஏற்பட்டது. பிற்காலத்தில் ஆறும் ஊரும் பவானி என்றே பெயர் பெற்றுவிட்டன. வானியாறு காவிரியில் கலப்பதால் வானிகூடல் எனப் பெயர் பெற்று பவானிகூடல் என மருவி வழங்குகிறது. நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர் தேவாரத்தில் இவ்வூர் 'நணா' என்றே அழைக்கப்படுகின்றது. சங்க இலக்கியப் பதிற்றுப்பத்தில் கூறப்படும் 'நன்றா' என்ற மலை தற்போது பவானிக்கு அருகில் உள்ள ஊராட்சிக்கோட்டை மலையாகத்தான் இருக்கவேண்டும் என்றுகூறுவர். 'நன்றா' என்ற பெயர் திரிந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் 'நணா' என்று வழங்கியிருக்கவேண்டும்.

**புலவர் பாடலில் பவானி**

கேரளத்தில் உற்பத்தியாகி கதிரோன் உதிக்கும் கீழ்திசை நோக்கி ஓடி வந்து காவிரியில் கலக்கிறது பவானி ஆறு. பெருங்குன்றூர்க் கிழார் என்னும்

*22—3—78-ல் ஒலிபரப்பாயிற்று

சங்கப் புலவர், இளஞ்சேரல் இரும்பொறையின் திருமேனி மென்மைக்கும், தூய்மைக்கும், குளிர்ச்சிக்கும் இவ்வானியாற்றின் நீரை உவமையாகக் கூறினர்.

''புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசை தோன்றும்
சாந்து வருவானி நீரினும்
தீந்தண் சாயலன் மன்ற தானே''

திருஞானசம்பந்தர் பவானியைப் பற்றி பக்திச் சுவையும் இலக்கிய நயமும் கொண்ட பதிகத்தைப் பாடியுள்ளார்.

''பந்தார்விரல் மடவாள் பாகமா நாகம் பூண்டேறி தேறி
அந்தார் அரவணிந்த அம்மானிடம் போலும் அந்தண் சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக்கனிந்தே திருநணுவே''

என்பது அப்பாடல்

தொண்டை நாட்டுத் திருவண்ணுமலையைச் சேர்ந்த அருணகிரிநாதரும் பவானி பற்றி ஒரு திருப்புகழ்ப் பாடல் பாடியுள்ளார்.

''மலேமேவு மாயக்குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா
சிலேவேட சேவற் கொடியோனே
திருவானி கூடற் பெருமாளே''

என்பது அது.

பவானி கூடற் புராணம் என்ருெரு நூலும் உள்ளது. இந்நூலே இயற்றியவர், ஓராட்டுக்குப்பை செட்டிபாளேயம் வாசுதேவ முதலியார் ஆவார். இத்தலத்து அம்மன் பேரில் வேதநாயகிப் பிள்ளேத் தமிழ் என்ற ஒரு நூல் உள்ளது. பதிற்றுப்பத்தந்தாதி, மாலே, உலா, கலம்பகம் முதலிய பிரபந்தங்களும் இத்தலத்திற்கு உள்ளன. இவ்வூரில் வாழ்ந்த பாலபாரதி முத்துசாமி ஐயர் என்பவர் சதகம் ஒன்றும் தனிப்பாடல்கள் பலவும், கீர்த்தனேகளும் பாடியுள்ளார். இருபதாம் நூற்ருண்டில் கொங்கு நாட்டின் முதுபெரும் புலவராகத் திகழ்ந்த வே.ரா. தெய்வசிகாமணி கவுண்டர் அவர்களிடம் வேதநாயகி அம்மன் சதகமும், வேதநாயகி அம்மன் பதிகமும் இருந்தன. அவரே இத்தலத்தின் பெருமையெல்லாம் விளங்க 'வதரியாற்றுப்படை' என்ற நூல் இயற்றியுள்ளார்.

**பேரும் பெருமானும்**

இத்தலத்து இறைவனுக்கு சங்கமேசுவரர் என்று பெயர். அம்மனுக்கு வேதநாயகி என்று பெயர். கல்வெட்டுக்களில் இறைவன் பெயர்., 'நன்னுவுடையார்' என்றும், இறைவியின் பெயர் 'பண்ணுர் மொழியம்மன்' என்றும் குறிப்பிடப்படுவதைக் காணலாம். இரண்டு ஆறுகட்கு இடையில் இறைவன் ஆலயம் இருப்பதால் நட்டாற்றீசுவரன் என்றும் கூறுவர். ஒரு பழம்பாடல் 'வானி லிங்கேசுவரன்' என்று கூறுகின்றது. இத்தலத்தைத் 'திருமுக்கூடல்' என்றும் இக்கோயில் நிருவாகிகளேத் 'திருமுக்கூடல் தானத்தார்' என்றும் கல்வெட்டுக்கள்கூறும்.

### கலை வரலாறு

பவானி சங்கமேசுவரர் கோயில் அர்த்தமண்டபத்தின்முன் உள்ள இரண்டு துவாரபாலகர் சிலைகளும் பிற்காலப் பல்லவர் கலைப் பாணியிலும் முற்கால சோழர் கலைப்பாணியிலும் அமைந்தவை. கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் தந்தை, தேர்மாறன் காவிரியைக் கடந்து மழகொங்கத்தை அடிப்படுத்தினன்.

பின் திருப்பாண்டிக் கொடுமுடி சென்று பசுபதியை வணங்கி கங்க அரசன் மகளை மணம் செய்து கொண்டான். பிறகு கூடல், வஞ்சி, கோழி போன்ற நகரங்களின் மதில்களைப் புதுப்பித்தான் என்று வேள்விக் குடி செப்பேடு கூறும். கூடல், வஞ்சி, கோழி என்பவை முறையே பவானி, கரூர், உறையூர் என்ற ஊர்களைக் குறிக்கும். ஒரு சோழ மன்னனும் சில திருப்பணிகளைச் செய்தான். இந்தச் செய்தியைச் சோழன் பூர்வபட்டயம்கூறும்.

### கெட்டி முதலியார்களின் திருப்பணி

பூவாணிநாட்டு அமரகுந்தியினைத் தலைநகராகக் கொண்டு 15—17-ஆம் நூற்றுண்டுகளில் ஆட்சி செய்த கெட்டி முதலியார்கள் பவானியில் ஒரு கோட்டையைக் கட்டினர். வேதநாயகி அம்மன்கோயில் முன் மண்டபத்தைக் கட்டியவர் இம்முடிகெட்டி முதலியாரின் மனைவி சின்னம்மையார். சின்னம்மையார் சிறந்த தமிழ்ப் புலவருமாவார். சங்கமேசுவரர் கோயிலுக்குச் சுத்தத்திருமாளிகை முன்நிருத்த மண்டபம், சிகரம், பண்ணூர் மொழியம்மனுக்குக் கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், கோபுரம், மதில் உண்டாக்கி லிங்கம் பிரதிட்டைசெய்தவர் இம்முடிக்கெட்டி முதலியார்.

### ஓங்கி உலகளந்த உத்தமன் கோயில்

பவானி பதிகத்தில் ஞானசம்பந்தர்,

''பொய்யாமறை யானும், பூமி யளந்தானும் போற்ற மன்னிச்
செய்யார் எரியாம் உருவம் உறவிளங்கும் திருநிறைவே''

என்று பாடியுள்ளார். பாடலில் பூமியளந்தான் என்பது ஓங்கி உலகளந்த உத்தமனாகிய திருமாலையே குறிக்கும். இன்றும் ஒரு திருமால் கோயில் உள்ளது. இறைவனின் பெயர் ஆதிகேசவப் பெருமாள் என்பதாகும். தாயார் சௌந்தரவல்லி, அரங்க மண்டபத்தின் வடபால் உருக்குமணி சத்யபாமையுடன் வேணுகோபாலர் அழகிய திருக்கோலத்துடன் எழுந்தருளியுள்ளார். இது மைசூர் அரசர் ஒருவருடைய திருப்பணியாகும். மண்டபத் தூண்களில் உள்ள இராமாயணச் சிற்பங்கள் கண்டு மகிழத்தக்கன. குடந்தைய குல வெள்ளாளரில் வடகரை நாட்டிலே மரத்தூண் கோட்டை நல்லாறு கூத்தான் பூண்டியாரும், தெற்கு மணல் நாட்டில் கொடந்தையூர்க் காணியாட்சி அனுமந்தக் கவுண்டன் மகன் நாராயணக் கவுண்டரும் கி.பி. 1657-ஆம் ஆண்டு அழகிய பெருமாள் நாச்சியார், சௌந்தரவல்லி அம்மன் ஆகியோருக்கு கர்ப்பக்கிரகம், சிகரம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியன கட்டி வைத்தனர்.

### செப்புத் திருமேனிகள்

கி.பி. 13—14-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த செப்புச் சிலைகள் சில இன்றும் வழிபாட்டில் உள்ளன.

### சுல்தான் காலத்தில் பவானி

கொங்கு நாட்டைக் கைப்பற்றியபோது ஐதர்அலி இந்துக் கோயில்களை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் திப்புசுல்தான் 1784-ஆம் ஆண்டு பவானி கோயில் மானியத்தை நிறுத்திவிட்டான். 1790-இல் பவானி கோட்டை ஆங்கிலேயர் களால் தகர்க்கப்பட்டது. திப்புவுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் நடைபெற்ற கொங்குநாடு பற்றிய உரிமைப் போராட்டத்தில் பவானி சிறப்பிடம் பெற்றது. 1792-இல் பவானியை ஆங்கிலேயர் கைப் பற்றிக் கொண்டனர். 1799-இல் கொங்குநாடு இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு தென் பிரி விற்குத் திண்டுக்கல்லும், வடபிரிவிற்குப் பவானியும் தலைநகரங்களாக ஏற்படுத்தப்பட்டன. ஐந்தாண்டுகள் பவானி தலைநகராக இருந்தது.

### வெள்ளையர் திருப்பணி

கிழக்கிந்தியக் கம்பெனியார் பவானியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நாளில் வில்லியம் காரோ என்பவர் இங்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். அவர் வேதநாயகி அம்மன்மேல் அளவிலாப் பக்தி பூண்டு விளங்கினார். அவர் ஆங்கிலேயர் ஆதலின் கோயில் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அவர் கிழக்கு மதில் சுவரில் துளைகளைச்செய்து அதன்மூலம் அம்மனைத் தரிசித்து மகிழ்ந்தார். வேதநாயகியின் அடியாரானார். 1804-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ஆம் தேதியிட்டு ஒரு தந்தக்கட்டிலை அம்மனுக்குச் செய்தளித் தார். அதில் தன் கையொப்பத்தையும் இட்டுள்ளார். இன்றும் அந்தக்கட்டில் கோயிலில் உள்ளது.

### காலிங்கராயன் அணை

பவானி அருகில், பவானி ஆற்றின் குறுக்கே உறுதியான ஓர் அணைகட்டப் பட்டுள்ளது. இந்த அணை சுமார் 700 ஆண்டுகட்கு முன் கட்டப்பட்டது. அணை யிலிருந்து நீர் பாய்ச்ச ஒரு கால்வாயும் வெட்டப்பட்டது. கால்வாய் வெட்டி முடிக்க பதின்மூன்றாண்டுகள் பிடித்தன. கால்வாயின் நீளம் 56 கல். கால்வாயை யும் அணையையும் உருவாக்கியவன் காலிங்கராயன் என்னும் ஒப்பற்ற வள்ளலா வான். இவன் பாண்டியனிடம் மந்திரியாக இருந்தவன். அவன் பெயராலேயே அணையும் கால்வாயும் வழங்கப்படுகின்றன.

ஈராயிரம் ஆண்டு வரலாறு கொண்ட பவானி இன்றும் கொங்கு நாட் டவரின் புண்ணியத் தலமாகத் திகழ்கிறது. பவானியை 'இளைய காசி' என்று ஓர் அறிஞர் மிகவும் பொருத்தமாகவே குறிப்பிட்டார். அதன் சிறப்பினைப்போற்றுவது நம் அனைவரின் கடமையாகும்.

---

**நமது கோயம்புத்தூர் வானொலி நிலையம் 18-12-66ல் தொடங்கப்பெற்றது. அப்போது திருச்சி நிலைய நிகழ்ச்சிகளை அப்படியே அஞ்சல் செய்து வந்தது.**

---

# *கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் - வெள்ளலூர்

புலவர் செ. இராசு
ஈரோடு.

கோவை மாநகரின் தென்கிழக்கில் 8 கிலோ மீட்டர் தூரத்தில் நொய்ய லாற்றின் தென் கரையில் உள்ள சிற்றூர் வெள்ளலூர். அமைதி தவழும் கிராம மாக இன்று காட்சியளிக்கும் வெள்ளலூர், எத்தனையோ பண்டைய பெருமை களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**ஊரும் நாடும்**

வரலாற்றுச் சிறப்பு மிக்க கொங்குநாட்டில் 'மீகொங்கு' என இலக்கியங் களால் புகழ்பெற்ற மேல் கொங்கு நாட்டின் பிரிவான, வாயறைக்கா நாட்டின் பழம்பெரும் ஊர், வெள்ளலூர். சிலர் ஆறைநாட்டின் ஊர்த்தொகைப் பாடல் கூறும் வெள்ளைப்பதியே வெள்ளலூர்' என்பர். கல்வெட்டு, ''பேரூர்நாட்டு வெள்ளலூர்'' என்று கூறும். ('வெள்ளை என்ற இருளர் தலைவன் பெயரால் இவ்வூர் ஏற்பட்டது' என்பது சோழன் பூர்வ பட்டயச் செய்தியாகும்.)

**பல பெயர்கள்**

இவ்வூருக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கியுள்ளன. 'தென்னூர்', 'தென் னூர்ப்பாடி' என்ற பெயர்கள் நொய்யலாற்றின் தென்கரையில் இவ்வூர் அமைந் துள்ளதால் ஏற்பட்டன. பின்னர் தென்னூர்—தேனூர் என மாறி வழங்கியது. தேனூரில் உள்ளமையால் வெள்ளலூர்ச் சிவபெருமானுக்குத் தேனீஸ்வரர், தேனூராண்டார், தேனூர்ப் பதியுளார் என்ற பெயர்கள் ஏற்பட்டன. வெள்ள லூருக்கு, 'வள்ளலூர்', 'வெளிலூர்', 'அன்னதான சிவபுரி', 'அதிராசராசச் சதுர் வேதி மங்கலம்' 'விஸ்வேஸ்வரதேவ சதுர் வேதிமங்கலம்' என்றும் பெயர்கள் வழங்கின.

**அகழ்வாராய்ச்சியால்**

வெள்ளலூரில் சரித்திர காலத்திற்கு முற்பட்ட பெருங்கற்காலச் சின்னங் கள் பல கிடைத்துள்ளன. காடுகுட்டை என்ற இடத்தில் முதுமக்கள் தாழிகள் பல தோண்டி எடுக்கப்பட்டன. வட்டக்கல் சமாதிகளும், கல்லறைகளும்

*8-2-78ல் ஒலிபரப்பாயிற்று

செட்டிபாளையம்வரை பரவிக் கிடக்கின்றன. வெள்ளலூரில் நத்தமேடு, உப்பில்லியர் மேடு, சிவாலயத்தின் வடகிழக்கே ஆகிய இடங்களில் வண்ணம் பூசப்பட்ட வழவழப்பான கருப்பு சிவப்பு ஓடுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவ்வோடுகள் பல, சாதவாகனக் கலையோடு தொடர்புடையவை. தமிழகத்தில் வேறு எங்கும் கிடைக்காத அபூர்வ வேலைப்பாடுகள் கொண்டவை. இவ்வோடுகள் ஏறக்குறைய 2500 ஆண்டுகட்கு முன்னர் வெள்ளலூரில் உயர்ந்த நாகரிகமுடன் மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பதை நமக்குக் கூறுகின்றன. ஊரைச் சுற்றிலும் உள்ள மேடுகளில் பெரிய செங்கற்களும் கிடைக்கின்றன. முறையான அகழ்வாராய்ச்சிகள் பல இங்கு செய்யப் பெறுதல் வேண்டும்.

**வெளிநாட்டுடன் வணிகத் தொடர்பு**

200 ஆண்டுகட்குமுன் தமிழ்நாடு ரோம் நாட்டுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு கொண்டிருந்ததைச் சங்க இலக்கியங்களில் காணுகின்றோம். ரோம் நாட்டுக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகங்களில் வந்து தங்கின. மலைநாட்டைக் கடந்து பாலக்காட்டுக் கணவாய், போளுவாம்பட்டிக் கணவாய் வழியாக ரோம் வணிகர்கள் கொங்கு நாட்டுக்குள் வந்தனர். இப்பழம் பெரும் பாதையே பத்தாம் நூற்றுண்டில் ''இராசகேசரிப் பெருவழி'' என்று பெயரிட்டுச் சோழப் பெருவேந்தனுல் திருத்தி அமைத்துத் திருப்பணி செய்யப்பட்டது. சுண்டக்காமுத்தூர் அருகே இப்பெருவழியும் கல்வெட்டும்அண்மையில்கண்டுபிடிக்கப்பட்டன.

கொங்கு நாட்டுப் படியூர்ப் பகுதியில் கிடைத்த பெரில்ஸ் என்ற மணிக் கற்களை ரோமானியப் பெண்கள் பெரிதும் விரும்பினர். உயர்ந்த பார்வையும், நல்ல நீரோட்டமும் உடைய அவைகளை வாங்கவந்த ரோம் வணிகர்கள், கொங்கு நாட்டில் முட்டம், பேரூர், வெள்ளலூர்ப் பகுதிகளில் தங்கியிருந்தனர்.

**பிறநாட்டுக் காசுகள்**

இந்தியாவில் கிடைத்த ரோமானியக் காசுகளில் 80 கொங்கு நாட்டிலேயே கிடைத்துள்ளன. கலையமுத்தூர், அகிலாண்டபுரம், பூதிநத்தம், பேரூர், பொள்ளாச்சி, கரூர், வெள்ளலூர் போன்ற இடங்களில் கொங்கு நாட்டில் ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. வெள்ளலூரில் 1842-ஆம் ஆண்டு மே மாதம் 522 ரோமானியக் காசுகளும், 1931-ஆம் ஆண்டு சனவரியில் கூத்தாண்டிமேடை என்னுமிடத்தில் 121 ரோமானியக் காசுகளும் கிடைத்தன.

அவைகளில் பெரும்பான்மையான காசுகள் நல்ல தூய்மையான வெள்ளியாலும், சில காசுகள் மாற்றுயர்ந்த நல்ல தங்கத்தாலும் ஆனவை. அவை கி.மு. முதல் நூற்றுண்டு முதல், கி.பி. முதல் நூற்றுண்டு வரை ரோம் நாட்டை ஆண்ட அகஸ்டஸ், ட்ரூசஸ், ஜெர்மேனிக்கஸ், டைபீரியஸ், கேலிகுல்லா, கிளாடியஸ் போன்ற ரோம் அரசர்களின் காசுகளாகும். அக்காசுகளில் மிக அழகிய வேலைப்பாடுகளுடன் அரசனின் உருவம் பொறிக்கப் பெற்றிருக்கும். அரசனின் பெயரும் எழுதியிருக்கும். 4 குதிரைகள் பூட்டப் பெற்ற ரதம், வாலைத் தூக்கிப் பாயும் காளை, ஒரு கையில் ஈட்டியும் ஒரு கையில் பூ வேலை செய்த செங்கோலும் தாங்கிய மனிதன் ஆகிய உருவங்களை அக்காசுகளில் காணலாம்.

வெள்ளலூரில் இக்காசுகளுடன் 4 மோதிரங்களும், வேலைப்பாடுடைய 2 மணிகளும், அழகு மிக்க தங்கத் தாம்பாளம் ஒன்றும் கிடைத்தன. சிங்கம், குதிரை, ரோமானிய தெய்வம் ஆகியன பொறிக்கப்பெற்ற மூன்று கற்களும் கிடைத்தன. முத்திரையிடப் பெற்ற மௌரியர் காசுகளும், சாதவாகன அரசர் காசுகளும் இப்பகுதியில் கிடைத்திருக்கின்றன.

**அரசும் ஆட்சியும்**

கி.பி. 9, 10-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த சேர அரசர்களான கோக் கண்டன் ரவி, இரவி கோதை, கோக்கண்டன் வீரநாராயணன், அதிராஜராஜ தேவன் ஆகியோரின் பழந்தமிழ், வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இங்கு கிடைக் கின்றன. அக்கல்வெட்டொன்றில் சேர அரசன், சந்திராதித்ய குலதிலகன், சார்வ பூமன், என்று அழைக்கப்படுகின்ருன். சேரர்கட்குரியது சூரிய குலம். பாண்டியர்களோடு திருமணத் தொடர்பு கொண்ட காரணத்தால் சந்திர சூரியர் குலம் என்று சேரர் குலம் பெயர் பெறுகிறது. சேரன் ஒருவன் வரகுண பராந் தகன் என்ற சிறப்புப் பெயர் பெற்றதாக வெள்ளலூர்க் கல்வெட்டால் அறி கின்ரேம். வரகுணன் என்பது பாண்டியர் தொடர்பையும், பராந்தகன் என்பது சோழர் தொடர்பையும் நினைவூட்டுகிறது. கோயமுத்தூருக்கு வீரகேரள நல்லூர் என்று பெயரிட்டு இப்பகுதியில் ஆட்சி புரிந்த சேரர்களைப் பற்றிய பல வரலாற்றுச் செய்திகளை வெள்ளலூர்க் கல்வெட்டுக்கள் தருகின்றன.

விக்கிரம சோழன், வீரசோழன், இராசராசன் ஆகிய கொங்குச் சோழர் கல்வெட்டுக்களும் இங்கு இருக்கின்றன. விக்கிரம சோழன் கல்வெட்டொன்றில் -தான் இவ்வூர் 'பேரூர் நாட்டு வெள்ளலூரான அன்னதான சிவபுரி' என்று குறிக்கப் பெறுகிறது. சோழருடைய படை, வெள்ளலூரில் நிலையாகத் தங்கி யிருந்தது. அப்படையினரும் சேனாதிபதியும் திருப்புக்கொளியூர் அவிநாசிக்கு அர்த்தசாம பூசைக்கும், திருப்பணிக்கும் பொன் கொடுத்தனர்.

'சோழ மண்டலத்தில் பாண்டியகுலாசனி வளநாட்டில் தஞ்சாவூர்க் கூற்றத்தைச் சேர்ந்த கண்ணங் குடையான் உடைய நாயகன்' என்பவன் 'வெள்ள லூர் ஆண்டார் தேனூராண்டார்க்கு 5 கழஞ்சு பொன் கொடுத்து' திருப்பள்ளி எழுச்சியின்போது மாதம் 30 நாட்களும் 20 விளக்கு எரிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தான். ''30 வட்டமும் வழுவாமே விழுநாள் படாமல் சந்திர சூரியர் உள்ளவரை விளக்கெரிய வேண்டும்' என்று தன் ஆவலைத் தெரிவிக்கின் ருன். அதனைச் செய்வதாக இக்கோயில் காணியுடைய சிவபிராமணரில் இரா சாதித்தன் கண்டன் மார்த்தாண்டன், சேகரன் உடைய பிள்ளையான வீரசோழ பட்டன் இருவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

இராசராச தேவனின் நான்காம் ஆட்சியாண்டில் வாயறைக்கா நாட்டு விநய பள்ளியிலிருக்கும் வியாபாரி மூக்கன் மனைக்கிழத்தி செட்டி என்பவள் ஆளு டையார் தேனூர்ப் பதியுளார்க்குச் சந்தியா தீபம் எரிக்க ஒரு அச்சு அளித்தாள். வீரசோழன் காலத்தில் நற்கதியின் பொருட்டுக் கோவன் அரசன் என்பவன் கதவு ஒன்றைத் தானம் செய்தான். கோனேரின்மை கொண்டான் என்ற சிறப்புப் பெயருடைய அரசன் காலத்தில் கிருஷ்ணபட்ட சோமயாஜியார், ஜனநாதபட்ட சோமயாஜியார் என்ற அந்தணர்கட்குக் காணியாக அதிராசராசச்சதுர் வேதி மங்கலம் என்ற வெள்ளலூர் இருந்தது. நோயினல் அந்தணர்கள் குடிபெயர்ந்து போயினர். அவ்வரசன் வெள்ளலூர்க்கு விஸ்வேஸ்வர தேவச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர்மாற்றி, வேண்டும் பிராமணரில் 24 பேரைக் குடியேற்றி ஆனைவாரிக் குளத்தின் கீழ் மருதூர் வாய்க்காலுக்கு மேற்கும், கலையமுத்தூர் வழிக்குக் கிழக்குமாக மானிய நிலமும் கொடுத்தான். இன்றும் ஊரின் ஒரு பகுதிக்கு அக்கிரகார வெள்ளலூர் என்று பெயர் வழங்கி வருவது அதற்குச் சான் ருக அமைகிறது. போசள மன்னன் வீரவல்லாளன் கல்வெட்டும் இங்கு உள்ளது.

கொங்கு நாட்டின் தனித்தன்மையான கலை அமைப்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்வது உலகச் சிற்பவியலார் வியந்து பாராட்டும் சிங்கநல்லூர் உலகளந்த பெருமாள் செப்புத் திருமேனி. சிங்கநல்லூரில் வழிபாட்டில் உள்ள அந்தச் செப்புப் படிமம் வெள்ளலூர்ப் பெருமாள் கோயிலிலேயே முன்பு இருந்தது என்பர். வெள்ளலூர்ப் பெருமாள் கோயில், இன்று 'கரிவரதராசப் பெருமாள் கோயில்' என்று வழங்கப்பட்டாலும் கல்வெட்டில் உலகளந்த பெருமாள் கோயில் என்றே கூறப்படுகிறது.

பாற்கடலில் பாம்பணைமேல் துயிலும் நிலையில் அனந்தசயனக் காட்சி அழகிய சிற்பமாகப் பெருமாள் கோயிலில் செதுக்கப்பட்டது. நாட்டிய மகளிர், பறவைகள், கிருஷ்ணன் போன்ற சிற்பங்கள் பெருமாள் கோயிலில் பார்த்து மகிழத்தக்கவை. சிவாலயத்தில் 8-ஆம் நூற்றாண்டு விநாயகர் உருவம் உள்ளது.


இங்கு நங்கை நீலி ஆலயம் ஒன்று இருந்ததாக 'விசயமங்கலம் கல்வெட்டு' கூறுகிறது. அழகு நாச்சியம்மன், பேச்சியம்மன், தருமராசா கோயில் ஆகியவை சிறப்புடைய பிற கோயில்கள். 100 பாடல்கள் கொண்ட 'தேனீசர் அந்தாதி' என்ற இலக்கியமும் இவ்வூர்க்கு உண்டு.

தொன்மை வரலாற்றுச் சிறப்புமிக்க, ரோமானியர் தொடர்புடைய, சேரர், சோழர், போசளர் கல்வெட்டுடைய சிற்பச் செல்வமிக்க வெள்ளலூர் தன் பண்டைப் பெருமைகளையெல்லாம் தாங்கிச் செல்வத்தைத் உள்ளடக்கியுள்ள ஆழ்கடல்போல் அமைதியாக உள்ளது. பெருமை மிக்க பழம்பதியான வெள்ள லூரை நீங்களும் ஒருமுறை கண்டுகளித்து அதன் பண்டைப் பெருமைகளை உணர்வீர்களாக!


---

**ஒரு குழுமத்தின் பொறுப்பில் இருந்த ஒலிபரப்புப் பணியை, 1930 ஏப்ரலில் அரசே ஏற்றுத் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. இப்போது மீண்டும் அதனை ஒரு "இணையத்திடம்" ஒப் படைக்க முடிவு செய்துள்ளது.**


---



மலர்க்குழு தலைவர்
**ஆர். இருசப்பிள்ளை அவர்கள்**



மலர்க்குழு உறுப்பினர்
**ஓவியர் க. கோட்டீசுவரன்**
அரசு உயர்பள்ளி, கணபதி



மலர்க்குழு செயலர்
**புலவர் மணியன்**

# *கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் - விஜயமங்கலம்

கொடுமுடி சண்முகம் அவர்கள் பி.இ.,

**சொர்க்கலோகம்**

சொர்க்கலோகம் எப்படியிருந்ததென்று சென்று பார்த்து வந்தவர்கள் இல்லை. எல்லோரும் எப்போதும் மகிழ்ச்சியாக உள்ள இடத்தை சொர்க்கத் தோடு ஒப்பிடுவது மரபு. ''சதா ஸ்வர்க்கலோகம் ஆன கோட்டை சூழ்ந்த நகரம்'' என்று கல்வெட்டுக்களால் புகழப்படுவது **விஜயமங்கலம்.**

**அமைவிடம்**

கோவை மாநகரிலிருந்து பவானி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது, விஜயமங்கலம். ஒரு காலத்தில் கோட்டை கொத்தளங்களுடன், கொங்கு நாட்டுக் கோநகர்களில் ஒன்ருகத் திகழ்ந்தது. கங்க மன்னர்களின் இரண்டாவது தலைநகரமாகத் விளங்கியிருந்தது. தமிழ்ச் சங்கம் ஒன்று சிறப்புடன் நடந்தது. பல அரிய தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள் அரங்கேறியுள்ளன.

கொங்கு 24 நாடுகளில் ஒன்ருன 'குறுப்பு' நாட்டிற்கு முதன்மை நகரம் விஜயமங்கலம். ''குறுப்பு நாட்டு விசையமங்கலம்'' என்றே பல கல்வெட்டுத் தொடர்கள் இதனைக் குறிப்பிடும். 'தமிழ் மங்கை' என்றும், 'செந்தமிழ் மங்கை' என்றும் 'விசையபுரி' என்றும் வழங்கி வந்துள்ளது.

**தமிழ்ச் சங்கம்**

பூஜ்யபாதரின் சீடராகிய வச்சிரநந்தி கி.பி. 470-இல் மதுரையில் தமிழ்ச் சங்கத்தைப் புதுப்பித்தார். மதுரையில் சமணர்களுக்குச் சற்றுத் தளர்வு நேர்ந்த போது, அவர்கள் கொங்கு நாடு வந்தடைந்தனர். அப்போது தலைக்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட கங்க மன்னர்கள் கொங்கு நாட்டு விஜய மங்கலத்தைத் தமது கலைமலர் நகரமாகக் கொண்டிருந்தனர். தமிழ்ப் பகுதியின்

* 1-3-78இல் ஒலிபரப்பாயிற்று.

சீர்மிகு நகரமாக விளங்கியது. தமிழ்க் கலையும் பண்பாடும் வளர்க்கப்பட்டது. புலவர்கள் கூடித் தமிழாய்ந்தனர். இடைக்காலத்தில் சமணமுனிவர்கள் இயற்றிய பல நூல்கள் இங்கு அரங்கேறின. அவற்றில் தலையாயது பெருங்கதை.

**பெருங்கதை**

பெருங்கதையை இயற்றியவர் ''கொங்குவேள்'' என்பார். ''கொங்கு வேள் மாக்கதை'' என்று புலவர்கள் வழங்குவர். சொற்சுவை, பொருட்சுவைகளில் சிலப்பதிகாரத்துக்கு இணையாக மதிக்கப்படுவது பெருங்கதை. குணாட்டியர் பைசாச மொழியில் இயற்றியதை, துர்விநீதன் என்ற கங்க மன்னன் வடமொழியிலும் எழுதிய ''பிரகத்கதா'' என்ற காவியத்தை அழகிய தமிழில் வடித்தவர் கொங்குவேள். மாமன்னன் உதயணன் வரலாற்றைக் கூறுவது பெருங்கதை. நாடு, நகர வருணனைகளில் தமிழ் நாட்டின் ஈடில்லாச் சிறப்பினை ஏற்றிச் செல்வது அறிந்து அனுபவிக்கத் தக்கது.

**கொங்குவேள்**

கொங்குவேள் அரங்கேறியது விஜயமங்கலத் தமிழ்ச் சங்கத்திலாகும். புலவர்களின் உரையாடல் தமிழ் விருந்தாகும். கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்பது பழமொழி. அதைப்போலவே கொங்குவேள் அவர்களின் பணிப்பெண்கூடப் புலமை மிக்கவளாகத் திகழ்ந்துள்ளாள். தறுக்கித்திரியும் புலவர்களுக்குத் தன் பணிப்பெண்ணை விட்டே பதிலிறுக்கச் சொல்வாராம் அவர்.

> ''நீதப் புக ழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
> கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
> மேதக்க சொற்சங்கத் தார் வெள்கவே கொங்குவே ளடிமை
> மாதைக் கொண் டுத்தரஞ் சொன்னது வுங்கொங்கு மண்டலமே.''

என்று 'கொங்கு மண்டல சதகம்' பாடும்.

விஜயமங்கலத்தில் உள்ள சந்திரப் பிரபா தீர்த்தங்கரர் ஆலயத்தில் நான்கு புலவர்களும், அடிமை மாதும், கொங்குவேளும் கற்சிலைகளாக வடித்து வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கோயிலின் இடிபாடுகளில் உள்ள அழகான வேலைப்பாடுகள் கொண்ட ஒரு கல்லில் தேவநாகரி வடிவில் கல்வெட்டு ஒன்று உள்ளது. இதனை 'ஸ்ரீ பிரகத் கதா லாவண்ய ரத் ப்ரதாபஹ' என்பதாகப் படிக்கின்றனர். பெருங்கதையின் புகழிலும் அழகிலும், பெருமையுறுகிறது என்று இது பொருள்படும் என்பர். பெருங்கதை அரங்கேறியது மட்டுமின்றி அவ்வப்போது இங்கு வைத்து ஓதப்பட்டிருக்கலாம் என்று 'கருதப்படுகிறது'.

**நன்னூல்**

விஜயமங்கலம் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறிய இலக்கண நூல்களில் தலைசிறந்தது, 'நன்னூல்' என்ற இலக்கண நூலாகும். தொல்காப்பியம் தோன்றி காலம்பல கடந்துவிட்டதால், அதனைச் சுருக்கி இயற்றியது நன்னூல் ஆகும். விஜயமங்கலத்தை அடுத்துள்ள சீனபுரத்தில் தோன்றியவர் பவணந்தி அடிகள். அவருக்கு ஆதரவு தந்தவன் சீயங்கன் என்ற கங்க மன்னன் ஆவன்.

''அருங்கலை விநோகன் அமராபரணன்
திருந்திய செங்கோல் சீயகங்கன்
மொழிந்தன ஞக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன் மதிற் சனகை சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி........''

என்று நன்னூற் பாயிரம் கூறும்.

''கங்கக் குரிசில் உவக்க நன்னூலைக் கனிந்து புகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி''

என்று கொங்குமண்டல சதகம் கூறும். சீயங்கனின் குருவாக விளங்கியவர் பவணந்தி. பவணந்தியின் தவக் கோலமும், சீய கங்கனின் அலங்காரத் தோற்றமும், விஜயமங்கலம் சமணக் கோயிலில் இருப்பதை இன்றும் காணலாம்.

**சமணக் கோயில்**

சங்ககாலத்தில் கொங்கு நாடு சேரர் வசம் இருந்தது. அதற்கடுத்த நெடுங்காலம் கங்க மன்னர்கள் ஆட்சியில் இருந்தது. அப்போது சமண சமயம் சிறந்து விளங்கியது. சமணர்களின் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் எட்டாவது முனிவர் சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் ஆவர். அவருக்கு எடுத்ததே இங்குள்ள சமணக் கோயில். இது கி.பி. ஆறும் நூற்றுண்டிற்கு முன்னரே தோன்றியதாயினும் அவ்வப்போது பல முறை திருப்பணி செய்யப்பட்டுள்ளது. தற்போது 'நெட்டைக் கோபுரம்' என்று வழங்கப்படுகிறது. சுமார் 228 அடி நீளமும், 159 அடி அகலமும் கொண்டது. வாத்திய மண்டபம், மகா மண்டபம், நிருத்ய மண்டபம், கருவறைகள் ஆகியன உள்ளன. கோயிலுக்கு வெளியே மானஸ்தம்பம் உள்ளது. மகா மண்டபத்தில், மேல் உத்தரத்தில் ஆதிநாதர் வரலாறு நான்கு பகுதிகளாகச் செதுக்கப்பட்டுள்ளது. பிறப்பு, நீராடல், தீட்சை பெறுதல், தவக்கோலம் முதலியன அவை.

கருவறையில் சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் பீடம் உள்ளது. கருவறைச் சுவரில் பண்டைய வண்ண ஓவியங்கள் உள்ளன. இவை புகைபடிந்து சற்றே மங்கியுள்ளன. சுமார் ஆயிரம் ஆண்டுப் பழமையுடையனவாக இருக்கலாம்.

முன்மண்டபத்தில் மகாவீரர் பீடம் உள்ளது. மகாமண்டபத்தில் பல கற்சிலைகள் உள்ளன. மிகவும் நேர்த்தி வாய்ந்த ஆதிநாதர் வடிவம் உள்ளது. சீயகங்கன், பவணந்தி, கொங்குவேள், அடிமைமாது, மற்றும் நான்கு புலவர்களின் சிற்பங்கள் உள்ளன. உத்தரத்தில் 24 தீர்த்தங்கரர்களையும் செதுக்கி வைத்துள்ளனர்.

**பத்தினிக் கல்**

''கீர்த்தி பெற்ற விளைவயல் சூழ் பத்தினிக் கோட்டம்'' எனவும் இக்கோயிலை அழைப்பர். மைசூர் சிரவணபெளகுளாவில் மாபெரும் கோமதேசுவரர் சிலையை நிறுவிய இரண்டாம் நரசிம்மர், இரண்டாம் ராசய்யன் ஆகியோரின் அமைச்சராகிய சாமுண்டராயரின் தங்கை புளியம்மை என்பவள், 'சல்லேகனை' விரதம் இருந்து உயிர்நீத்த செய்தி இங்குள்ள கல்வெட்டில் கூறப்படுகிறது. அப்

பத்தினிக் குரத்தியாரின் நினைவாகவே 'பத்தினிக் கோட்டம்' எனவும் வழங்கப் படுகிறது. கருவறை வாயிலின் வலப்பக்கம் உள்ள தூணில் மேல்பகுதியில் வர்த்த மான மகாவீரர் வடிவம், அதன் கீழே புளியம்மை வடிவம் உள்ளன. தூணில் பக்கத்தில் கல்வெட்டு உள்ளது. ''ஸ்வஸ்தி ஸ்ரீ சாமுண்டராயன் தங்கை புளி யம்மை நிசீதகைக் கல்'' என்பது அதன் வாசகம். *'புளியம்மை' என்பதைப் 'புள்ளப்பை' எனப் பிறழ வாசித்து ஆண்பாலர் என மயங்குவாரு முண்டு.

**வெள்ளாளன் சொக்கநாதன்**

கோயில் கி.பி. 1221-ஆம் ஆண்டு ஒருதடவை புதுப்பிக்கப்பட்டுள்ளது. அப்போது கிழக்கு வாயில் நிலைக்கல் வழங்கியவன் சொக்கநாதன் என்பான். ''குறுப்பு நாட்டு விஜயமங்கலத்தில் வெள்ளாளன் படைத் தலைகளில் திருவானைக் காவுடையான் சொக்கநாதன் திருநிலைக்கால் செய்வித்தேன்'' என்பது கல்வெட்டு வாசகம்.

**பலஞ்சலாகை ஆனை அச்சு**

கொங்கு வேளிர், தேவர் ஆச்சாரியார், மற்றும் தோழன்மாருக்கான கற்சிலைகள் உண்டாக்கி அவற்றின் வழிபாட்டுச் செலவுக்காக இரண்டு பலஞ்ச லாகை ஆனை அச்சு நாணயங்களை ஒருவன் கொடுத்துள்ளான். சித்திரைப் பிறப்பு, தைப் பிறப்பு, கார்த்திகை தீபம் ஆகிய நாட்களில் வழிபாடு செய்யப் படுகிறது. வழங்கியவன் ''ஸ்ரீவத்த கோத்திரத்து சிலவர்பிள்ளை பெரிய நாட்டிற் பண்டிதப் பெருமாள் கெங்கையாழ்வான்'' என்பான்.

**அணியாத அழகியார்**

இங்குள்ள கல்வெட்டுக்கள் தீர்த்தங்கரர்களை ''அணியாத அழகியார்''† என்று அழைக்கின்றன திகம்பர சமணத்தவர் ஆடைகளோ, அணிமணி களோ பூணாதவர். ஏதும் அணியாமை அழகு தருவதாகும்.

''அணிவன அணியா அழகா செய ஈசெய''
''அணியா அழகா போற்றி போற்றி''

என்று 'திருப்பாமாலை' என்ற சைன இலக்கியம் கூறும். பரிமேல் அழகர், ஆனை மேல்அழகர் என்று இயற்பெயர் கொண்டவர்களைக் காஞ்சீபுரம் கல்வெட்டுக்களில் சந்திக்கிறோம். இங்கோ அணியாத அழகரைக் காண்கிறோம்.

**வீரசங்காதப் பெரும்பள்ளி**

வீரசோழன் கல்வெட்டில் விஜயமங்கலம் வீரசங்காதப் பெரும் பள்ளி என்று அழைக்கப்படுகிறது. ''ஸ்வஸ்தி ஸ்ரீ விசயமங்கலத்து நாயனார் வீரசங்காதப் பெரும்பள்ளி ஆழ்வார் பள்ளிச் சந்தப்பட்டயம்'' என்று இக்கல்வெட்டு தொடங்கு கிறது. சமணத் தலங்கள் பள்ளி என்று அழைக்கப்படும். விஜயமங்கலம் தலைமைத் தலம் ஆனதால் பெரும்பள்ளி என்றழைக்கப்பட்டது.

இக்கோயிலிலேயே சுமார் பத்து கல்வெட்டுகள் உள்ளன. இவை பல காலங்களில் பரவி தொடர்ந்த வரலாற்றை எழுத உதவுகின்றன.

---

* இதுபற்றிக் கருத்துவேறுபாடுகளும் உண்டு
† இத்தொடரை ''அணிகாத ழகியார்''— என்றும் குறிப்பர்

## நாகேசுவரர் ஆலயம்

விஜயமங்கலத்தில் உள்ள சிவன் கோயில் நாகேசுவரர் ஆலயம் ஆகும். கோயிலின் உள்ளே வீர சோழன் கல்வெட்டு ஒன்று தனிக் குத்துக்கல்லில் எழுதப் பட்டுள்ளது. ''ஸ்வஸ்தி ஸ்ரீ சகரையாண்டு ஆயிரத்து நாற்பத்து நாலில் கோ ராசாதிராச ஸ்ரீ வீரசோழ தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்று திரு நல்லியாண்டு அஞ்சாவது, குறுப்பு நாட்டு விசயமங்கலத்து'' எனத் தொடங்கிப் பல செய்திகளைத் தருகின்றது.

கோயிலின் திருக்காம கோட்டத்து பதும வரியில் இரண்டு கல் வெட்டுக்கள் உள்ளன. கோயிலைப் புதுப்பிக்கும் போது பழைய கல்வெட்டுக்களை மீண்டும் எழுதுவிக்கும் அரிய பண்பை இங்குக் காணலாம்.

குலோத்துங்க சோழன், வீரராசேந்திர சோழன் ஆகியோர் காலத்தில் அளிக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிய ஆணைகளை விக்ரம சோழன் காலத்தில் கோயிலைப் புதுப்பித்த போது, மீண்டும் கல்லிலே வெட்டி வைத்துள்ளனர்.

வீரராசேந்திர சோழன், சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டுக்களும் இக்கோயிலில் உள்ளன.

''திருபுவனச் சக்ரவர்த்திகள்', 'கோனேரின்மை கொண்டான்' என்று பட்டப் பெயர் பூண்ட வீரபாண்டியன் தமது ஐந்தாம் ஆட்சியாண்டில் ஒரு தடவை விஜயமங்கலம் வருகிறான். குறுப்பு நாட்டு மக்கள் அவனை அணுகி ''வானகப் புத்தூர் வடக்கு வாசலில் வானக் குளம் நெருடுநாள் பாழ்பட்டுக் கிடக்கிறதாக'' முறையிடுகின்றனர்.

மன்னன் அந்த ஏரியைப் புதுப்பித்து 'வீரபாண்டியன் பேரேரி' என்று தன் பெயரை இடுகிறான். இவ்வேரிப் பாசன வாரம் அனைத்தையும் 'திருக் காமகோட் டத்தாளுடைய நாச்சியார்' பூசைக்காக அர்ப்பணிக்கின்றான்.

## கரியமாணிக்காழ்வார் கோயில்


ஜைனம், சைவம் இவற்றுடன் வைணவச் சிறப்பும் கொண்டது விஜய மங்கலம். இங்குள்ள பெருமாள் கோயில் 'கரியமாணிக்காழ்வார் கோயில்' என் றழைக்கப்படும். மிகுந்த வேலைப்பாடுடன் கூடிய அழகிய கோயில்; இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடத்தக்க சிறப்புடையது. இராசகேசரி, திருபுவனவர்மரான வீரபாண்டியனின் பதினைந்தாம் ஆண்டில் எழுதப்பட்டது. இறைவனைச் சித்திர மேழி விண்ணகர நாயனுர் கருமாணிக்காழ்வார்' என்று கல்வெட்டு குறிப்பிடு கிறது. சித்திரமேழி என்பது வேளாளர் குடியின் குழுப்பெயராகும். விசயமங்க லத்திற்கு அருகில் உள்ள காத்தான் கண்ணி என்ற கிராமமே தானமாக வழங்கப் பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இதில் நயமான குறிப்பு, கோயில் நம்பிமார் விளக்கு எரிக்க எண்ணெய் வாங்குவதற்காகக் காற்றான் கண்ணி கிராமம் சென்றால் எண்ணெயும் கொடுத்து, நம்பிமார் பசியாற உணவும் இடுவதாக இவ்வூரார் வாக்களிக்கின்றனர். எண்ணெய் அளக்கும் நாழி, குறுப்பு நாழி என்று அழைக் கப்படுகிறது. குறுப்பு நாட்டு நாழி தனிப்பெயர் பெற்றுள்ளது, குறிப்பிடத் தக்கது. இக்கோயிலில் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றும் இருந்து அழிந்து விட்டது.

**இறுதியில்**

இவ்வாறு தொன்று தொட்டு மங்காச்சிறப்புடன் விளங்கிய விஜயமங்கலம் இன்று சிற்றூராகக் காட்சியளிக்கின்றது. புதைபொருளாய்வு செய்யத்தக்க இடிபாடு மேடுகள் நிறைந்துள்ளன. அம்மேடுகளில் அவ்வப்போது பல நாணயங் களும் கிடைத்து வருகின்றன.

கி.பி. ஐந்தாம் நூற்றுண்டிலிருந்து தொடர்ந்து வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன. துர்விநீதன், சீயகங்கன் முதலான கங்க மன்னர்களும், வீர ராசேந்திரன், குலோத்துங்கன் முதலான கங்க சோழ மன்னர்களும், வீரபாண் டியன் சுந்தரபாண்டியன் போன்ற பாண்டிய மன்னர்களும் வீரசோழனென்ற கொங்குச் சோழனும், ஹரிஹர ராயர் முதலான விஜயநகரப் பேரரசர்களும் தத்தம் கொடைகளால் இங்கு நிலைபெற்று வாழ்கின்றனர்.

கொங்குவேள் மாக்கதை, பவணந்தியின் நன்னூல், கொங்கு மண்டல சதகம் முதலிய நூல்களை இயற்றிய பல புலமைச் செம்மல்களால் புகழ் விளங்கிய கலைமலி நகரம் விஜயமங்கலம் ஆகும்.



---

கோயம்புத்தூர் வானொலி நிலையம் இன்று ஏறத் தாழ 4-30 மணி நேரம், பிற இடங்களிலிருந்து அஞ்சல் ஏதும் செய்யாமல் - சொந்தமாகவே நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.

---

# * கொங்குநாட்டு வரலாற்றுத் தொடர்புடைய ஊர்கள் தாராபுரம்

க. வெள்ளிமலை எம்.ஏ., அவர்கள்
தமிழ்த்துணைப் பேராசிரியர், பூ.சா.கோ. கலைக்கல்லூரி, பீளமேடு.

பன்னெடுங் காலமாகக் கொங்கு நாட்டின் தலைநகரமாக விளங்கிற்று ஒரு நகரம். அது கோவை நகரிலிருந்து தென்கிழக்கே 40 கல் தொலைவில் உள்ளது. அவ்வூர்தான் 'காரார் சோலை சூழ் தாரா நகர்.' ஆம்! கோவை மாவட்டத்தின் ஒரு வட்டமாக விளங்கும் தாராபுரமே அது. அப்பப்பா! அதன் பழங்காலச் சீர்மையை—எழிலார்ந்த ஏற்றத்தை யார்தாம் சொல்லில் வடிக்க இயலும்!

**ஊரும் ஆறும்**

நோக்கும் திசையெல்லாம் பச்சைப் பசேலென்னும் வயல்கள்—அக் கழனி களில் செழுமையாக வளர்ந்துள்ள நெல் மணிகள். பக்தர்கள் தலை தாழ்த்து இறைவனை வணங்குமாறுபோலத் தவம் கிடக்கின்ற அழகுதான் என்னே! அத் தவத்திற்கு உருகி அருள் பாலிப்பவள் யார்? அவள்தான் அமராவதி என்னும் தாய். ஆம்! ஆனைமலைத் தொடரை ஒட்டிய வராக மலையில் பிறந்து, மெல்லென நடந்து தாராபுரத்தின் வழியாகப் பாய்ந்து உலகு ஊட்டுகிருள் அத் தாய். பின் பொன் கொழிக்கும் பூவிரி காவிரியோடு கலக்கிருள்.

நாட்டின் உறுபசியும், ஓவாப் பிணியும் நீக்கி வசியும் வளனும் சுரக்க அருளும் இவ்வமராவதியை நந்தம் இலக்கியங்கள் 'தண் ஆன் பொருநை' என்றே குறித்துள்ளன.

'தண் ஆன் பொருநை மணலினும் சிறக்க' என்று கவியரசர் இளங்கோ வின் சித்திரச் சிலம்பு போற்றுகிறது; 'தண் பொருநை' என்றுபிங்கல நிகண்டு பேசுகிறது; 'தண் பொருநைப் புனல் பாயும் விண் பொரு புகழ் விறல் வஞ்சி' என்றும், 'மகளிர் பொலஞ்செய் கழங்கின் தெற்றியாடும் தண்ஆன் பொருநை வெண்மணல் சிதைய' என்றும், 'வஞ்சிப் புறமதில் அலைக்கும் கல்லென்பொருநை மணல்' என்றும் புறநானூறு மொழிகிறது.

---

* 30-5-78இல் ஒலிபரப்பாயிற்று

''தெண்ணீர் உயர்கரைக் குவைஇய
தண் ஆன் பொருநை மணல்'

என நெடுந்தொகை இயம்புகிறது. இப் பெருநதியைப் பொதிய மலையில் தோன்றும் பொருநை என்னும் தாமிர பரணியினின்று வேறுபடுத்திக் காட்டவே 'தண்' என்னும் அடை சேர்த்து 'தண் ஆன் பொருநை' என்றனர். நம் ஆன்றோர். பின்னர் இவ் ஆறு ஆம்பிராநதி என்று அழைக்கப் பெற்றது. அதுவே மருவி அமராவதி ஆயிற்று. இவ்வாறு இலக்கியங்கள் போற்றும் இந் நதிக்கு நதியும், சண்முக நதியும், குடவனாறும் துணையாறுகளாக விளங்குகின்றன.

**எத்தனை பெயர்கள்**

இப் புனலாற்றால் பெருமை கொள் தாராபுரம், முற்காலத்து ராஜராஜ புரம் என்றே அழைக்கப்பட்டு வந்தது. இதற்குத் தாராபுரம் பெருமாள் கோவில் கல்லெழுத்தும் சான்று தருகிறது. தவிர, கங்க வம்ச மன்னர் இதனை 'ஸ்கந்த புரம்' என்றார்கள். அவ் அரசர்தம் புரோகிதர் ஒருவர் அப் பெயரைத் 'தாரு காந்தக புரம்' என மாற்றினார். இவ் வண்ணம் ராஜராஜபுரம், ஸ்கந்த புரம், தாருகாந்தகபுரம் என்று பல பெயர்களால் அழைக்கப் பெற்ற தாராபுரத்தின் பழம் பெருமையை விரிப்பின் அகலும்!

**வரலாற்றில்**

வஞ்சிபுரம் எனப்படும் தாராபுரம் விராட மன்னனுக்குத் தலைநகராக இருந்தது என்பது செவிவழி செய்தி. பின்னர்ச் சத்திரிய போஜ மன்னர்களுக்குக் கோ நகரமாயிற்று. பின்னர், மதுரை மன்னரிடமிருந்து, 1746-இல் திப்புசுல்தான் இத் தாராபுரத்தைக் கைப்பற்றினான். 1768-ஆம் ஆண்டில் ஹைதர் அலிக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நடந்த போரில் 'கர்னல் வுட்' என்பார் அதனைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டார். ஆனால் அதே ஆண்டில் ஹைதர் அலி, தாரா புரத்தைத் தன் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தான். அவனுக்குப் பின்னர் 1783 ஆம் ஆண்டில் இத் தாராபுரம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் வந்தது.

தஞ்சையை ஆண்ட பிற்காலச் சோழர்கள், தாங்கள் வென்ற கொங்குப் பகுதியை ஆளுவதற்குத் தங்கள் இளவரசர்களையே தலைவர்களாக அமைத்தார்கள். இவர்கள் தம்மைக் 'கொங்குச் சோழர்கள்' என அழைத்துக் கொண்டார்கள். கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்து வந்த இவர்கள் முடி கொண்ட சோழபுரத்தை விடுத்து ராஜராஜபுரம் என்னும் தாராபுரத்தைத் தலைநகராகக் கொண்டார்கள். இக் கொங்குச் சோழர்கள் கொங்கு நாட்டை 24 உள் நாடுகளாகப் பிரித்தனர். தென்கரை நாட்டின் தலை நகரான தாராபுரத்தையே தம் தலைநகராகக் கொண்டு அரசோச்சி வந்தார்கள். கி.பி. 1004 முதல் தாராபுரம், தென் கொங்கின் தலைநகரமாயிருந்தது. ஆம்! 308 ஆண்டுகள் அது கொங்கு துளிக்கும் கொங்கு நாட்டின் தலைநகர்! அவர்கள் காலத்திலேதான் தாராபுரம் ராஜராஜபுரம் என வழங்கலாயிற்று.

கி.பி. 1183-லிருந்து 1206 வரை ஆட்சி புரிந்த ஏழாவது கொங்குச் சோழனான வீர சோழனும், கி.பி. 1206 லிருந்து 1255 வரை அரசு நடத்திய வீர ராசேந்திரனும் தம் கல்வெட்டுகளில் 'இரு கொங்கும் ஆண்டவர்' எனத் தம்மைக் கூறிக் கொள்கின்றார்கள். இதனால் தாராபுரம் தென் கொங்கிற்கு மட்டுமல்லாமல் கொங்கு நாடு முழுமைக்கும் கோநகராக விளங்கினமை தெரிய வருகிறது.

இத் தாராபுரம் கங்கர்களுக்கும் தலைநகராக இருந்தமை தெரிகிறது. கங்கர்களில் கொங்கணி வர்மன், முதல் அரசனுவான். அவன் வழியில் வந்த அரிவர்மன் கி.பி. 290-ல் தாராபுரத்தை விடுத்துத் தலைக்காட்டைத் தன் தலை நகராக்கிக் கொண்டான். இருப்பினும் 100 ஆண்டுகள் தாராபுரம் இக் கங்கர் களுக்குத் தலைநகராக இருந்தது அறியத்தக்கது. பிற்காலக் கங்கர்கள் ஆட்சியில் கூடத் தாராபுரம் அவர்தம் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

இரட்ட குலத்தில் தோன்றிய ஏழு அரசர்களுள் ஸ்ரீவீரராஜ சக்ரவர்த்தி என்பான் கொங்கு நாட்டில் ஸ்காந்தபுரத்தில் இருந்து கி. பி. முதல் நூற்றுண்டில் அரசாண்டான். இவன் தன் பெயரால் பொற்காசுகளை வெளியிட்டான்.

கொங்கு நாட்டில் பேரூர், முட்டம் ஆகிய இடங்களில் சேரர்க்குரிய வில் பொறிக்கப்பெற்ற காசுகள் கிடைத்துள்ளன. கங்கர்கள் தலைக்காட்டிற்குத் தம் தலைநகரை மாற்றியபின் பிற்காலச் சேரர்கள் தாராபுரத்தை ஆண்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. சேரர்கள் தம் இறுதி ஆட்சிக் காலத்தில் தாரா புரத்தில் இருந்து சிறக்க அரசோச்சியுள்ளார்கள். சோழன் பூர்வ பட்டயத்தில் குறிக்கப்பெறும், சேரமான் பெருமாள் பெயரில் வரும் சேர மன்னர், இக் காலத்தை சேர்ந்தவரே.

**கோட்டை சூழ்ந்த ஊர்**

'பேரரண் சூழ் தாராபுரத் தொன்னகர்' என்பதற்கேற்ப ஆற்றங்கரை மருங்கில் ஒரு கோட்டை இருந்தமை அறியப்படுகிறது. இடிபாடுகளோடு கூடிய கோட்டை மேட்டை நாம் இன்றும் காணின் நம் நெஞ்சக் கனகல்லும் உருகவே செய்யும்.

இக்கோட்டை 1791 வரை இருந்ததாம். பின்னர் 1792-இல் தகர்ந்து விட்டது என்றும், மீண்டும் 1799-இல் உருவாக்கப் பெற்றது என்றும் கூறு கிறார்கள். 1800-இல் ஒரு பெரிய மண்கோட்டையைப், புக்காணன் நேரில் பார்த்த குறிப்பும் உள்ளது.

இக் கோட்டைக்குள் உத்தம வீரராகவ சுவாமி கோவில் உள்ளது. இதனை அறிஞர் மக்கன்சி 'உத்தர வீர ராகவ சுவாமி கோவில்' என்று குறிப்பிடுகிறார். இக் கோவில் மகா மண்டபத்தின் வடக்குச் சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. ''ஸ்வஸ்தஸ்ரீ ஸ்ரீமன் மகாப் பிரதாப பூர்வ பட்சம் தட்சிண சமுத்திராபதி பூமண்டல ராஜாதி ராஜ பரமேசுவர அரியராய விபாட பாவுக்கு தப்புவராய கண்டன்'' என்று தொடங்கும் அக் கல்வெட்டு கங்க அரசனுன அரிஅரன் காலத்து அமைந்தது. இதில் கலி 4488 என்றும், சக ஆண்டு 1309 என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. இக் கோவிலுக்கு நிலம் இறையிலியாக வழங்கப் பெற்ற செய் தியை இது தருகிறது. தவிர, முஸ்லீம்களால் பள்ளியாக்கப் பெற்ற இக் கோவிலை மீண்டும் புதுக்கிய செய்தியும், கர்ப்பக்கிருஹம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், திருமடைப்பள்ளி, திருவாசல் ஆகியவற்றைச் சேனை முதலியார் என்பார் அமைத்த செய்தியும் இதிலிருந்து அறியப்படுவன. கோவிலில் திருநந்தா விளக்கு வைக்க ஏற்பாடு செய்ததையும் இக்கல்வெட்டு குறித்துள்ளது. இன்னும், இடங்கை வலங்கைச் சாதிகளும் இதில் குறிக்கப்படுகின்றன.

தாரை எனப்படும் தாரை நகரில் ஸ்ரீகாடு அனுமந்தராய சுவாமி கோவில் பழங்காலந்தொட்டுச் சிறப்புடன் விளங்கி வருகிறது. கி. பி. 15ஆம் நூற்றுண்டில்

ஸ்ரீவியாசராஜ சுவாமிகள் இக் கோவிலை அமைத்து வழிபாடு செய்து வந்தார். இந்தியாவில் உள்ள 732 ஆலயங்களில் தாராபுரம் கோயில் 89 ஆவதாகப் போற்றப் பெறுகிறது. இக்கோவிலுக்குக் கோபுரம் இல்லாதது குறிப்பிடத் தக்கது.

தாராபுரத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ளது, கொழிஞ்சிவாடி. அங்கு அழகிய சொக்க நாதர் கோவில் விளங்குகிறது. இக் கோவிலின் சுற்றுப்புறச் சுவர்களில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. விஜய நகர மன்னர் காலத்துக் கல்வெட்டில் அழகிய சொக்கபுரத்தைக் கோவிலுக்கு வழங்கிய செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. பிறிதொரு கல்வெட்டில் 3 மாகாணி நிலம் சொக்கேசர்க்கு அளித்த செய்தி சொல்லப்படுகிறது. தவிர, அழகிய சொக்கியார்க்கு 6 மா நிலமும், திருவமுது படைக்க இறையிலியாக நிலமும் வழங்கிய செய்திகளும் பிற கல்வெட்டுகளினின்று அறிதற்குரியன.

மேலும், தாராபுரத்தில் அகஸ்தீசுவரர் கோவில் ஒன்று விளங்குகிறது. கங்கை நதிக்கரையில் உள்ள விசுவநாதத்தின் லிங்கம் போலவே இங்கும் அமைக்கப்பட்டுள்ளது. இவ் லிங்கத்தை அகஸ்தியர் அமராவதி ஆற்று மணலைக் கொண்டு பிரதிட்டை செய்து வழிபட்டமையால் இம் மூலவர் அகஸ்தீசுவரர் ஆனார்.

இத் தாராபுரத்தின் சிறப்பையும், பழமையையும் குறிக்கப் பாரதத்தோடு தொடர்பு படுத்திப் பேசுவர். 'நீதியும் விளைவும் தருமமும் நிறைந்து நிதிகள் மற்று யாவையும் நெருங்கி' விளங்கும் விராட நகர் இத் தாராபுரமே, என்பது செவி வழிச் செய்தி.

ஒரு காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதி சேலம், திண்டுக்கல் என இரு மாவட்டங்களாக இருந்தது. திண்டுக்கல் மாவட்டத்திற்குத் தாராபுரம் தலை நகராயிருந்தது, என்பதும் வரலாறுகும். 1804-ல் கோயமுத்தூர் மாவட்டமாக அமைந்த பின்னர்த் தாராபுரம் ஒரு வட்டமாயிற்று.

கங்கர்களுடைய ஆட்சியில் கி.பி. 726-லிருந்து 779-வரை அரசோச்சிய பிருதிவி கொங்கணியான சிவராமராயன், பாண்டியர்தம் எதிர்ப்பைத் தடுப்பதற்காகத் தாராபுரத்தில் ஒரு பெரும் படையை அமைத்தான் என்பதும் ஈண்டு அறியத் தக்கது.

இவ்வாறு, தாராபுரம் கங்கர்களுக்கும், இராட்டிரர்களுக்கும், கொங்குச் சோழர்களுக்கும், விஜய நகர் அரசர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தலைநகராக இருந்தது; கல்வெட்டுக்களைத் தம் அகத்துக் கொண்ட கோவில்கள் பல கொண்டுள்ளது; மண்கோட்டையால் பெருமையும், பீடும் பெற்று ஒளிர்வது; இலக்கியம் போற்றும் தண் ஆன் பொருநை என்னும் அமராவதியை அணியாகக் கொண்டது. இத்தகைய திருவெலாம் நிறையும் தாராபுரச் செழுநகர், வரலாற்றுப் பொன்னேட்டில் பொறிக்கப் பெறும் என்பதில் ஐயமில்லை.

---

**நாடு விடுதலைபெற்றபோது இந்தியாவில் இருந்த ஒலிபரப்பு நிலையங்கள் ஆறுமட்டுமே. இப்போது ஏறத்தாழ 84 நிலையங்கள் உள்ளன.**

---

# *கொங்குநாட்டுப் பழமொழிகள்

இல. செ. கந்தசாமி எம்.ஏ.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், வேளாண்பல்கலைக் கழகம், கோவை-3

பழமொழி என்பவை மக்களின் அனுபவத்திலிருந்து தோன்றிய உண்மையின் வடிவங்களாகும். அவை பல் வேறு காலங்களில் பல்வேறு மக்களால், வழங்கப்பட்டு, இறுதியில் நிலையானதொரு வடிவத்தைப் பெற்று விளங்குகின்றன.

பழமொழிகள் கேட்போர் மனதில் ஆழப்பதிந்து, குறித்ததை முடிக்கத் தூண்டும் ஆற்றல் வாய்ந்தவை ஆதலின், அனுபவம் மிக்க பெரியோர்கள் தங்கள் பேச்சினிடையே, பழமொழிகளை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, 'விரலுக்குத் தகுந்த வீக்கம்' என்பது மக்களால், அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு பழமொழியாகும். ஒவ்வொருவரும் தங்கள் நிலையறிந்து, தங்கள் தகுதி அறிந்து, எந்தச் செயலையும் செய்ய வேண்டும். குறிப்பாக, பொருள்வகையில் கொடுப்பதிலும் வாங்குவதிலும் அளவாக நடந்து கொள்ள வேண்டும். ஆர்வம் மிகுதியால் தன் நிலைக்கு அதிகமாகச் செலவு செய்வதும், கேட்ட இடத்தில் கிடைக்கிறது என்பதால் அளவுக்கு மிஞ்சிக் கடன் வாங்குவதும் முதலுக்கே மோசம் தேடிக் கொள்ளும் செயலாகும்.

இவ்வாறு ஒருவர் எல்லை கடந்து போகும் நிலையில், தகுதியுடையவர்கள் தங்கள் அனுபவத்தோடு, இந்தப் பழமொழியைக் கூறி அறிவுரை வழங்குவார்களாயின், இம்மொழி அவர்களைச் சிந்திக்க வைத்து, தன்னிலையை உணர்ந்து செயல்படத் தூண்டும் என்பது உறுதி.

தமிழகத்தில் இத்தகைய பழமொழிகள் ஏறத்தாழ 1200க்கும் மேல் வழக்கில் இருந்து வருகின்றன. இவற்றை எல்லாம் தொகுத்து, ''பழமொழி அகரவரிசை'' என்ற ஒரு நூல் வெளிவந்திருக்கிறது. பழமொழிகளில் மட்டும் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றுள்ளனர். மேலும் நுட்பமான ஆய்வும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

*28—9—77ல் ஒலிபரப்பாயிற்று.

வேளாண்மைப் பழமொழிகளைத் தனிப்படத் தொகுத்து ஆராய்ச்சி நடத்தி உள்ளது. வேளாண்மைப் பழமொழிகள் மட்டும் 4000க்கும் மேற்பட்டவை உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்க செய்தியாகும். இப்பழமொழிகள் தமிழக மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, தொழில், சாதி, சமயம் முதலாய பல்வேறு சமுதாயக் கூறுகளை விளக்கும் வகையில் காலக் கண்ணாடியாக அமைந்துள்ளன.

அவற்றுள் சேலம், தருமபுரி, கோயமுத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள் அடங்கிய கொங்கு நாட்டு மக்களால் வழங்கப்படும் பழமொழிகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இந்நாட்டு மக்களில், பெரும்பான்மையோரின் தொழில் வேளாண் மையாதலின் இங்கு வழங்கும் பழமொழிகளும் வேளாண்மையின் அடிப்படையி லேயே தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

''கொங்கு விளைந்தால் எங்கும் விளையும்'' என்பது நாட்டின் இயற்கை வளத்தைக் குறிப்பிடும் ஒரு பழமொழியாகும். கொங்குநாடு நாற்புறமும் மலை களால் சூழப்பட்ட நாடு. அம்மலைகள் பருவக் காற்றைத் தடுத்து விடுகின்றன. ஆதலின் கொங்கு நாடு போதிய நீர்வளம் இல்லாத பகுதியாக பண்டைக் காலம் தொட்டே இருந்து வந்துள்ளது.

அதனால் இந்நாட்டு மக்கள் பருவ மழையை எதிர் பார்த்தே, பெரும் பாலும் புன்செய் வேளாண்மை செய்து வந்துள்ளார்கள். உழவுத் தொழில் செய்து எஞ்சிய காலங்களில் கொங்கு நாட்டில் ஆடுமாடுகள் வளர்ப்பதையே முதன்மையான தொழிலாகவும் மேற்கொண்டிருந்துள்ளார்கள். காளைகள் வளர்ப் பதில் சிறந்தவர்கள் கொங்கு நாட்டவர்கள், என்னும் பொருள்பட ''ஆகெழு கொங்கர்'' என்று சிறப்பிக்கிறது சங்க இலக்கியம். பருவ மழையை மட்டுமே எதிர் பார்த்து விளைவிக்கும் கொங்கு நாட்டிலேயே நல்ல விளைச்சல் காணுமானல், ஆறுகள் பாய்கின்ற நீர்வளம் மிகுந்த, சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகளின் விளைச்சலைப் பற்றிக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டியதில்லை., கேட்காமலேயே விளைச்சல் நன்றாகவே இருக்கும் என்று உறுதிப் படுத்திக் கொள்ளலாம், என்ற அடிப்படையில் ''கொங்கு விளைந்தால் எங்கும் விளையும்'' என்ற பழமொழி தோன்றியுள்ளது என்பதை அறியலாம்.

இதுபோல் பழமொழிகள் வெளிப்படையாக ஒரு பொருளைக் குறிப்பது போல் இருந்தாலும், உள்ளார்ந்த ஒரு பொருளையும் கொண்டிருப்பதே இவற்றுக்கு உரிய தனித்தன்மையாக இருக்கின்றது.

''அளந்த வல்லம் அட்டாலியிலே'' என்பது சேலம் மாவட்டத்தில் இயல்பாக வழங்கும் ஒரு பழமொழியாகும். வல்லம் என்பது 4 லிட்டர் அளவு கொண்ட ஒரு அளவு கருவியாகும். தானியங்கள் அளக்கின்ற காலங்கள் தவிர, பிற காலங்களில், அது பயன்படாது. ஆகையால் அதனை வீட்டின் பரண்மேல் போட்டுவைத்திருப்பார்கள். சேலம் மாவட்டத்தில் பரணை 'அட்டாலி' என்று சொல்வது வழக்கமாகும்.

''அளந்து அட்டாலியில் இருக்கிறது'' என்பது பொதுப்படையானசெய்தி. ஆனல் இந்தப் பழமொழி வெளிப்படுத்தும் செய்தி ஆழமானது.

'மகன் ஒருவன், தன் தாய் தந்தையரை சரியாகக் கவனித்துச் சோறு போடவில்லையானுல், தம்பீ! உனக்கும் நாளைக்கு இதே கதிதான் வரும். வருங் காலத்தில், உன்மகன் உன்னையும் இப்படித்தான் நடத்துவான். ''அளந்த வல்லம் அட்டாலியிலே'' இருக்கிறது என்பதை நீ மறவாதே'' என்பார்கள். ஒருவன் பிறரைத் தவறுபடப் பேசினுலும் தகுதிக் குறைவாக நடத்தினுலும் இம்மொழி யைப் பயன்படுத்தி, எச்சரிக்கை செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. தமி ழகத்திற்கு வெளிநாட்டிலிருந்து கரும்பைக் கொண்டு வந்தவன் தகடூரை ஆண்ட அதியமான் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு என்ன செய்யும்? என்ற, கேள்வி வடிவான பழமொழி தருமபுரி மாவட்டத்தில் வழங்கும் ஒரு பழமொழியாகும். கரும்பு இருக்கின்ற இடத்தில் எறும்புகள் வருவது இயல்பு. கரும்பு வெடித்துப் போகாமல் இருந்தால், எறும்பால் அதற்கு அழிவு நேராது. கரும்பின்மேல் ஊர்ந்து செல்லலாமே தவிர, அதனைக் கடித்துப் பாழ்படுத்தும் வலிமை எறும்புக்கு இல்லை.

இப்பழமொழி இக்கருத்தை வெளிப்படுத்தத் தோன்றியது அல்ல. பெண் களுக்கு மிகுந்த மனவலிமை (Will Power) வேண்டும் என்பதை வலியுறுத்தவே இப்பழமொழி தோன்றியதாகும். கரும்பு போன்ற இளம் மங்கையர் தங்கள் கற்பினைக் காத்துக் கொள்ள மன ஆற்றல் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் கட்டாக, உறுதியுடன் இருந்துவிட்டால், அவர்களைச் சுற்றி வட்டமிடும் எறும்பு போன்ற இள வட்டங்களால் ஒரு துன்பமும் நேராது என்பதை மிக அழகாக உணர்த்துகிறது, இப்பழமொழி.

பெண்களுக்குப் பரிந்து பேசுகின்றவர்கள் நாளடைவில் இப்பழமொழியை கரும்பு கட்டோடு இருந்தாலும் எறும்பு தானே வரும்'' என்று மாற்றி வழங்கத் தொடங்கி விட்டார்கள். அதனுல் ''எறும்பு தானே வரும் என்ற பழ மொழியும்'' உலவி வருகிறது.

''நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுசுமை போகாது'' என்பது கோவை மாவட்டத்தில் வழங்குகிற ஒரு பழமொழியாகும். கொங்கு நாட்டின் ஆட்சி நிலையாக என்றும் ஒருவர் கையில் இருந்ததில்லை. கைக்குக் கை மாறிக் கொண்டே வந்துள்ளது என்பதை கொங்கு நாட்டு வரலாறு நமக்கு அறிவிக்கின்றது.

யார் ஆண்டாலும், கடை நிலையில் வாழும் ஏழை மக்களின் துன்பம் தீர்ந்த பாடில்லை. இதனை நெடுங்காலமாக அனுபவித்து வரும் ஏழை மக்கள், நாட்டின் ஆட்சியைத் தங்களின் அன்றாட வாழ்வோடு இணைத்து, நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச் சுமைபோகாது' என்று உருவம் கொடுத்து வழங்கி வந்துள்ளார்கள்.

தோட்டி தனக்கென்று விதித்த கடமைகளைச் செய்ததுபோக எஞ்சிய நேரத்தில், கணக்குப் பிள்ளை வீட்டிற்கும் மணியக்காரர் வீட்டிற்கும் புல்கட்டு சுமந்து வருவது முதல், பல்வேறு ஊழியங்களை, ஊதியம் பெருமலேயே செய்ய வேண்டி இருந்துள்ளது. இந்நிலை மன்னர்கள் ஆண்டபோதும், வெள்ளைத் துரை கள் ஆண்டபோதும் மாறவில்லை, இனியும் மாறப்போவதில்லை என்ற நிலையில்

முடித்த முடிவாக 'புல்லுச்சுமை போகாது' என்று வழங்கி வருகின்றது. இப்பழமொழி இன்றும் எல்லோரையும் சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது.

பிற்காலத்தில் இராமாயணக் கதை தெரிந்தவர்கள் ''இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன? நமக்கு விதித்தது இவ்வளவுதான்,'' என்று தங்கள் தங்கள் விதியை நொந்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள். உழைப்பையே நம்பி வாழ்ந்த மக்கள் முடியாதபோது தங்களைத் தாங்களே நொந்து கொள்ளும் நிலை, நாட்டின் வளர்ச்சிக்கு நல்ல அறிகுறி அல்ல.

கொங்குநாடு ஆழமான கிணறுகளை உடையது. 300 அடிக்கும் மேல் ஆழமுள்ள கிணறுகளும் உண்டு. மலையோரப் பகுதிகளில் கிணறு தோண்டுவதற்கு கடினமான உழைப்பை மேற்கொள்ள வேண்டும். ஆனால் உழைப்பவர்க்குக் கூலி குறைவாகவும், உழைக்காமல் வாயால் வழி முறைகள் சொல்பவர்க்குக் கூலி அதிகமாகவும் கொடுக்கும் முறை உள்ளது என்பதை ஒரு பழமொழி குறிப்பிடு கின்றது. ''கொந்தாளம் போடுகிறவனுக்கு ஒரு பணம், கோளாறு சொல்கிறவ னுக்கு இரண்டு பணம் என்பது நீலகிரி மாவட்டத்தில் வழங்கும் ஒரு பழமொழி யாகும். கள்ளங்கபடு இல்லாமல், கடுமையாக உழைக்கும் கல்வி அறிவு இல்லாத மக்களிடம், கொஞ்சம் படித்தவர்களும் ஏய்த்துப் பிழைக்க முற்படுகிறார்கள் என்பதையே இதனால் அறிய முடிகின்றது.

இதுவே ''பாடுபடுகிறவனுக்கு பத்துவல்லம், இளிச்ச வாயனுக்கு இருபது வல்லம்'' என்று கோவை மாவட்டத்து மக்களால் வழங்கப் படுகின்றது. இளிச்ச வாயன் என்பதற்கு ஏமாந்தவன் என்பது பொருள் அல்ல. சிரித்துப் புகழ்ந்தே பிறரை ஏமாற்றுபவன் என்பது பொருள். இத்தகையவர்களே இன்றைக்கும் வாழ்வு பெறுகிறார்கள் என்பதால் பழமொழியின் நிலைபேற்றையும் ஓரளவு அறிய முடிகின்றது.

சேலம் மாவட்டத்திலும் இதே கருத்தில் ''வெடிய வெடிய பாடுபடுகிறவ னுக்கு வெறுந்தண்ணி சோறு, தண்டுமுண்டுகாரனுக்குத் தயிருஞ்சோறு'' என்று ஒரு பழமொழி. தண்டுமுண்டுகாரன் என்பவன் ஆடம்பரமாக உடுத்தி, அழ காகப் பேசுகிறவனுவான். பாமர மக்களிடத்தில் ஆடம்பரமும் அழகுப் பேச்சும் இன்றும் பயன்படுகிறது என்பது நாம் நடைமுறையில் காணும் உண்மையாகும்.

தருமபுரி மாவட்டத்திலும் இதே பொருளை உடைய வேறு ஒரு பழமொழி வழங்குகிறது. ''முக்கிமுக்கி '' அதாவது கடுமையான முயற்சியுடன் பாடுபடு கிறவனுக்கு மூனு கொழுக்கட்டை, எட்டி எட்டிப் பார்ப்பவனுக்கு ஏழு கொழுக் கட்டை'' என்பது அப்பழமொழியாகும். எட்டி எட்டிப் பார்ப்பவன் என்பவன் அரைகுறையாக வேலை செய்பவன் என்பது கருத்து.

ஒரே பொருளை உடைய இந்நான்கு பழமொழிகளும், உடல் உழைப்பைக் காட்டிலும் புகழ்ச்சி உரை பேசுகின்றவர்களே நாட்டில் வளமாக வாழமுடிகிறது என்பதை அறிவுறுத்துகின்றன.

கொங்கு நாட்டைக் கொங்கர்களே ஆண்டிருந்தால், இத்தகைய புகழ்ச்சி உரைகளுக்கு இடம் இருந்திருக்காது. வேற்று இனத்தினர் ஆண்டதால் சில வேளைகளில் அம்மன்னர்களைப் புகழ்ந்தும் வாழ வேண்டி இருந்தபோது, அவர்களின்

விருப்பமின்மையை வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலையில், இது போல் உள்ளார்ந்த பொருளைத்தரும், ஒரு தொழில்மேல் ஏற்றிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்று கொள்ள இடமுண்டு.

இப்பழமொழிகள் எல்லாம், காலந்தோறும் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே வந்துள்ளதை அறிவுறுத்துகின்றன. எனினும் கொங்கு நாட்டு மக்களுக்கு உழைப்பின்மேல் இருந்த நாட்டம் என்றும் குறைந்தது இல்லை. அதனால், எவ்வளவு தொல்லைகள் நேர்ந்தாலும் ''அழுது கொண்டு இருந்தாலும் உழுது கொண்டு இரு'' என்றும், தொழில் வேறுபாடு கருதாமல் ''தோட்டி போல் உழைத்துத் துரைபோல் சாப்பிடு'' என்றும் வழங்கும் பழமொழிகளை நோக்கும்பொழுது உழைப்பையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்துள்ளார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

அந்தந்த நாட்டிற்கு உரியனவாகக் கருதப்படும் பழமொழிகள் போக்கு-வரத்து வாய்ப்புகளினாலும் இன்றைய அறிவியல் வளர்ச்சியினாலும் தனித்தன்மை இழந்து, இன்று எல்லாப் பகுதிகளிலும் பொதுவாக வழங்குகின்றன.

பழமொழிகளில் சில கொச்சையாகவும், சாதி சமயங்களைக் கடுமையாகத் தாக்குவனவாகவும் இருக்கின்றன; இருந்த போதிலும் இன்றைய சமுதாயத்திற்கு வேண்டாதவைகளை நீக்கிவிட்டு, வேண்டியவைகளைத் தொகுத்து வைத்தால் வருங்கால மக்கட்குப் பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்பது திண்ணம். ஏனெனில் பழமெழிகள் அனுபவ வெளியீடுகள் ஆகும்.

---

**கோயம்புத்தூர் வானொலி நிலையம், தனக்குரிய பிராந்திய மக்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில், சமூக நாகரிகம்-கலை-மக்கள் பண்பாடு -இறைமை தொடர்பான பேச்சுக்களையும் உரைச் சித்திரங்களையும் ஒலிபரப்புவதைத் தன் சிறந்த குறிக்கோள்களில் ஒன்றாகக்கொண்டு செய லாற்றி வருகிறது.**

---

## மலருக்கு நல் வாழ்த்துக்கள்


நினைந்துநினைந்து, உணர்ந்துஉணர்ந்து, நெகிழ்ந்துநெகிழ்ந்து, அன்பே
நிறைந்துநிறைந்து, ஊற்றெழுங்கண் ணீர்அதனால் உடம்பு

நனைந்துநனைந்து, அருளமுதே நல்நிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று

வனைந்துவனைந்து ஏத்தும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்

புனைந்துரையேன், பொய்புகலேன், சத்தியம்சொல் கின்றேன்,
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

இராமலிங்க வள்ளலார்
(5576-6-134 மரணமிலாப் பெருவாழ்வு)




இடம் உதவி செய்தவர்கள்

# சக்தி ஆட்டோமொபைல்ஸ்

கள்ளிக்கோட்டை ○ கிளை : திருச்சூர்

# *கொங்குநாட்டுப் பழங்குடி மக்கள் - "காடர்கள்"

மா. நடராசன் எம்.ஏ.,
மந்திரிபாளையம்

பண்பாடும் மனித நாகரிகமும் அடையாத பழங்குடி மக்களாகிய முதுவர், குறும்பர், இருளர் வகையில் காடர் என்பவர் ஒரு இனத்தவர். இவர்கள் பரம்பிக் குளம் அருகே மூன்று மைல் தூரத்தில் உள்ள கூரியார்பட்டி என்னும் பெயர் கொண்ட காட்டுப் பகுதியில் வசிக்கின்றனர். இவர்கள் கூட்டம் கூட்டமாக வாழும் பழக்கத்தினர். இவர்கள் வாழும் கூரியார்பட்டியில் 30, 35 குடும்பம் இருப்பதைப் பார்க்கலாம். இவர்கள் பேசும் மொழி மலையாளத்தின் ஆதிக்கம் பெற்ற பண்படாத தமிழ்மொழி.

இவர்கள் இப்போது பண்பட்ட கிராம மக்களைப் போல அழகு சாதனங் களை எல்லாம் பயன்படுத்தத் தெரிந்து கொண்டனர். இவர்கள் இப்போது பருத்தி ஆடையைக்கூட உடுத்தப் பழகிக் கொண்டனர். காடர்களின் பெண்கள் தங்கள் உடம்பின் மேல்பகுதியை மறைப்பதேயில்லை. ஆனால் இப் போது அவர்கள் தங்களுக்கு அரசாலும், காட்டு இலாக்காவினராலும் கொடுக் கப்பட்ட மேலாடைகளை அணிகின்றனர்.

**காடர் தொழில்**

இவர்கள் வேட்டையாடி மாமிசம் பெற்று உண்பதையும், மரம் ஏறித் தேன் சேகரித்தலையும், காட்டில் விளையும் பொருள்களைச் சேகரித்தலையும் தொழி லாகக் கொண்டுள்ளனர். இவர்கள் மரம் ஏறுவதே தனிக்கலை. எவ்வளவு உய ரத்தில் தேன் இருந்தாலும் எவ்வளவு துன்பம் விளைவதாகத் தெரிந்தாலும் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படாமல் கண்ணில் பட்ட தேனை எடுக்காமல் விடுவதில்லையாம். தேன் எடுக்கும்போது இசைப் பாட்டுக்களைப் பாடி எடுப்பது வழக்கம் என்றனர்.

---

* 14—9—77-ல் ஒலிபரப்பாயிற்று.

### காடர்களின் வீடு—அமைப்பு

பெண்களே கூரை வேயும் அனுபவம் மிக்கவர்களாகவும், இந்தத் தொழிலில் ஆண்களைவிட நுணுக்கத் திறமை வாய்ந்தவராகவும் விளங்கினர்கள். இவர்கள் பழங்காலத்தில் சிறு குன்றுகளின்மேலோ ,ஓடையின் அருகோ, நீரூற்றின் அருகோ தான் வீடுகட்டி வசித்து வந்தனர் எனலாம். இவர்கள் வீடு நீண்ட செவ்வக மாக இருந்தனவாம். ஒரு குடும்பத்துக்கு மேலாக இருந்தால் ஒழிய காடனு டைய வீட்டில் சமையல் செய்யும் இடத்திற்கும், படுத்துறங்கும் இடத்திற்கும் இடையே இடைச் சுவர் காணப்படுவதில்லையாம். இவர்கள் மூங்கில் இலையால் தான் கூரை மேய்வர். மாதவிலக்கு காலத்தில் பெண்கள் தனி இடத்தில் மூங்கில் இலைக் கூரை வேய்ந்து அவர்கள் தனியாகச் சமைத்து உண்டு உறைந்தனர். இன்றும் இந்தப் பழக்கம் சேலம் மாவட்டங்களில் சிற்சில இடங்களில் காணப் படுகிறது.

### திருமணம்

ஒரு பெண்ணை ஓர் ஆணுக்கு மணம் செய்து வைக்க விரும்பினுல் மாப் பிள்ளை வீட்டார் அந்தப் பெண்ணைத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து ஒரு சில நாட்களுக்கு வைத்திருந்து அவள் நடவடிக்கைகளையும், செயல் திறனையும் கண்டு மதிப்பிட்டுத் தங்களுக்குப் பிடித்திருந்தால்தான் மணம் செய்து வைப்பர். பிடிக்கவில்லையென்ருல் மணம் செய்து வைக்க விரும்பமாட்டார்கள். புரட்சி, புதுமை என்று நாம் மேடையில் பேசும் விதவை மணம் என்பது அவர்களுக்குள் சர்வ சாதாரண நிகழ்ச்சி. அதே போல மண முறிவு (Divorce) என்பதும் சர்வ சாதாரண நிகழ்ச்சி. திருமணத்தில் மூங்கில் கொண்டு செய்யப் பட்ட சீப்பு மிகப் பெருமைக்குரிய பரிசுப் பொருளாகக் கருதப்படுகிறது. அதனைச் சாய்வாகத் தலைமுடியில் புகுத்தி வைத்துக் கொள்வது பெண்களின் பழக்கம். ஒருவனே ஒருத்தியோ தாம் விரும்பிய அளவுக்கு எத்தனை திருமணம் வேண்டு மென்ருலும் செய்து கொள்ள உரிமையுண்டு.

திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் விழாக்களுக்கும் ஊர்ப் பெரிய மனிதன் தலைமை தாங்குவது வழக்கம். அந்தப் பெரிய மனிதன் 'மூப்பன்' என்று அழைக்கப்படுகிருன். ஆனுல், காடர்கள், மாநில நேரடி நிர்வாகத்தின்கீழ் வருவதற்குமுன் 'மூப்பன்' போன்ற தலைவர் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த மூப்பனுக்கு வெள்ளிப்பூண் போட்ட தடி ஒன்று கொடுக்கப்பட் டுள்ளது. அவனுக்குக் குற்றவாளி எனக் கருதப்படுபவனுக்குத் தண்டனை கொடுக் கும் உரிமை முதல் எல்லா விதமான அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணின் தந்தை இறந்து விட்டால் அப்பெண்ணின் தாய்மாமன்தான் அவ ளுக்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். கணவன் இருக்கும் போதே ஒரு பெண் அவனேடு வாழ விரும்பவில்லை யெனில் இன்னெருவனேடு வாழ விரும் பினுல் அவனை மணந்து குழந்தை பெற்றும் வாழலாம். மணமான பெண் கணவனேடு வாழாமல் தந்தை வீட்டில் இருந்தால் அவள் திருமணம் ஆகாதவள் என்றுதான் அழைக்கப்படுவாள்.

### காடர்களின் பழக்க வழக்கங்கள்

காடர்களுக்குள் குலம், இனம், ஜாதி, போன்ற பிரிவுகள் இல்லை. குழந்தை பிறந்து சில நாள் கழித்து அக்குழந்தையின் தாயைக் கேட்காமலேயே தந்தையோ அல்லது வயதான பெரியவர் ஒருவரோ குழந்தைக்குப் பெயர் சூட்டுவது வழக்கம். குழந்தை பிறந்து முதல் பத்து நாளைக்குத் தாயும் சேயும் தங்கியிருக்கும் சாதாரணக்

குடிசைக்குப் பெயர் 'திண்டசாலா' எனப்படும். அதன் பிறகு தற்காலிக வசிப்பிடத்தில் மூன்று மாதங்களுக்கு அதாவது குழந்தைக்குப் பெயர் வைக்கும் நாள் வரை உறைவர். அதனைப் 'பதி' என்பர். குழந்தைக்கு வெள்ளிக்கிழமை யன்றுதான் காடர்கள் பெயர் சூட்டுவது வழக்கம். மற்ற நாட்களில் பெயரே சூட்டுவதே இல்லை. அந்த நாள் அவர்களுக்கு 'விழா நாள்'. அந்த நாளில் தாயும் குழந்தையும் எண்ணெய் தேய்த்துக் குளித்து மற்ற குடும்பப் பெண்களுடன் 'பதி'யிலிருந்து 'திண்டசாலா' வுக்குத் திரும்புவர். குடும்ப உறுப்பினர்களுக்கும் பக்கத்து வீட்டுக்காரர்கட்கும் அன்று மதியம் விருந்து அளிப்பர். அன்று 'பறை' அடித்துக் 'குழல்' ஊதி நடனம் ஆடுவர். (இந்தப் பழக்கம் ஏறத்தாழ இன்றைய கிறித்துவர்களின் ஒரு பகுதியினரிடையே புழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகிறது.)

முதல் திருமணத்தை விழாவாகக் கொண்டாடுவர். ஆனால், மறுமணத்தை விழாவாகக் கொண்டாடுவதில்லை. திருமணத்திற்கு முன் 'பல்லிகொத்து' கல்யாணம்' என்ற ஒரு விழா நடக்கும். காடர்கள் தங்களைப்போன்ற பழங்குடி மக்களைச் சிநேகிதர் என்றும், நம்மைப் போன்ற மக்களை 'நாட்டுக்காரன்' என்றும் 'கொங்கன்' என்றும் அழைக்கும் வழக்கம் உடையவர்.

காடர்கள் இரவு நேரத்திலோ தங்கள் வீட்டினுள்ளோ உடல் உறவு கொள்வதில்லை. காடன் தன் மனைவியிடம் 'விறகு பொறுக்கச் செல்லலாம்' என்றாலே அவள் புரிந்து கொண்டு இருவரும் தனியாகச் செல்வர். அப்படி விறகு பொறுக்கச் செல்வதாகச் சொன்னாலே மற்றவர் யாரும் உடன் வருவதாகச் சொல்லமாட்டார்கள். மிகச் சிறு குழந்தையை மட்டும் தாய் உடன் எடுத்துச் செல்வாள். அக்குழந்தையைச் சிறுபுதர் மறைவிலோ மூங்கில் புதர் மறைவிலோ படுக்கவைத்து விட்டுக் கணவனோடு செல்வாள். இதற்குக் காரணம் வீட்டில் அதிகக் கூட்டம் நிறைந்திருப்பதே. சுதந்திரமாக இருக்க முடியாது. அது மட்டும் அல்ல. குழந்தைகள் எதிரே உறவு கொள்ளக் கூடாது. எனவே குழந்தைகளும் கூட்டமும் இல்லாத ஓர் இடத்துக்குச் செல்வர்.

காடன் வளர்க்கும் விலங்குகளில் நாய்தான் மிக முக்கியமானதும் முதன்மையானதும் ஆகும். நாய் இல்லாமல் எந்தக் காடனும் வெளியில் செல்வதில்லை. நாய்கள் சிறியனவாக இருந்தாலும் அபாயகரமான தொழிலில் துணிவு மிகுந்தது.

நம்மிடம் வழங்கும் கோவலன், கண்ணகி கதையும், கம்பராமாயணக் கதையும், கிருஷ்ணன் பற்றிய கதைகளும் இவர்களிடையேயும் வாய்மொழி இலக்கியங்களாக வழங்குவதைக் காணலாம். இவர்களிடையே அந்தக் கதைகளின் நிகழ்ச்சிகளும் கதாபாத்திரங்களின் பெயர்களும் திரிந்தும் மருவியும் சிதைந்தும் வழங்கப்படுவதைக் காணலாம்.

காடர்கள் நடனம் ஆடும்போது பறை கொட்டியும் குழல் ஊதியும் இசை உண்டாக்குவர். அப்போது காடர் பெண்கள் அந்த நடனக் கால் மிதிக்கேற்ற வண்ணம் 'இஸ்' என்ற ஓசையையும் உண்டாக்குவர்.

காடர்களுக்குப் பிசாசு, பூதம், யட்சினி, காந்தர்வ—ஆகியவை பற்றிய நம்பிக்கையும், பயமும் உண்டு. ஆழமாகத் தண்ணீர் உள்ள அடர்ந்த மரம் நிறைந்த (இருள்) நிழல் பகுதியில் அவை வாழ்வதாக நம்புகிறார்கள்.

கூரியார் பட்டியிலிருந்து மேற்கே 2 மைல் தூரத்தில் ஒரு ஆற்றில் —ஒரு பகுதி 'கரிம் தாலாபாரா' என்று அழைக்கப்படுகிறது. அங்குதான் காடர்கள் பத்ரகாளி விழா நடத்துவர். இரண்டு பூசாரிகளுக்குக் கனவு வருமாம். அந்தக் கனவில் இந்த விழாவின் நாள் அறிவிக்கப்படுமாம். அந்த நாளில்தான் பத்ரகாளி வழிபடும் விழாவாகக் கொண்டாடப்படும்.

ஒரு வருடம் காடர்களுக்குள் விழாவின் பொருட்டுச் செய்யும் வசூல் தொகை குறைவாக ஆனபடியால் அந்த விழா தள்ளிவைக்கப்பட்டது. அதனால் காடர்களுக்குப் பல இன்னல்கள் விளைந்ததாம். ஒரு காடனுடைய மகன் காட்டு விலங்கொன்றால் கொல்லப்பட்டானும். அந்த ஆண்டிலிருந்து தவறாமல் பத்ரகாளி வழிபாடு நடைபெறுகிறதாம். கரிம்தாலாபாராவில் குளத்தை நோக்கி உள்ள பாறையில் பத்ரகாளிக்கு மூங்கில் பந்தல் இடுவர். அப்பந்தலின் கீழ் பத்ரகாளி சிலையை வைப்பர். அந்தக் குளத்தில் உள்ள மூன்று பிரதானப் பாறை களில் முதலில் இட்ட பந்தலைவிடச் சிறியதாக மூன்று பந்தல்களை இடுவர். இந்த மூன்று பந்தலிலும் மூன்று மரத் தெய்வங்கள் இருப்பதாக நம்புவர். பத்ரகாளி விழாவில் இது போன்று பந்தலமைத்து ஆடியும் குதித்தும் கொண்டாடுவது அவர்கள் வழக்கம்.

ஆதாம் ஏவாள்தான் முதன் முதலில் தோன்றியவர்கள் என்று நம்புவதைப் போலக் காடர்கள் மலவாய் மலன்குரத்தி ஆகிய இருவரும்தான் முதலில் தோன்றி அவர்களைத் தோற்றுவித்தவர்கள் என்று நம்புவர். மலவாய் மலன்குரத்தி ஆகிய இருவரையும் தெய்வங்களாகக் காடர்கள் மதிப்பர்.


ஒரு நாள் கடலில் நீர் பொங்கியதால் கரிமலைப் பகுதியில் உள்ள குகை களிலும் குன்றுகளின் நடுவிலும் வெள்ளம் வந்தது. அப்போது கரிமலையிலிருந்து இரண்டு சந்து வழியாக அந்த இருவரும் வந்தனர். வந்து உயிரினங்களை உண் டாக்கியதாகக் காடர்கள் நம்புவர். இந்த இரண்டு தெய்வங்களுக்குச் சிலையோ, கோவிலோ, பூசாரியோ எதுவுமே இல்லை. காடர்களுக்கு அபாயமோ களிப்போ வரும்போது இந்த இருதெய்வங்களை மனதில் நினைத்து வழிபடுவது வழக்கம்.

இறந்த உடனே காடர்கள் சவத்தைப் புதைப்பதில்லை. வீட்டுக்குள் மூன்று அல்லது நான்கு நாள் கிடத்தி வைப்பர். இறந்தவரின் ஆன்மாவுக்கு பிணம் வீட்டுக்குள் இருக்கும் நாளிலும், புதைத்தபின் ஏழு நாட்களிலும் உண்ணும் உணவில் ஒரு பகுதியை இறந்தவரின் ஆன்மாவுக்கு வைப்பர். அந்த உணவை அந்தக் குடும்பத்தின் மூத்தவர்கள் மட்டும் உண்பது வழக்கம். குறிப்பிட்ட இடத்தில்தான் எல்லாப் பிணத்தையும் புதைப்பர் என்பதில்லை. எந்த இடத்தில் குழி வெட்டமுடியுமோ அந்த இடத்தில்தான் புதைப்பராம். புதைகுழியில் புதைக்கப்படுபவர்களுடன் ஒரு தடி, மண்பானை, தேங்காய்த் தொட்டி அகப்பை—ஆகியவற்றையும் சேர்த்துப் புதைப்பர்.

பெண் பிரேதத்தின் மேல் அவள் அணிந்த அணிகலன்களில் ஒன்றையும், ஆண் பிரேதத்தின் மேல் காட்டுக் கத்தி ஒன்றையும் வைத்துப் புதைப்பர். குழந்தை இறந்து விட்ட பின் அதன் தாய் தன் மார்பில் இருந்து பாலைக்

கறந்து அந்தக் குழந்தையின் புதைகுழி இருக்கும் திசையில் தெளிப்பது வழக்கம். இது நம்மவரிடையே இல்லாத ஒரு மாறுபட்ட வழக்கம்.

இவ்வாறு பழைய சம்பிரதாய மரபுகளோடு அதிகப் படிப்பும் அதிலிருந்து வழுவா நிலையும் கொண்ட காடர்கள் பிழைப்புக்காக வேண்டி நம் மின மக்களோடு புழங்கவும் நெருங்கவும் பழகிக் கொண்டதனுல்.



**பொன்விழாக் கொண்டாடும் இந்திய வானெலி சென்ற ஆண்டுவரை 6,42,560 மணி நேரம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியுள்ளது.**

## கோவை வானொலியின் பொன்விழா சமயத்தில்

## மணம் பரப்பும் மலருக்கு நல்வாழ்த்துக்கள்!

திருமகள் காதலி னானும்
திகழ்தரு மாமலர் மேலைப்
பெருமகனும் அவர் காணாப்
பேர்அழல் ஆகிய பெம்மான்
மருமலி மென்மலர்ச் சந்து
வந்திழி காவிரி மாடே
பருமணி நீர்த்துறை யாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே

—திருஞானசம்பந்தர்

திருமகள் கணவனாகிய திருமாலும், தாமரை மலர்மேல் அமர்ந்த பிரமனும் தேடிக் கண்டடைய முடியாத பெரும் தீ வடிவான எங்கள் பெருமான். மணம் மிக்க மகரந்தம் வண்டலிடும் இந்தக் காவிரிக் கரையில் எழுந்தருளியிருக்கும் திருப்பாண்டிக்கொடுமுடி யாரே ஆவார்.

**இடம் தந்து உதவியவர்கள்**



# ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ்

Dr. நஞ்சப்பா ரோடு,
கோயம்புத்தூர்.



# *கொங்குநாட்டுப் பழங்குடி மக்கள் - "இருளர்"

**வி. கே. பத்மநாபன்**
துணைப் பேராசிரியர், (அரசியல்) அரசினர் கலைக் கல்லூரி, கோவை

தனிமனிதனுடைய வாழ்க்கையை ஆராய்வதே மிகச் சிக்கலான காரியமாக இருக்கும்போது ஒரு இனத்தின்—அதுவும் பழங்குடி இனத்தின்—வாழ்க்கையை ஆராய்வது கடினமல்லவா? என்றாலும் அதற்காக ஆராய்ச்சியை விட்டுவிட முடியுமா என்ன? இப்போது நாம் இருளர்தம் வாழ்க்கையைச் சமூக, பொருளாதார, அரசியல், சமய, இலக்கியப் பெருமைகள் என்னும் தலைப்புகளில் ஆராயலாமா?

இருளர், இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின்படி 91,289 பேர். இவர்கள், பொருள் ஈட்டுவது குறித்துத் தம் குடியிருப்பை அடிக்கடி மாற்றியதாலோ, இருண்ட காடுகளில் உறைவதாலோ, இப்பெயர் பெற்றிருக்கக்கூடும். இக்கோவை மாவட்டத்தில் இப்போது கோவை நகரம் இருக்குமிடத்திலேயே வந்து தங்கினர். அந்த இருளர்களின் தலைவன் கோவன் என்பவன். அவனே இந்த ஊரை முதன்முதல் உருவாக்கியவன். கோவன் உருவாக்கிய புதூர் கோவன் புதூர் ஆயிற்று. இத்தகைய ஒரு வழக்கும் சொல்லப்பட்டு வருகின்றது. இது ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியது. இவர்கள் கோவை மாவட்டத்தில் மட்டுமின்றி நீலகிரி, செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் பரவியுள்ளனர். இருளர்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். மலைகளிலும் காடுகளிலும் வசிப்பவர் ஒரு பிரிவினர். சமவெளிகளில் வசிப்பவர் மற்றொரு பிரிவினர்.

**இந்தப் பகுதியில்**

கோவை, நீலகிரி மாவட்டங்களில் உள்ள இருளர்கள் மலைவாழ்மக்கள் ஆவர். கோவை மாவட்டத்தில் அட்டப்பாடி மலை, சிறுவாணிமலை, வெள்ளியங்கிரி முதலிய பகுதிகளிலும் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் பகுதியிலும் இவர்கள் வாழ்கின்றனர். கோவையில் உள்ளவர் 'இருளப்பள்ளர்' என்றும் நீலகிரியில்

---

* 19—10—77-ல் ஒலிபரப்பாயிற்று

உள்ளவர் 'மலைநாட்டு இருளர்' என்றும் அழைக்கப் பெறுகின்றனர். இருளப் பள்ளர், மலைநாட்டு இருளர் ஆகிய இருவரிடையேயும் சமூகப் பழக்க வழக்கங் களில் வேற்றுமைகள் நிரம்பக் காணப்படுகின்றன. மேலும், இவ்விரு பிரிவின ரிடையே கொள்வினை கொடுப்பினை இல்லை. தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வசிக்கும் இருளர்கள், நிலம் வாழ் மக்கள் ஆவர்.

இருளர், இருளப்பள்ளர், இல்லிகாரு, காடுபூஜாரி, என்றெல்லாம் அழைக் கப் பெறுகின்றனர். இருளர்கள் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர்களா, ஆஸ் திராய்டு இனத்தைச் சார்ந்தவர்களா என்ற ஆராய்ச்சிக்கு இன்னும் முடிவே கிட்ட வில்லை.

இருளர்கள் இனக்குழு நிலையிலிருந்து இன்னும் முன்னேறாத மக்கள் என்றாலும் இவர்கள் மிக வலுவுடைய ஆணாதிக்கச் சமுதாய நெறியைக் கடைப் பிடிக்கின்றனர். இருளப்பள்ளரிடையே 12 முகுலங்கள் (1. குப்பெ; 2. சம்பெ; 3. கரிட்டிகை; 4. குறுநகெ; 5. தெவனெ; 6. புங்கெ; 7. கொடுவெ; 8.பேரதாரெ 9. குப்பிலி; 10. உப்பினி; 11. வெள்ளை; 12. ஆறுமூப்பு) காணப்படுகின்றன. இருளரிடையே உயர்ந்தது என்றும் தாழ்ந்தது என்றும் இரண்டு அகமணக்குழுக் கள் காணப்படுகின்றன. உயர்ந்த அகமணக் குழுவில் ஏழு உட்பிரிவுகள் (1. குப்பெ 2. சம்பெ; 3. தெவனே; 4. கல்கட்டி; 5. குறுநகெ; 6. கொடுவெ; 7. புங்கெ) உள்ளன. மற்றொரு அகமணக் குழுவில் ஆறு உட் (1. உப்பளிகெ; 2. வெள்ளிளகெ 3. பேராத; 4. போரிகே; 5. வெட்டகெ; 6. பணிகெ) பிரிவுகள் உள்ளன.

இருளர் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்கு 'பதி' என்பது பெயர். மூங்கில், மண், கணுங்குப் புல், கரும்புத்தோகை, பாக்குமட்டை இவற்றாலான முப்பது வீடுகளுக்கு மிகாத இப்பதிகள் இயற்கைப் பொருள்களின் பெயர்களையோ, காரணப் பெயர்களையோ பெற்றுள்ளன.

**மணமும் முறையும்**

இருளர்களிடையே மூவகை மணமுறைகள் உள்ளன. மாப்பிள்ளையின் தாய்தந்தையர் பெண்வீட்டாரிடம் முறையாகப் பெண் கேட்டு மணம் முடிப்பது ஒரு மரபு. மாப்பிள்ளை தனக்குப் பிடித்த பெண்ணுடன் தொடர்பு கொண்டு, அவள் வீட்டிலேயே வாழ்க்கை நடத்திப்பின் திருமணம் செய்து கொள்ளுதல் மற்றொரு மரபு. பருவம் அடைந்த பெண்ணை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று வைத்திருந்து வாழ்க்கை நடத்தியபின் திருமணம் செய்து கொள்வது பிறிதொரு மரபு.

இருளர் திருமணத்தில் பரியப்பணம் மிக முக்கியமானது. பரியப் பணத்தைத் தவிர்க்க, பரிமாற்றத் திருமணங்கள் செய்து கொள்வோரும் உண்டு. திருமணங்களில் ஜாத்தி என்று கூறப்படும் அகமணக் குலப் பெரியவரே மிக முக்கிய பங்கு வகிக்கின்றார். மாப்பிள்ளைவீட்டு ஜாத்தியின் மனைவி, மணப்பெண் ணுக்குத் தாலி அணிவிக்கின்றாள். இருளரிடையே, பெண், பருவம் அடைவதற்கு முன்பே நிகழ்கின்ற திருமணங்களும்; விதவைத் திருமணங்களும், உடன்போக்குத் திருமணங்களும் காணப்படுகின்றன. இருளப் பெண்டிர் மணவிலக்கு செய்து கொண்டு பின் வேறு ஒருவனை மணம் செய்து கொள்வதும் உண்டு. ஆனால், இறந்தவனுடைய மனைவி, இறந்தவனின் உடன்பிறந்தவரைத் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டு உள்ளது.

### மகப் பேறு

பெண் கருவுற்றிருக்கும் காலத்தில் சிற்சில சடங்குகள் செய்யப்படுகின்றன. இருளர் குழந்தை பெற்றவளை வீட்டின் முன்பகுதியில் ஒதுங்கி இருக்கச் செய்வர். மூன்று மாதம் கழித்துத் தாய்க்குத் தீட்டு கழித்ததும், குழந்தையைத் தொட்டிலில் இடுகின்றனர். இருளர் வாழ்க்கையில் மற்றொரு முக்கிய சடங்கு பூப்பு விழா ஆகும். பூப்பெய்திய பெண்ணின் தாய் மாமன், அல்லது முறை மாப்பிள்ளை அவள் இருக்க குடிசை கட்டிக் கொடுக்கின்றான். ஏழாவது நாள் காலையில் இக்குடிசை எரிக்கப்பட்டு விடுகின்றது. பின் மூன்றாவது வாரத்திலாவது மூன்றாவது மாதத்திலாவது சிறு விழா நடைபெறுகின்றது.

### மரணம்

இருளர் சாவுச் செய்தி கிடைக்கின்றபோது ஒருங்கு கூடுகின்றனர் பிணத்தை நீராட்டிய பாடையில் வைத்து இடுகாட்டிற்குக் கொணர்கின்றனர். இறந்தவனுடைய மனைவியின் கருக மணியையும், தலைமயிரையும் பிணத்துடன் சேர்த்துப் புதைக்கிறனர். ஓராண்டு கழித்து நினைவு விழா எடுக்கப்படும் போது, இறந்தவனுக்கு 'நடுகல்' வைக்கப்படுகின்றது.

### பொருளாதார வாழ்க்கை

ஒரு இனத்தினர் வாழும் நிலப்பரப்பை வைத்து அவர்தம் பொருளாதார வாழ்க்கை அமைகின்றது. சமவெளிகளில் வாழும் இருளர்கள் சிறுதான்யங்களைப் பயிரிடும் விவசாயிகளாகவும் விவசாயக் கூலிகளாகவும் கால்நடை பேணுவோராகவும் வாழ்கின்றனர். மலைவாழ் இருளர்கள் மரம்வெட்டுதல், வேட்டையாடுதல், காட்டு நிலங்களைப் பயிரிடல் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளனர். இருளர் குறிப்பிட்ட உணவுப் பழக்கத்தைப் பின்பற்றுவர் அல்லர். அரிசி, கேழ்வரகு, தினை, வேர்கள், கிழங்குகள், காய்கனிகள் ,வேட்டையினால் கிடைத்த பறவைகள், விலங்குகள் ஆகியன இவர்தம் உணவாகும்.

### அரசியல் வாழ்க்கை

இருளர் வாழும் ஒவ்வொரு பதிக்கும் 'மூப்பன்' என அழைக்கப்பெறும் தலைவன் உண்டு. மூப்பன் பொது விருப்பத்தின் மூலம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றான். பூப்புவிழா, திருமணவிழா, ஈமச் சடங்கு போன்றவற்றை முன்னின்று நடத்தி வைப்பதும், தெய்வத்துக்குரிய வழிபாட்டை குலநலன் முன்னிட்டு முடிப்பதும் மூப்பனின் பணிகளாகும். மணமுறிவு வழக்குகள், சண்டைகள் ஆகியனவும் மூப்பனால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மூப்பனுக்குத் துணை செய்ய ஒரு உபதலைவனும் செயல்படுகின்றான். நிலம் வாழ் இருளர்களிடையே, மூப்பனுக்கு ஆலோசனை நல்க ஐவர் குழு ஒன்று பணிபுரிகின்றது.

### சமய வாழ்க்கை

இருளர் இயற்கைத் தெய்வங்களையும் சக்தியையும் வழிபடுகின்றனர். பாலமலை ரங்கசாமியும், காரமடை ரங்கசாமியும், மாரியம்மனும் இவர்கள் வணங்கும் தலையாய தெய்வங்கள். சைவ, வைணவ, வேறுபாடுகளை இவர்கள் பாராட்டுவதில்லை. வைகாசி விசாக நாளில் சாடி அம்மனுக்கு இருளர்கள் பெரும் விழா எடுக்கின்றனர். எட்டு நாட்கள் நீடிக்கும் இவ்விழா மிகச் சிறப்புடையது.

இருளரில் சிலர் வெள்ளியங்கிரி மலைத் தெய்வத்தையும், புலியின் காலடிகளையும் துதிக்கின்றனர். பெரும்பாலான தெய்வங்களுக்கு இருளர்கள் கோயில்களேதும் சமைக்கவில்லை. கற்களை நட்டு அவ்வடிவத்திலேயே தெய்வங்களை நினைந்துருகு கின்றனர். சமவெளி வாழ் இருளர்களிடையே இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் வேரூன்றி இருப்பதை நாம் உணரலாம்.

**இலக்கியமும் இசையும்**

இருளர் பேசும் மொழி இருளர் மொழி ஆகும். இது தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இக்கிளைமொழியில் தமிழ், கன்னடம், மலையாளம் ஆகியவற்றின் ஊடுருவல் அதிகம் உண்டு. என்றாலும் இக்கிளை மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை. எனவே இருளர் இலக்கியம் நாட்டுக்கதைகளும் நாட்டுப் பாடல்களுமே. இருளமொழியோடு படக மொழியும் ஊடுருவி நிற்பதால், இருளர் படகப் பாடல்களையும் இசைக்கின்றனர். இப்பாடல்கள் பொதுவாக இயற்கையை வழுத்துவனவாகவும், பாலுணர்வு பற்றியும் அமைந்துள்ளன. இசையாகவும், இலக்கியமாகவும் உள்ள நாடோடிப் பாடல்களுக்கு, இருளர், ஆட்டமென்னும் உயிர்ப்பையும் அளித்து மகிழ்கின்றனர்.

''ஆடாடோ நவிலே! ஆடிவா நவிலே!
இச்சிக் கொம்பிலே அறுதடு நவிலே!
சக்கெ கொம்பிலே அறுதடு நவிலே!

ஆடாடோ நவிலே! ஆடி வா நவிலே!
புங்கெ கொம்பிலே அறுதடு நவிலே!
பாஸ்கர கொம்பிலே அறுதடு நவிலே!

ஆடுகின்ற மயிலே, ஆடி வா மயிலே; இச்சி மரக் கிளையிலே தங்குகின்ற மயிலே;பலா மரக் கிளையிலே தங்குகின்ற மயிலே, ஆடி வா மயிலே, புங்கக் கொம்பிலே, தங்குகின்ற மயிலே, பாஸ்கரக் கிளையிலே தங்குகின்ற மயிலே, ஆடி வா மயிலே, என்பது இதன் பொருள்.

மான் தோலும், வெள்ளாட்டுத்தோலும் பயன்படுத்தப் பெற்ற கடிமெ, பொரெ, தம்பெட்ட ஆகிய தோற்கருவிகளையும், மூங்கில் பேய்ச்சுரைக்காய், கும்மி ஆகியவற்றால் உருவான மங்கெ, புகிரி, நாகசுர, குவாலு ஆகிய துளைக் கருவிகளையும் இரவுகள், ஓய்வு நேரங்கள், திருமணங்கள், விழாக்கள், சமயச் சடங்குகள் ஆகிய நேரங்களில் இசைத்து இருளர் இன்பமெய்துகின்றனர்.

இருளர், கருமை நிறமும் நடுத்தர உயரமும் உள்ளவர்கள். எளிய உணவு, உடை, பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ளவர்கள். கல்வியில் அதிக நாட்டம் செலுத்தாதவர்கள். வெற்றிலை, கள், பச்சைக் குத்திக் கொள்ளுதல், நகைகளை விரும்பி அணிதல், வேட்டையில் தீரம் காட்டுதல் ஆகியவற்றை உடன் கொண் டவர்கள். ஆவி, ஆன்மா போன்றவற்றில் நம்பிக்கை உடையவர்கள். ஆனால் என்றென்றும் தமது உழைப்பையே நம்பி வாழ்கின்றவர்கள். இயற்கையோடு ஒன்றிய, புன்மை இல்லாத வாழ்க்கையை மேற்கொண்டிருப்பவர்கள்.

# *கொங்குநாட்டுப் பழங்குடிமக்கள் - "குறும்பர்"

டாக்டர் ஆர். சந்திரசேகரன்
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, சேலம்

நாகரிக உலகத்தின் இயந்திரக்கரங்கள் எட்டமுடியாத தொலைவில் காடுகளிலும் மலைகளிலும் கோடிக்கணக்கான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். புறநாகரிகத்தின் காலத்திற்கேற்ற மாறுதல்களை அவர்கள் பெற்றிராவிடினும், அக நாகரிகத்தில் உன்னதமான தலைசிறந்த பண்பாட்டுக் கூறுகளைப் பெற்றுள்ள அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டு மூலகங்களையும் ஆராய்வதில் மானிடவியல் அறிஞர்கள் தற்காலத்தில் மிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். மிக எளிமையாகத் திகழும் இவர்கள் வாழ்க்கை முறைகளே உலகப் பண்பாட்டில் வரலாற்றின் அடித்தன்மைகளாக அமைகின்றன.

**இந்தியாவில்**

இந்தியாவில் மட்டும் 450 இனங்களைச் சேர்ந்த சுமார் நான்கு கோடி பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 25 இனப் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுள் பெரும்பான்மையோர் கொங்குப் பகுதியான கோவை, நீலகிரி, சேலம் மாவட்டங்களில் வாழ்கிறார்கள். நீலகிரி, மாவட்டத்தில் தோடர், கோத்தர், இருளர், ககவர், பனியர், காட்டுநாயக்கர் குறும்பர் போன்ற இனமக்களும், கோவை மாவட்டம் ஆனைமலை, வெள்ளியங்கிரி போன்ற பகுதிகளில் காடர், மலசர், முதுவர், ஊராளி, புலையர் போன்றோரும், சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைத்தொடர், ஏர்க்காடு மற்றும் கொல்லிமலைத் தொடர்களில் மலையாள, கொறவர், சோளகர், ஆதியர், தொட்டிய நாயக்கர் போன்றோரும் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் மானிடவியல் அறிஞர்களின் கவனத்தை மிகவும் ஈர்த்தவர்கள். குறிப்பாக நீலகிரி தோடர்களைப் பற்றிய ஆராய்ச்சியில் மிக அதிக அளவில் உலக முழுதுமுள்ள ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நீலகிரி மலைப் பகுதிகளில் வாழும் குறும்பர்களும் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றனர்.

---

* 17—8—77-ல் ஒலிபரப்பாயிற்று

**பலவகையினர்**

குறும்பர்களில் பலவகையான இனப்பிரிவுகளையுடைய மக்கள் காணப்படுகிருர்கள். ஜேன் குறும்பர்கள், பால்குறும்பர்கள், இடையக் குறும்பர்கள், பெட்டா குறும்பர்கள், ஊராளிக் குறும்பர்கள், முள் குறும்பர்கள் என்ற பல பெயர்களால் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். குறும்பர்கள் என்ற பெயரால் நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் வாழ்ந்துவந்தாலும் அவ்வவ் வாழிடங்களுக்கேற்ப அவர்களுடைய வாழ்க்கை நடைமுறைகள் மாறுபடுகின்றன.

**உறைவிடங்கள்**

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர்ப் பகுதியில் குறும்பர்கள் மிக அதிகமாகக் காணப்படுகின்றனர். இவர்களுடைய முகச் சாயலையும், உடம்பின் தோற்றத்தையும், சில பழக்க வழக்கங்களையும் கொண்டு பர்மாவின் வட எல்லையிலுள்ள பதாங் இனப் பழங்குடி மக்களோடும், ஜாவா, சுமத்ரா, இந்தோனேஷியா முதலிய பகுதிகளில் வாழும் சிலவகைப் பழங்குடிகளோடும் ஒப்பிட்டுக் கருதுகிருர்கள் சில ஆய்வாளர்கள். நீலகிரி மாவட்டத்தில் கார்குடி, கக்கநல்லா, தொரப்பள்ளி, தெப்பக்காடு, மசினக்குடி போன்ற ஊர்களில் குறும்பர்கள் வசித்து வருகிருர்கள்.

பெரும்பாலும் ஒரே அறையாக உள்ள வீடுகளில் இவர்கள் வாழ்கிருர்கள். வீடுகள் மூங்கில் பொருள்களால் அமைக்கப்படுகின்றன. வைக்கோலினுல் கூரை அமைக்கின்றனர். சுற்றுவட்டமாக, தனித்தனியே வீடுகள் அமைந்திருக்கும். இவற்றுக்கு நடுவில் ஏறத்தாழ ஐம்பது பேர் இரவில் படுத்துறங்குவதற்கான பெரிய நீண்ட அறை, பல குடியிருப்புக்களில் காணப்படுகிறது. வன விலங்குகளின் தாக்குதல் நேரும் காலங்களில் இந்தப் பொது மன்றத்தைச் சுற்றி கட்டைகளை அடுக்கி நெருப்பை மூட்டிவிட்டு உள்ளே பாதுகாப்பாக அவர்கள் உறங்குவது வழக்கம்.

**தலைவன்**

ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒவ்வொரு தலைவன் உள்ளான். இத்தலைவனுக்கு மூப்பன் என்று பெயர். முள் குறும்பர்களிடையே இத்தலைவனுக்குப் பூர்ணவன் என்று பெயர். தம்மிலும் வயதில் மூத்தோரைப் போற்றி வழிபாடு செய்வதை இன்றியமையாக் கடமை வழக்கமாகவே கொண்டிருக்கும் இவர்கள், குடியிருப்பில் மிகவும் வயது முதிர்ந்தவரையே மூப்பனுக்கித் தேர்ந்தெடுக்கின்றனர். குறும்பர் சமூகத்தின் எல்லாச் செயல்களையும் இயக்கி, வழிநடத்திச் செல்பவர் இந்த மூப்பரே ஆவர். திருமணமாயினும் சரி, திருவிழாக்கள் ஆயினும் சரி, மரணச் சடங்குகளாயினும் சரி, அனைத்துச் செயல்களும் இவர் மேற்பார்வையிலேயே நடக்கும். ஏன்—இனத்தைச் சேர்ந்தவர்கள் குற்றங்கள் செய்தால் அவர்களைத் தண்டிக்கும் அதிகாரமும் இவர்களுக்கு உண்டு.

**தோற்றம்**

ஆண் பெண் இருபாலாரும் கறுத்த நிறமும், உயரமான வலிமையான உடல் அமைப்பையும் கொண்டவர்களாக இருக்கிருர்கள். பெரும்பாலான மங்கையர்கள் நெற்றியிலும் உடலிலும் பச்சை குத்திக் கொண்டு இருக்கின்றனர். ஆண்களும் பெண்களும் கைகளில் பித்தளைக் காப்புகளை அணிந்து கொண்டுள்ளனர். பெண்கள் வலிமையான துப்பட்டியினை நெஞ்சுக்கு மேல் இழுத்துக் கட்டிக் கொண்டுள்ளனர். மூங்கிலாலான பொருட்களையே இவர்கள் பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர்.

**உணவும் தொழிலும்**

குறும்பர்கள் வயல்களில் வேலை செய்தும், வேட்டையாடியும் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொள்கின்றனர். சாமை, கேப்பை முதலிய தானியங்களையும், வேட்டையாடிக் கொண்டுவந்து இறைச்சியை யும், காடுகளில் கிடைக்கும் பழவகைகளையும், கிழங்கு வகைகளையும் இவர்கள் உண்கிறார்கள். மலைச் சரிவுகளில் உயர்ந்த மரங்களிலிருந்து தேன் எடுத்து விற்பனை செய்கின்றனர். எல்லாவகை விலங்கினங்களின் இறைச்சியையும் இவர்கள் உண் கிறார்கள். வேட்டைக்குச் செல்லும்போது கூட்டம் கூட்டமாகவே செல்கிறார்கள் வேட்டையாடி வந்த இறைச்சியைப் பங்கு போட்டுக் கொண்டு உண்பது இவர்கள் வழக்கம்.

**திருமணப் பழக்கம்**

ஒரே பெண்ணைப் பல பேர் மனைவியாக வைத்திருக்கும் (Polyyondary) திருமண முறை, முற்காலத்தில் பெட்ட குறும்பரிடையே மிகச் சாதாரணமாக இருந்து வந்ததாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் தற்காலத்தில் இந்த வகை வழக்கம் அடியோடு அழிந்து விட்டது. பெரும்பாலும் பெரியவர்கள் பார்த்து நிச்சயம் செய்து வைக்கிற திருமணங்களே நடைபெறுகின்றன வாயினும், காதல் திருமணங்களும் சாதாரணமாக நடை பெறுகின்றன. காதல் கொண்ட காதலர் தம் காட்டை விட்டு அடுத்த பகுதிக்குச் சென்று வாழ்க்கையைத் தொடங்குவார்கள். பிறகு உறவினர் அழைத்து வந்து திருமணம் செய்து வைப்பர். திருமணத்தில் தாலி கட்டப்படுவதில்லை. முள் குறும்பர்களிடையே மட்டும் திருமண நாளுக்கு முன்னரே, மணப்பெண்ணின் தாய் மாமனால் பெண் ணின் கழுத்தில் தாலி கட்டப்படுகிறது. கணவன் இறந்த பிறகும்கூட இந்தத் தாலி மனைவியின் கழுத்திலிருந்து அகற்றப்படுவதில்லை. திருமணத்தின்போது இரவில் இறைச்சிவிருந்து பரிமாறப்படுகிறது.

கணவன் மனைவியருக்குள்ளே பிளவு ஏற்பட்டால் பஞ்சாயத்தார் முன் னிலையில் அவர்கள் திருமணமுறிவு செய்து கொள்ளலாம். திருமணமுறிவு செய்து கொண்டவர்களும், விதவையரும் மறுபடியும் மிக இயல்பாகத் திருமணம் செய்து கொண்டு மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். இரண்டு மூன்று மனைவி யரைத் திருமணம் செய்து கொள்ளவும், குழந்தை இல்லையென்றால் தத்துப் பிள்ளை எடுத்து வளர்ப்பதும் இவர்களிடையே சாதாரணமாகக் காணப்படுகின்றன. திருமணங்கள் பெரும்பாலும் உறவிலேயே நடைபெறுகின்றன. அல்லது ஒரே குடியிருப்புக்குள்ளேயே நடைபெறுகின்றன. முள்குறும்பர்கள் மட்டும் தாய் மாமன் வீட்டிலே திருமணம் செய்து கொள்வதில்லை. கூடியவரை அயற்குடி யிருப்புக்களிலேயே திருமண உறவுகளை வைத்துக் கொள்கிறார்கள்.

**இறுதிச்சடங்கு**

இவ்வினத்தில் இறந்தவர்களை மூன்று நான்கு நாட்கள்கூட உறவினர்கள் வரும்வரை பாதுகாத்து வைத்திருப்பர். பிணம் கெட்டுப் போகாமல் இருக்க அதன்மேல் சில வகை பச்சிலைகளைப் பூசுகிறார்கள். வயிற்றில் உப்பு வைக்கிறார்கள். காட்டுக் கொம்புகள், மூங்கில்கள் போன்றவற்றைக் கொண்டு பாடை கட்டுகிறார் கள். மனைவி இறந்தால் கணவன் மொட்டை அடித்துக் கொள்கிறான். கணவன் இறந்தால் மனைவி கழுத்து நகையைக் களைகிறாள். இறந்தவர்களை இவர்கள் எரிப்பதில்லை. புதைக்கவே செய்கிறார்கள். புதைக்கும்போது அவர்கள் பயன் படுத்திய பொருட்களையும் சேர்த்துப் புதைத்துவிடுகிறார்கள்.

**கலையும் களிப்பும்**

இசை, நடனம் போன்ற கலைகளிலும் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு. இருளர்களைப் போல இசைக்கலையில் மிகுந்த ஈடுபாடு இல்லாவிடினும் மூங்கில் பொருளிலான சில இசைக் கருவிகளை இவர்கள் அவ்வப்போது பயன்படுத்துகிறார்கள். விழாக்காலங்களிலும், குலதெய்வங்களுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிடும் சமயங்களிலும், திருமணச் சடங்குகளிலும், மயானச் சடங்குகளிலும் ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக நடனமாடுகின்றனர். அவ்வச் சடங்குகளுக்கேற்ப நடனங்கள் மாறுபடுகின்றன. சில சமயங்களில்—இரவுகளில் நெருப்புக் கட்டைகளைத் தீ வைத்து அவ்வெளிச்சத்தில் ஆடவர் இசைக் கருவிகளை இசைக்கப் பெண்கள் நடனமாடுகின்றனர்.

**இறையுணர்வும் கடவுளரும்**


குறும்பர்கள் ''மாரி,'' ''பொம்மன்'' ஆகிய இரு குலத்தெய்வங்களை இன்றும் வழிபடுகிறார்கள். நீலகிரி இருளர்களைப் போலவே இக்குறும்பர்களும் பண்ணாரி மாரியம்மன் மீது பெரும் பக்தி கொண்டிருக்கிறார்கள். பண்ணாரி மாரியம்மன் திருவிழாவை யொட்டியே இவர்கள் திருவிழாக்களும் அமைகின்றன. இவர்கள் குடியிருப்புக்களில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு சிறு கோவில் உண்டு. மக்கள் தனித்தனியாகவே, தாம் விரும்பும் காலங்களில் விரும்பும் நேரத்தில் பூசை செய்து கொள்ளலாம். இதைத் தவிர பூசாரி ஒருவனும் உண்டு. அவனுக்கு ''பொம்ம தேவன்'' என்று பெயர். மூப்பனைப் போலவே இந்த பொம்மதேவனுக்கும் இவர்கள் குலத்தில் மிகுந்த செல்வாக்கு உண்டு. தவறு செய்தவர்களைத் தண்டிக்கவும், பிணக்குகளை நீக்க வழக்கு கேட்கவும் கூடும். பஞ்சாயத்துக் கூட்டங்களிலும் பொம்ம தேவன் முக்கியமானவன்.

நெருப்பு வழிபாடு இவர்களிடையே இடம் பெற்றிருப்பது மானிடஇயல் ஆய்வாளர்களின் கவனத்திற்கு உரியதாகும். மூல தெய்வமாகவே நெருப்பினை இவர்கள் வழிபடுகின்றனர். விழாக் காலங்களில் நெருப்பினை மூட்டி அதற்குப் பலவகையான சடங்குகள் செய்து வழிபாடு செய்கின்றனர். மாரியைப் பெண் தெய்வமாகவும், நெருப்பினை ஆண் தெய்வமாகவும் இவர்கள் கருதுகின்றனர். பருவ காலங்களில் நிகழ்த்தும் பெருவிழாக்களைத் தவிர, ஒவ்வொரு குடும்பத்தினரும் தமக்குப் பொருள் வருவாய்ச் சேரும் காலத்தில் சிறு விழாக்கள் எடுக்கின்றனர்.

கொங்கு மாவட்டப் பழங்குடி மக்களிடையே மந்திரம், சூனியம் போன்றவற்றில் அதிக ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவர்கள், குறும்பர்களே ஆவர். அதனால் இவர்களுக்கு அருகேயுள்ள பகுதிகளில் வாழும் இருளர்கள், குறும்பர்களைக் கண்டால் மிகவும் அஞ்சுகிறார்கள்.

**பேசும் மொழி**

இவர்கள் பேசும் மொழி குறும்ப மொழி, தற்சமயம் எழுத்துக்கள் அற்ற பேச்சு மொழியே. தமிழ்ச் சொற்களும், மலையாளச் சொற்களும், கன்னடச் சொற்களும் நிறைய விரவி வருகின்றன. இம்மொழி தனிமொழியா அல்லது கிளை மொழியா என்று தற்காலத்தில் மொழியியல் அறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.




விரிசடை நாயகன் ஒருபுடை கவரும்
**திரிபுர சுந்தரி**
—கொடுமுடி



பேரூர் — ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி



ஈரோடு வட்டம்—பெரியசேமூர் நடுகற்கள்



சங்ககிரிக்கோட்டை - இரண்டாவது வாயில்

# *கொங்குநாட்டுக் கோட்டைகள்- சங்ககிரி மலைக்கோட்டை

புலவர் மணியன்
அரசு உயர்பள்ளி, கணபதி, கோவை.

கோவையிலிருந்து சேலம் செல்லும் வழியில், ஈரோட்டிற்கும் சேலத்திற்கும் இடையில் சங்கு வடிவத்தில் வானத்தில் எழுந்து நிற்கிறது பாருங்கள், அதுதான் ''சங்க கிரி மலை.'' ஆள் அரவமற்றது—அமைதி ஆட்சி புரியும் இந்த மலையில்—ஒரு காலத்தில்—.......

பீரங்கி முழக்கமும்

போர் வீரர்களின் குதிரைக் குளம்பொலியும் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

விஜய நகர மன்னர்கள் — மதுரை நாயக்கர்கள்—ஹைதர் அலி—திப்பு சுல்தான்—வெள்ளைப் பரங்கியர்கள்—இன்னும் எத்தனையோ குறு நில மன்னர்களின் காலடி பட்ட இந்த மலை, என்பதை எண்ணிப் பார்க்கும் போது நம் நெஞ்சு புல்லரிக்கிறது.

இந்தக் கோட்டையிலே அடைக்கப்பட்டிருந்த கைதிகளைப் பிணைத்திருந்த சங்கிலியின் ஓசை இன்னமும் நம் காதுகளில் சலசலக்கிறது.

இந்தக் கோட்டையைப் பிடிக்கத்தான் எத்தனை போர்கள்! எத்தனை முற்றுகைகள்! அத்தனையும் தாங்கி நின்று, நடந்ததனைத்தையும் பொய்யாய்ப்—பழங்கதையாய் ஆக்கிவிட்டு இன்று தான் மட்டும் தனித்துயர்ந்து நிற்கும் மலை, இந்த மலை. இதன் பெருமையும் புகழும் பள்ளிச் சிறுவர்களின் வாயில் பாட்டாக இன்றும் மலர்கின்றன.

கி.பி. 1544-வரை, குன்றத்தூர் துர்க்கம் என்று குறிக்கப்பட்டு வந்த இந்த மலைக்கோட்டைக்கு, 'சங்க கிரி துர்க்கம்' என்ற பெயர்தான் இப்போது வழங்குகிறது. துர்க்கம்—என்றால் மலைக்கோட்டை. சங்கு போன்ற மலையில் அமைந்த கோட்டைக்குப் பொருத்தமாக இந்தப் பெயரைச் சூட்டியிருக்கலாம்.

* 20-11-77இல் ஒலிபரப்பாயிற்று

கோட்டைக்குள், சிறை வைக்கப் பட்டிருந்த பகைவர்களைச் சங்கிலியில் இங்கு பிணைத்து வைத்திருந்தமையால் 'சங்கிலி துர்க்கம்' என்ற பெயர் ஏற்பட்டு, காலப் போக்கில் 'சங்க கிரி துர்க்க'மாக மாறி இருக்கலாம் என்பது சிலரது கருத்து

இப்படிப் பெயர் பெற்ற கோட்டையின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

கொங்கு நாட்டில் மலைமேல் உள்ள கோட்டைகள் பலவும், விஜய நகர மன்னர்களால் கட்டப் பட்டவையே. திருச்செங்கோட்டில் கிடைத்த கல் வெட்டு ஒன்றால், இந்தச் சங்க கிரி 'வீர சோழ மண்டலம்' எனவும் அழைக்கப் பட்டதாகத் தெரிகிறது. மலை உச்சியில் தெலுங்கிலும் தேவநாகரியிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பல, பல விஜய நகர மன்னர்கள் காலத்தவை. 1522, 1524 எண்ணுள்ள தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், இங்கு விஜய நகர மன்னர்களின் ஆட்சி இருந்ததை நன்கு உறுதிப்படுத்துகின்றன. விஜய நகர அரசர்கள் காலத்துக்கு முந்திய செய்திகள் இக்கோட்டைத் தொடர்பாக இது வரை கிடைக்கவில்லை. எனவே, இக் கோட்டை விஜய நகர மன்னர்களால் கட்டப்பட்டிருக்கலாம் என்று எண்ண முடிகிறது.

கி.பி. 1538-இல் விஜய நகர அரசர்கள் சார்பில் ''கும்மலண்ணகல்'' என்ற ஆளுநர் இக்கோட்டைத் தலைவனாக இருந்திருக்கிறான். பின்னர், 1540-இல் ராமப்பையன் என்பவனும், 1544-இல் பாவைப்பையன் என்பவனும் இக்கோட்டையின் ஆளுநராக இருந்திருக்கிறார்கள்.

கி.பி. 1610-இல், மதுரை நாயக்கர் பரம்பரையைச் சார்ந்த முதலாம் முத்து வீரப்ப நாயக்கன் இதனைக் கைப்பற்றி வலிமையுடையதாகத் திருத்திக் காட்டினான், என்ற செய்தியையும் நாம் கல்வெட்டுக்களால் உணர முடிகிறது.

கி.பி. 1668, 1688 ஆகிய ஆண்டுகளில் மைசூர் சிக்க தேவராயரிடம் இக் கோட்டை இருந்திருக்கிறது. அரசர் சார்பில் சிக்கையா என்பவனும் பின்னர் முத்தையா என்பவனும் இதன் தலைவர்களாக இருந்துள்ளனர் என்ற செய்திகளையும் நாம் கல் வெட்டுக்களால் உணரலாம்.

வேட்டுவ ராஜாக்கள், கெட்டி முதலியார்கள் ஆகியோரிடம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆயினும், இச் செய்திக்கு மிகுந்த ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

கி.பி.1790, கர்னல். ஸ்டுவர்ட் என்பவனிடம் தளபதியாகஇருந்த, கர்னல் வகாப் என்பவனிடம், திப்பு சுல்தான் இக்கோட்டையைப் பறி கொடுத்தான்.

கி.பி. 1792-இல் திப்புவுக்கும் பிரிட்டிஷாருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி இக்கோட்டை இறுதியாக ஆங்கிலேயர் வசம் வந்து விட்டது. அதே ஆண்டு, 22-ஆவது சென்னைப் பட்டாளம் இங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டது.

1799-இல் லார்டு கிளைவ் வகுத்த திட்டப்படி, இக்கோட்டை ஒரு பெரிய ராணுவதளம் ஆக்கப்பட்டது. ஆனால், 1833-இல் சாதாரண ராணுவ முகாம் மட்டுமே இருந்தது. 1832வரை இந்த நிலை நீடித்தது.

1832-இல் இங்கிருந்த படைத் தளம் கலைக்கப்பட்டது. அன்று முதல் இக்கோட்டை தன் பழம் பெருமையை இழந்தது.

திப்பு ஆண்ட காலத்தில் பல கோட்டையின் பெயர்கள் மாற்றப்பட்டன. இந்தச் சங்க கிரிக் கோட்டையின் பெயரும் ''முஸ்பரா பாத்'' என்று மாற்றப் பட்டது.

திப்புவின் காலத்திலும் ஆங்கிலேயர்களின் காலத்திலும், இது ஒரு தாசில் தாரின் தலைநகரமாகவே இருந்து வந்திருக்கிறது.

கர்னல். ரீட், என்பவன் இக் கோட்டை, தங்க நாணயசாலையாக இருக்கத் தகுந்த இடம் என்று தேர்ந்தெடுத்தான்.

1824-இல், இங்கு வருகை தந்த, 'கர்னல். வெல்ஷ' என்பவன், தான் எழுதிய பட்டாளத்து நினைவுகள் (Military Renaissances) என்ற நூலில், இக்கோட்டையின் சிறப்பைக் குறித்து மிகவும் எழுதியுள்ளான்.

சரி, இப்படி வரலாற்றுப் புகழ் பெற்ற மலைக்கோட்டையில் இன்று எஞ்சி நிற்பதுதான் என்ன? இதற்குப் பத்து வாசல்களும், பத்து தடுப்புச் சுவர் களும் உள்ளன.

முதல் வாசல், ''புலி முகம் வாசல்'' என்று வரலாற்று ஆசிரியர் களால் சொல்லப்படுகிறது, என்றாலும் ''உலுமிகம்'' வாசல் என்றுதான் இப் பொழுது சொல்கிறார்கள். வடக்கு—தெற்காக மிக நீளமாகக் கட்டப்பட்டிருக் கிற இந்தச் சுவரில், பிரமாண்டமான கற்களை ஒன்றோடொன்று பக்குவமாகப் பொருத்திக் கட்டியிருக்கிற திறமை, நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. இது குன்னி வேட்டுவ ராஜாவால் கட்டப்பட்டது. இரண்டாவது வாசலுக்கு, ''கல் கோம்பைக் கோட்டை'' என்பது பழைய பெயர்.

இந்தக் கோட்டைச் சுவரை, திப்பு சுல்தான் தன் நேரடி மேற்பார்வை யிலேயே கட்டியதாகச் சொல்கிறார்கள். கோட்டையைப் பழுது பார்க்கும் வேலையைச் செய்த ஆட்களுக்கெல்லாம் சுல்தான் தங்க நாணயங்களையே கூலியாக வழங்கினானாம். அது மட்டுமில்லை. 'ஐதர் காலத்திலே—அவன் வழுதாவூர் கோட்டையிலே இருந்தபோது ஐதராபாத்தைச் சேர்ந்த நாசர்ஜங் என்பவ னுடைய கஜானாவிலிருந்து, 15 ஒட்டகங்களின்மேல் தங்க நாணயங்களையும், வைர நகைகளையும் ஏற்றிக் கொண்டு வந்து, இந்தக் கோட்டைக்குள்ளே ஒளித்து வைத்திருந்தானாம்.

இதைத் தாண்டினால் ஒரு குளம். வீரபத்திர சாமி குளம். பக்கத்திலே வீரபத்திர சாமி கோவிலிருக்கிறது.

அடுத்தது கடிகார வாசல் என்று சொல்லப்படுகிற மூன்றாவது வாசல். நாழிகையைத் தெரிந்து கொள்ள உதவியாக, நாழிகை வட்டில் இங்கே இருந்த தனாலே, இதற்குக் கடிகார வாசல் என்று பெயர் வந்ததாம்.

அடுத்தது மாரியம்மன் கோவில். இதற்குப் பக்கத்திலேயே வரதராஜ சாமி கோவில் இருக்கிறது. மிகப் பெரிய கோவிலாகத் தெரிகிறது. அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது இந்தக் கோவில்.

அடுத்தது ரண மண்டல வாசல் எனப்படுகிற நாலாவது வாசல்.

அந்தக் காலத்திலே போர் வீரர்கள் குதிரைகளின் மேலமர்ந்தே ஐந்தாவது வாசல் வரை வந்ததாகத் தெரிகிறது. இன்றோ இந்தப் பாதை பயனற்று புல்லும் முளைத்துவிட்டது.

அடுத்தது ஐந்தாவது வாசல். இதற்குப் புதுக்கோட்டை வாசல் என்று பெயர். இரண்டு பக்கத்திலேயும் மூன்று கொத்தளங்கள் உண்டு. மூன்றிலுமே பீரங்கி வைத்துச் சுடுவதற்கு ஏற்றபடி ஒன்பது இடை வெளிகள் இருக்கின்றன. பகைப்படைகள் எந்தப் பக்கத்திலேயிருந்து வந்தாலும், அதைச் சுட்டு வீழ்த்தி விடக்கூடிய வியூகம் உள்ளதாக இந்த இடைவெளிகள் அமைந்துள்ளன. அண்மைக் காலம்வரை அந்த பீரங்கிக் குண்டுகள் இங்கு இருந்ததாகக் கூறுகிறார்கள்.

இதையடுத்து நம் கண்ணில் தெரிவது ஒரு குகை. அதன் வாசலிலே இருப்பது ''செயித் பீர் அவுலியா''. இங்கே தங்கியிருந்த ஒரு முஸ்லீம் மகான் ஒரு முறை குகைக்குள்ளே நுழைந்தவர், வெளியில் வரவே இல்லை என்கிறார்கள்.

அந்தக் குகைக்குள்ளே நாமும்தான் போய்ப் பார்க்கலாமா? கொஞ்சம் வெளிச்சம் முதல்லே தெரிகிறது. ஆரம்பத்திலே நடந்து செல்ல வசதியாகப் படி தெரிகிறது—போகப் போக ஒரே இருட்டு—தலை நிமிர்ந்து நடக்க முடியவில்லை—மேல் பகுதி தலையில் இடிக்கிறது—காலடியிலே ஈரம்—சகதி எங்கிருந்தோ சொட்டு சொட்டாகத் தண்ணீர் விழுகிறது—தடுமாறி சுவரைப் பற்றிக் கொள்கிறோம்—ஏதோ பசை மாதிரி கையில் ஒட்டிக் கொள்கிறது—இப்பொழுது குகை இன்னும் குறுகலாகி விட்டது.—இரண்டு காலில் நடந்து வந்த நாம் குழந்தை மாதிரி நாலு காலில் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது—கையிலே இருக்கிற டார்ச் ஒளியில் இன்னும் கொஞ்சம் தவழ்ந்து செல்கிறோம்—இருந்தாலும் அதற்குமேல் செல்ல முடியவில்லை—ஆனால் உள்ளே—குகையிலே கொஞ்ச தூரத்தில் ஏதோ வெளிச்சம் தெரிகிறது—அங்கே சிறு சுனை இருப்பதாகவும் இந்தக் குகை வழி மைசூர் வரை செல்வதாகவும் சொல்கிறார்கள்.

குகையிலே சொட்டுகின்ற நீர் எத்தனையோ வகையான நோய்களைக் குணப்படுத்துகிறதென்று சொல்கிறார், அந்த அவுலியாவிலுள்ள அசரத்.

அடுத்துள்ளது ஆறாவது ரோக்க திட்டி வாசல். இதை 'ரோக்கல் திட்டி வாசல்' என்றும் சொல்கிறார்கள்.

ஏழாவது வாசல் பாவல் திட்டி வாசல் என்று பெயர்.

இப்பொழுது மலையின் முக்கால் பாகம் தாண்டியாகி விட்டது. எட்டாவது வாசல், 1880-இல் இடி விழுந்து வாசலும் இடிந்து போய் விட்டதாம். இதனால் இதற்கு 'இடி விழுந்தான் வாசல்' என்று பெயர். அதைக் கடந்தால் அரை வட்ட வடிவிலே ஒரு செங்கல் மண்டபம். அது வெடி மருந்துக் கிடங்கு.

ஒன்பதாவது வாசல், 1799-இல் கிழக்கிந்தியக் கம்பெனியார் கட்டியது. அதனால் 'வெள்ளைக்காரன் வாசல்' என்று சொல்கிறார்கள். கருங்கல்லை ஒழுங்காகச் செதுக்கி அழகாக வைத்துக் கமான் வைத்துக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது கதவு மட்டும் இல்லை.

இதற்கு மட்டுமா இல்லை? எந்த வாசலுக்குமே இங்கே கதவு இல்லை. கதவு இல்லாத இன்னும் ஒரு வாசல் இருக்கிறது.

பத்தாவது கடைசி வாசல். மைசூர் வாசல் என்று பெயர். வாசலின் ஒரு பக்கத்திலே, சங்கும், காவல் பூதம் மாதிரியான ஒரு உருவமும் சுவர்ச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. படியின் ஓரத்தில் ஒரு குழி காணப்படுகிறது. கொடி மரம் நடுவதற்கான குழியாக இருக்கலாம்.

படை வீரர்களின் உணவுத் தேவைக்கென தானியங்களைச் சேமித்து வைக்கும் தானியக் கிடங்கும் இருக்கிறது. இங்கு அதன் அடையாளமாக பதராகிப் போன தானியங்களை இன்றும் பார்க்கலாம். அதன் பக்கத்திலே ஒரு எண்ணெய்க் கிடங்கும் இருக்கிறது.

மலை உச்சியிலே ஒரு ஓரத்திலே 'மகபூபே சுப ஹானிக்' என்ற மகான் தங்கியிருந்த இடம் இருக்கிறது.

இதைத் தாண்டிச் சென்றால், சென்னகேசவப் பெருமாள் கோவில்.

இங்கே ஆலயங்கள் மட்டுமில்லை. ஆட்களைக் கொல்லும் அபாயகரமான அமைப்புக்கள் பலவும் உண்டு. அதோ தெரியுது பாருங்க, அதுதான் ஆரியக் குழி. எட்டடி நீளமும், ஆறடி அகலமும் 30 அடி ஆழமும் உள்ள இந்தக் குழியில் கேழ்வரகை நிரப்பி, பகைவர்களை உயிரோடு இறக்கிவிடுவார்கள். அவர்கள் மூச்சுத் திணறி இறந்து போவார்கள்.

பக்கத்திலே ஒரு ஒதுக்கமான இடத்திலே ஒரு மேடை. இதுதான் ''தோல் உரிச்சான் மேடு'. திகைக்க வேண்டாம். அந்தக் காலத்தில் பகைவர்களை இந்த மேட்டில் இருந்த சூலாயுதத்தின் மேல் உயிரோடு சொருகி, ஒரு வகையான பச்சிலையைத் தடவி தோலை உரித்து விடுவார்களாம். தசையைக் காகமும், கழுகும் கொத்தித் தின்று விடுமாம். நினைத்தாலே நடுங்கச் செய்யும் இந்த மேடு பகைவர்களைக் கனவிலும் பயமுறுத்தியிருக்கும்.

பயங்கரக் குழியும் மேடும் மட்டுமில்லை. உருட்டி விட்டான் பாறை என்ற பாறையும் இங்கே இருக்கிறது. பகைவர்களைக் கட்டி இங்கேயிருந்து உருட்டித் தள்ளி விட்டு விடுவார்களாம். 1500 அடி கீழே வந்து விழுந்து நொறுங்குவதைத் தவிர வேறு வழியில்லை!

ஐதர் அலி, தனக்குக் கப்பம் கட்ட மறுத்த தாரமங்கலம் கெட்டிமுதலியாரை இந்த மலையடிவாரத்தில் படுத்திய பாடு, அப்பப்பா! சொல்லில் அடங்குமா!

கொங்கு நாட்டுத் தங்கம், தீரன் சின்னமலை வெள்ளையரை எதிர்த்துக் குரல் எழுப்பியதும் இங்கேதான். அதற்குப் பரிசாகக் கிடைத்தது வீர மரணம் தான். அந்த மாவீரன் புகழை, கொங்கு நாட்டுப் பெண்கள் இன்றும் கும்மியடித்துப் பாடி மகிழ்கிறார்கள்.


இதன் உச்சியில் உள்ள மான் சுனை நீர், பருகுவதற்கு இனிக்கும். பல நோய்களையும் தீர்க்கும். இச் சுனையை நிழல்படாப் பாழி என்றும், பொழுது காணுப் பாழி என்றும் சொல்கிறார்கள்.

---

**''இந்திய ஒலிபரப்புக் குழுமம்'' என்ற பெயரில் 23-7-1927ல் பம்பாயில் ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சியே இந்திய ஒலிபரப்பின் முதல் நிகழ்ச்சி.**

---

Grams: "MEENAM"
Phone: 30341 (8 Lines)




# HOTEL GURU & B. B. HOTEL

*BOARDING & LODGING*
(Govt. Approved Hotel)

**RAJA STREET**
**COIMBATORE 641 001**

**Prop: K. S. M. Guruswamy Nadar & Sons.**



**HOTEL GURU:**

For Luxurious and Comfortable Rooms with Modern Amenities—Round the Clock Service—Centrally Situated—Multistoried—Spacious Car Parking.

**B. B. HOTEL**

A Modern Luxurious Restaurant for Quality Vegeterian and Non—Vegeterian Dishes.

**NEW B. B. HOTEL:**

A Modern Vegeterian and Non—Vegeterian Restaurant at the Central Bus Stand, Gandhipuram, Coimbatore. Phone No. 34400

# *கல்லும் கலையும் தாரமங்கலம் கயிலாசநாதர் கோயில் சிற்பங்கள்

புலவர் மணியன்
அரசு உயர்பள்ளி, கணபதி, கோவை.

காவியம் பாடும் புலவன் கற்பனை செய்கிறான். கதை உருவாகிறது. சொல்லெனும் தூரிகை கொண்டு, எண்ணங்களையே வண்ணங்களாக்கி, எழுதுகிறான். கதைக் கேற்ற கவிதை பிறக்கிறது. கற்போர் நெஞ்சம், களிப்பால் துள்ளுகிறது. இது—சொல்லோவியம்.

சிற்பக் கலைஞனும் கற்பனைகளில் மிதக்கிறான். உளிகளையே தூரிகையாக்கி, கலைத்திறனையே வண்ணங்களாக்கி, குடைகிறான். — கொத்துகிறான்—செதுக்குகிறான். மலையில், காலடியில் மிதிபட்டு, வெறுங்கல்லாய்க் கிடந்த கருங்கல் சிலையாகிறது. இது—கல்லோவியம்.

சிந்தனைச் சிற்பியாகிய புலவன் கண்ணை மூடிக் கற்பனை செய்த காவியப் பாவை, பேசும் பாவையாகிறது; ஆடும் மங்கையாகிறது; வணங்கும் தெய்வமும் ஆகிறது. இவ்வண்ணம் சிற்பக் கலைஞன் செய்த அற்புதங்கள் தமிழகத்தின் பரம்பரைச் சொத்து. மலை வளத்தாலும், மண் வளத்தாலும் பெருமை பெற்ற கொங்கு நாட்டில் சிற்பக் கலைவளத்துக்கும் பஞ்சமில்லை. இதற்குச் சான்றாக விளங்குவன ''தாரமங்கலம் கயிலாசநாதர் கோயில் சிற்பங்கள்.''

இவ்வாறு, கல்லிலே கலைக்காவியம் தீட்டிய தாரமங்கலம் எங்கே இருக்கிறது? ஏன் அப்பெயர் வந்தது? அறிய ஆவல் பிறக்கிறதல்லவா? ஆம். விலை மதிக்க முடியாத கலைச் செல்வங்களைக் கண்ட நம் தமிழ் உள்ளத்தில் இக்கேள்விகள் பிறப்பது இயற்கைதான்.

சேலம் மாவட்டத்தில், சேலத்திற்கு வடமேற்கே 30 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். 'தாருகா வனம்' இதன் பழம் பெயர். அது மருவி 'தாரமங்கலம்' ஆயிற்று. இப்படி ஒரு கருத்து. இல்லை; இல்லை. உலக முழுதுடைய அன்னையை இறைவனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்த இடம் இது. அதனால்

* 16—2—78 இரவு 8-15 மணிக்கு ஒலிபரப்பான உரைச்சித்திரம்

தாரை மங்கலம் என்று பெயர் வந்தது. பின்னர் தார மங்கலமாகத் திரிந்து வழங்குகிறது என்பது வேறொரு கருத்து. புத்த மதத்துக்கு நாடு முழுதும் செல்வாக்கு இருந்த காலம் ஒன்று உண்டு. அவரது சக்தியாகச் சொல்லப்படு பவள் 'தாரை'. அவள் பெயரால் 'தாரை மங்கலம்' என்பது பெயராயிற்று. மதக் கோட்பாடுகள் மாறியபோது அவள் பெயர் காளி என்றும், துர்க்கை என்றும் மாற்றம் பெற்றன. இதற்கடையாளமாக, இன்றும், இவ்வூரின் வட மேற்கு மூலையில் ஒரு காளிகோயில் இருக்கிறது. அந்தத் தாரையின் பெயரால் அமைந்ததே இவ்வூரும், என்று இப்படியும் ஒரு கருத்து, ஆராய்ச்சியாளர்களால் தெரிவிக்கப்படுகிறது. ஊர்ப் பெயர் எப்படி வந்திருப்பினும் நமக்குக் கிடைத் திருப்பது அருமையான கலை விருந்து!

கோயிலைக் காணச் சென்றால், மேற்கு நோக்கியபடி, திராவிடக் கலைப் பாணியில் அமைந்திருக்கும் 120 அடி உயர ராஜ கோபுரம், நம்மைப் பெருமிதத் துடன் வரவேற்கிறது. சுமார் 30 அடி உயரத்திற்கு நீண்டுயர்ந்த வேங்கை மரக் கதவுகள். ஒரே மரத்தாலான இக்கதவுகளில் பல புராண வரலாறுகள் அருமை யான மரச் சிற்பங்களாய்க் காட்சி தருகின்றன.

அடியெடுத்துப் படிமேல் வைக்கும் போதே, குளிர்ச்சி நம் உடலெங்கும் ஊடுருவிப் பாய்கிறது. செம்பழுப்பு நிறக் கற்களால் படிகள் அமைந்துள்ளன. அண்ணாந்து பார்க்கிறோம். மூவேந்தர்களின், புலி, வில், கயல் சின்னங்களும் கெட்டி முதலியாரின் வாடா மலையும் வண்ணத் தடுக்கும் மிக அழகாகச் செதுக்கப் பட்டு உள்ளன.

தாரமங்கலம் என்ற சொல்லைக் கேட்ட உடனேயே நம் நினைவில் வருவது, கெட்டி முதலியார் என்ற பெயர்தான். அவர்கள் அந்த அளவுக்கு இந்த ஊரோடு தங்கள் வாழ்வை இணைத்துக் கொண்டவர்கள். முடி மன்னர்களுக்கு ஒப்பாக அவர்கள் கொடிகட்டி ஆண்டதும் உண்டு. ''கெட்டி முதலியார்'' என்பது பட்டப் பெயர்தான். இந்தப் பரம்பரையில் பல கெட்டி முதலியார்கள் இருந்துள்ளனர்.

> ''செங்கதிர் பன்னிரண்டு, ஈசர் பதினொன்று, திக்கு பத்து,
> கங்கையும் ஒன்பது, வெற்பு எட்டு, ஏழுகடல், கார்த்திகை ஆறு,
> ஐங்கணை, நான்மறை, முச்சுடர், சாதி அவை இரண்டு,
> மங்கை வரோதயன் கெட்டிமுதலிதன் வார்த்தை ஒன்றே!''

என்ற பழம் பாடல், இங்குள்ள இளமீசுவரர் கோயில் சுவரில் வெட்டப் பட்டுள்ளது. இவ்வாறு சொல்லுக்கு அரிச்சந்திரனாய் வாழ்ந்த கெட்டி முதலி பரம் பரையினரே, கல்லுக்கு உயிரூட்டி, இந்தக் கோயிலை, கலைக் கோயிலாய் மாற்றியவர்கள்.

சிற்பக் களஞ்சியமாய்த் திகழும் இந்தக் கோயிலின் திருப்பணி 'மும்முடிக் கெட்டிமுதலி காலத்தில் தொடங்கியது. சியாளிக் கெட்டி முதலி காலத்திலும் தொடர்ந்து நடை பெற்றது. வணங்கா முடிக் கெட்டி முதலி காலத்தில் நிறைவு பெற்றது.' இவ்வாறு செவி வழிச் செய்தி கூறுகிறது.

இந்தக் கோயிலிலும் இதனை அடுத்துள்ள இளமீசுவரர் கோயிலிலும், பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கி.பி. 1260-இல் வெட்டப்பட்ட ஒய்சள ராமநாதன் காலத்துக் கல்வெட்டு ஒன்று, இந்தக் கயிலாச நாதர் கோயில் கருவறைச் சுவரில் உள்ளது. எனவே, இக்கோயில், 13-ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்கலாம். பின்னுல் வந்த விசயநகர மன்னர்கள், மதுரை நாயக்கர்கள், குறிப்பாக—கெட்டி முதலியார் பரம்பரையினர் இதனை விரிவு படுத்தி சிறப்பக் களஞ்சியமாக மாற்றியுள்ளனர்.

கி.பி. 1290-இல், வெட்டப்பட்ட கல் வெட்டொன்று, தாரமங்கலம், முதலான ஏழு ஊர் முதலியார்கள், தானம் ஒன்று செய்த விவரத்தைத் தெரிவிக்கிறது.

மற்றுமொரு கல் வெட்டில் ''தாரமங்கலம் முதலிகள்'' — என்னும் தொடர் காணப்படுவதால் இந்தத் தாரமங்கலம், கெட்டி முதலிகளின் தலை நகரமாக இருந்திருக்கலாம் என்று தோற்றுகிறது.

கி.பி. 1544-இல், விசய நகரத்து சதாசிவராயர் காலத்து வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று, வணங்காமுடிக் கெட்டி முதலி என்பவர், வணங்கா முடி சமுத்திரம் எனத் தன் பெயரால் அமைந்த ஒரு ஊரைத் தானம் செய்தான். என்றும்இவன் தொண்டை மண்டல வேளாளர் குல திலகன் எனவும், அரசர்களுக்குள்ளே மணிமுடி போன்றவன் எனவும், வாடாமாலையும் வண்ணத்தடுக்கும் உடையவன் எனவும், குறிப்பிடுகிறது. வணங்காமுடிக்கெட்டி முதலி என்பாரே இந்தக் கோயிலைக் கட்டி முடித்தார்என்று செவிவழிச் செய்தியும் கூறுகிறது.

எனவே, கெட்டி முதலி பரம்பரையில் மிக உயர்ந்த நிலையிலிருந்த இந்த வணங்காமுடிக்கெட்டி முதலியார் காலத்தில், அதாவது, ஏறத்தாழ 1540-இல் இக்கோயில், கலை நலம் மிக்க சிறப்பக் களஞ்சியமாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்ப முடிகிறது.

கிடைக்கின்ற கல்வெட்டுக்களைக் கொண்டு இப்பரம்பரையினரைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை என்றுலும் ஒரு செய்தியை, நாம் நன்கு உணரமுடிகிறது. கி.பி. 1641-இல் மைசூர், கண்டீரவநரச ராஜா, இப் பரம்பரையைச் சேர்ந்த வணங்காமுடிக் கெட்டி முதலியை வென்று, பல ஊர்களைக் கைப் பற்றினுன் எனவும், 1667-இல் மைசூர் தொட்ட தேவராஜா, வணங்காமுடியை வென்று ஓமலூரைக் கைப் பற்றிக் கொண்டான் எனவும், 1689-இல், இப்பரம்பரையினர் தளர்ந்து நலிந்து, காவேரிக்கரையில் உள்ள சோழப்பாடியில் இருந்தனர் எனவும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே, இக்கோயிலை ஒட்டி, கட்டத் தொடங்கி, முடிக்காமல் விடுபட்டுள்ள ஆயிரங்கால் மண்டபம், பின்னுல் வந்த ஒரு வநணங்காமுடிக் கெட்டி முதலி காலமாகிய கி.பி. 1660-ஆக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

வாருங்கள் உள்ளே போகலாம். நமக்கு இருபுறமும் அவிநாசியப்பரும், சகஸ்ரலிங்கரும் கோயில் கொண்டுள்ளனர். அவர்களின் அருளாசி பெற்று வடக்குப் பிரகாரம் நோக்கிச் செல்கிறேம். ''புலன் ஐந்தும் பொறி கலங்கி, நெறி மயங்கி, அறிவு அழிந்திட்டு, ஐம்மேலுந்தி அலமந்த போதாக அஞ்சேல் என்று அருள் செய்யும் அப்பன் குடி கொண்ட இந்த ஆலயத்தை வலம்வந்து'' வணங்கவேண்டுவது மரபல்லவா? இங்கே, வடமேற்கு மூலையில், மகாமண்டபத்துத்

திண்ணை விளிம்பில், யாளி போன்ற ஒரு மிகச் சிறிய உருவம் காணப்படுகிறது. அதன் மூக்குத்துவாரம் அருகம்புல் நுழையுமளவு மிகச்சிறியது. ஆனாலும், என்ன வியப்பு! ஒரு மூக்கில் நுழைத்த மெல்லிய புல் மறு மூக்கின் வழியாக வெளி வருகிறது! கலைஞனின் திறமை நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

வடக்குப் பிரகாரச் சுவரில் ஆமை, மீன், முதலை முதலிய நீர் வாழ் உயிரினங்கள் மிகஅழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இங்கே அமைந்துள்ள தெப்பக்குளத்தில் கழிவு நீர்ப்பாதை, கோயிலுக்குக் கிழக்கே உள்ள தெப்பக் குளத்தில் போய் முடிகிறது. தொடக்கமும் முடிவும் தெரிகிறது. இடைவழி தெரிவதில்லை. கட்டடக் கலை நுட்பத்தை எண்ணி வியக்கிறோம். !

தெற்குப் பிரகாரத்தின் ஒரு பகுதியில் எண்கோணக் கிணறு ஒன்று இருக்கிறது. இங்கிருந்தும் இதில் தண்ணீர் எடுக்கலாம். அது மட்டுமில்லை. உள் பிரகாரத்தின் பாதாளப் படிக்கட்டுகளின் வழியாகவும் எடுக்கலாம். வேறு கோயில்களில் இத்தகைய அமைப்பு அருமை.

தென்மேற்கு மூலையில் ஒரு மேடை. அதன்மேல் சிறிய விநாயகர் கோயில். இது பற்றிய செய்தி ஒன்று உண்டு. கோயில் திருப்பணி நடந்த காலத் தில் சிற்பிக்கும், சுதை வேலைக்காரனுக்கும் ஒரு வாக்கு வாதம் எழுந்தது. 'நான் இன்றி இந்தத் திருப்பணி நிறைவு பெறுது?' என்றான் சுதை வேலைக்காரன். நீ இல்லாவிட்டால் என்ன, நான் இருந்தால் மட்டும் போதும், திருப்பணியை முடித்துவிடலாம், என்றான் சிற்பி. 'நிரூபித்துக் காட்டுவாயா' என்றான் சுதை வேலைக்காரன்.

'ஆம். செய்து காட்டுகிறேன்.'

என்று சவாலை ஏற்று, அமைத்த கோயிலாம் இந்த விநாயகர் கோவில். உபானம் முதல் கலசம் வரை, ஒன்பதே கற்களால்—சுதை வேலை ஏதுமின்றி—இணைப்புத் தெரியாமல்-கற்கள் பொருத்தப்பட்டுள்ளன. விமானத்தில் நுண்ணிய பூ வேலை காணப்படுகிறது. கலசத்திலும் சித்திர நுணுக்கங்கள் காணப்படுகின்றன. எல் லாமே கருங்கல்லில்தான்.

இக்கோயிலைப் பற்றி வேறொரு கதையும் சொல்லப்படுகிறது. இந்தக் கோயில் வேலை நடந்து கொண்டிருந்த சமயம், சிற்பி குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன், தன் வயதுக்கும், அனுபவத்திற்கும் ஏற்றபடி பிற கலைஞர்களின் உதவி ஏதுமின்றி இதனைக் கட்டி முடித்தானாம். கதை ஒரு புறம் இருக்கட்டும். சித்தம் உருகி, வேண்டுவோர்க்கு வேண்டுவன தரும் இந்தச் சித்தி விநாயகரை வணங்கியபடி மகா மண்டபத்தை நோக்கிச் செல்கிறோம்.

மகா மண்டபத்தின் கொடுங்கைகளின் மேல், பல விலங்குகளின் சிற் பங்கள் நம் கண்ணைக் கவர்கின்றன. குறிப்பாக, குரங்குகளின்மேல் நாம் வைத்த கண்ணை எடுக்க முடியவில்லை. ஒன்று இறங்கி வருகிறது; ஒன்று நம்மையே உற்றுப் பார்க்கிறது; ஒன்று நம்மேல் பாய வருகிறது. உயிர் பெற்று விட்டனவோ என வியக்கிறோம். வேடிக்கை பார்க்க வந்த நம்மையே அவை வேடிக்கை பார்ப்பது போல் இருக்கிறது.

இந்த மகா மண்டபத்தின் வெளிப் புறத்தில் எட்டு தூண்கள் இருக்கின்றன இரண்டு கோடியிலும் உள்ள தூண்களில் பூ வேலைப்பாட்டுக் கோலங்கள், மிக அருமையாய்ச் செதுக்கப்பட்டுள்ளன. அடுத்து இரு பக்கங்களிலும் உள்ள இரு

தூண்களில் ஒன்றில், யாளி, காலைத் தூக்கியபடி நிற்கிறது. மற்றொன்றில் யாளி போலவே இருக்கும் ஒரு விநோத விலங்கு காலைத் தூக்கியபடி நிற்கிறது. இரண்டிலுமே, வீரர்கள் அமர்ந்து போவோர் வருவோரைக் கருத்துடன் கண்காணிக்கின்றனர். இடையில் இருக்கும் நான்கு தூண்களிலும் குதிரைகள் கனைத்தெழுந்தபடி காலைத்தூக்கி நிற்கின்றன. இங்கே நுழைவாயிலை ஒட்டிநிற்கும் இரண்டு குதிரைகளின் காலடியிலும், புலி, வீரன் ஒருவனைக் கவ்வி நிற்கிறது. அந்த வீரன் கட்டாரியால் புலியைக் குத்த, அது அதனுடலை ஊடுருவிப் பாய்ந்து வெளிவந்திருக்கிறது. குதிரைமேலிருக்கும் வீரனும் தன் கை ஈட்டியால் புலியைக் குத்துகிறான். இங்கேயும் சிற்பி தன் கை வண்ணத்தைக்காட்டத் தவறவில்லை. குதிரையின் மேலும், கீழும் மேற் போக்காகப் பார்க்கும்போது, ஒவ்வொரு வீரன் இருப்பதாகவே தோன்றுகிறது. ஆனால் இருபக்கமும் பார்த்தால், குதிரையின் மேலும், கீழும் இரண்டிரண்டு வீரர்கள் காணப்படுகின்றனர். காண்பவர் எவரும் வியக்காமல் இருக்க முடியுமா?

வாயில் கதவுகளிலும் பல அழகிய மரச் சிற்பங்கள் காட்சி தருகின்றன. உள் பிரகாரத்தின் இடப்புறம் திரும்பும்போது, ஒயிலாக நிற்கும் இளமங்கை ஒருத்தியின் அழகு வடிவத்தைப் பார்க்கிறோம். சிறிதே தளர்ந்து நெளியும் சிற்றிடை! அப்பப்பா! என்ன அழகு! என்ன ஒய்யாரம்! காவிய நாயகிகள் பலர் நம் கண்முன் தோன்றுகின்றனர்.

''மத்தக மணியொடு வயிரம் கட்டிய
சித்திரச் சூடகம், செம்பொன் கைவளை,
பரியகம், வால்வளை, பவழப் பல்வளை
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்,
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்,
காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து,
கூடலும் ஊடலும் கோவலற் களித்த
தாது அவிழ் புரிகுழல்....... மாதவி''

என்று இளங்கோவடிகள் வருணித்தாரே அந்தச் சிலப்பதிகார மாதவி இவள் தானோ?

சீவக சிந்தாமணியில் காந்தருவதத்தையை, மணப் பெண்ணாக அலங்காரம் செய்த தோழிகள் எல்லாம், அவள் அழகைக் கண்டு வாயூறிப் போய்., ''இத்தகைய பேரழகியை அடையவும், அனுபவிக்கவும், நாம் ஆணாகப் பிறக்கவில்லையே'' என்று ஏக்கங் கொண்டார்களாம்! அந்தத் தத்தை இவள் தானோ? கம்பன் வருணிக்க, சிவ தனுசை வளைத்துக் கைத்தலம் பற்றி மகிழ்ந்தானே ராகவன்; அந்த ராகவனின் ஜானகி இப்படித்தான் இருந்திருப்பாளோ? ஒப்பிட்டுப் பார்க்கிறது நம் இலக்கிய உள்ளம். உவமை சொல்ல வார்த்தையில்லை. வாயால் வருணிக்கவோ, நா எழவில்லை. யாரிவள்? தாருகா வானத்து ரிஷி பத்தினியாம்! அவள் தன் கார்வண்ணக் கருங் கூந்தலை வாரிச் சொருகியிருக்கும் அழகிற்கு இந்த இருபதாம் நூற்றாண்டு எழில் மங்கையரெல்லாம், ஈடு செய்ய முடியுமா? அள்ளிச் சொருகி, சிறிதே தொங்க விட்டு முடிந்திருக்கும் கூந்தலழகில் நாமும் உள்ளத்தைப் பறிகொடுத்து நிற்கிறோம். தலையில் சந்திர பிறை ஒரு புறம், சூரிய வில்லை மறுபுறம், கைத் தோளில் கடகம், முன்தோளில் முத்து வளையல், பவழ வளையல். காலில் நுபுரச் சிலம்பும், தண்டையும், காதில் மலர்த்தோடு, நெற்றிச் சுட்டி, கழுத்தில் இரட்டை வட மாணிக்க மாலை, பதக்க அட்டிகை, இடுப்பில் ஒட்டியாணம், வலக்கை, சந்நியாசியின் குரல் கேட்டதால்

அகப்பையில் அன்னத்தை ஏந்தி நிற்கிறது. இடக்கை அவிழ்ந்து நெகிழ்ந்த ஆடையைப் பற்றி இருக்கிறது. என்ன இருந்தாலும் பெண்ணல்லவா? ஏன் இந்தக் கோலம்? கண்ணிலே பரவசம்! மோகத்தால், தன்னை மறந்து மயங்கிய அவசநிலை, யாரைக் கண்டு மயங்கினாள்? ஓ! பிச்சையிட வந்த இந்தப் பேதை, அந்தப் பிச்சாடனரிமே மயங்கி விட்டாள். இச்சை மிகுதியால் அவரிடமே காதல் பிச்சை கேட்டு நிற்கிறாளோ? அதனால்தான் அகப்பையில் உள்ள சோற்றைக் கிளி கொத்துவதும் தெரியவில்லையோ? வெறும் கல்லிலே-கன்னி ஒருத்தியைக் கண்டோர் வியக்க உயிர்ப் பாவையாக்கி நம்மையும் மயங்கச் செய்தானே, அந்தச் சிற்பியின் கைவண்ணத்தைக் கண்டு, பூரிப்படைகிறோம்.

அடுத்து நிற்பவளும் அழகிதான். இவளும் அவளுடைய தோழிதான் போலிருக்கிறது. இறைவனைக் கண்டு தன்னை மறந்த இந்த ஏந்திழையாளும், அகப்பையிலே அமுதம் ஏந்தி, வீதியிலே விழி புதைத்து நிற்கிறாள். இறைவன் இவர்கள் அழகைக் கண்டு மயங்கிவிடவில்லை. ஆனால் நாம் மயங்கி விடுகிறோம்! என்ன இருந்தாலும் நாம் மனிதர்களல்லவா?

மயங்கியபடியே நின்றால் மற்ற சிற்பங்களைப் பார்க்க முடியுமா? வாருங்கள். இதோ பக்கத்திலேயே, சிவகாமி நின்ற திருக்கோலமாய்க் காட்சி தருகிறாள். இறைவன் ஏன் ரிஷி பத்தினிகளைக் கண்டு மயங்கவில்லை என்பது இப்போதுநமக்குப் புரிகிறது. இந்தச் சுந்தரி இங்கே இருக்கும்போது வேறு எந்தப் பெண் இவரை மயக்கிவிட முடியும்?

ஆமாம். இப்படிப் பாவையர் உள்ளத்தையும், பக்தர்கள் உள்ளத்தையும் கவர்ந்த கள்வன் எங்கே? அதோ, அடுத்த வடிவம் அவருடையதுதான். இடக்கையில் கபாலம், சூலம், பாம்பு, மான் ஆகியவை இருக்கின்றன. வலக்கைகளில் அக்னி, மழு, உடுக்கை ஆகியன. காலடியில் குழைந்து நிற்கும் மானைத் தடவிக்கொடுக்கிறது ஒரு கை. ஆசைகளற்ற துறவியல்லவா? அதனால்தான் ஆடையில்லைபோலும்! ஆனால், கங்கை மட்டும் விட்டுப் பிரிய மனமின்றி, பிச்சைக்குப் போகும் இடத்திலும், இவர் தலையில் அமர்ந்தபடி இருக்கிறாள். இங்கேயும் சிற்பி தான் முத்திரையைப் பதித்திருக்கிறான். கங்கையின் மிகச் சிறிய, ஒரு நெல்லினளவே உள்ள, நுண்ணிய மூக்கை செதுக்கிக் காட்டியிருக்கும் அழகைக் கண்டு நாமும் நம் மூக்கின்மேல் விரலை வைத்து வியக்கிறோம்.

அடுத்து அன்பர் உள்ளமே கோயிலாகக் கொண்டு ஆடும் அம்பலவாணர் காட்சி தருகிறார். குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. செப்புத் திருமேனியுடன் இருக்கும் இப் பெருமானின் அழகையெல்லாம் நாம் செப்ப முடியுமா?

அடுத்து இருக்கும் பெருமான் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி. ஊர்த்துவம் என்றால் மேல் நோக்குதல் என்பது பொருளல்லவா? அதற்கேற்றபடி வலக்கால் தலைக்கு மேலே உயர்ந்திருக்கிறது. பதினாறு திருக்கரங்கள். அவற்றில் பல வகை ஆயுதங்கள். மிக நுணுக்கமான வேலைப்பாடு.

வீட்டில் தாய்க்கும், தந்தைக்கும் போட்டி வந்துவிடுமானால், குழந்தைகளுக்குத் திண்டாட்டம் தான் ஏற்படும் என்பதில்லை. கொண்டாட்டம் ஏற்படுவதும் உண்டு! அந்தக் கோலாகலக் காட்சிதான் இது. காளியாய் வடிவு கொண்ட சக்தியா? சிவனா? யார் ஆட்டத்தில் வல்லவர்? என்ற போட்டியால் விளைந்த ஆடல் விருந்துதான் இது.

''துத்தம், கைக்கிள்ளே, விளரி, தாரம், உழை, இளி, ஓசை
பன் கெழுமப் பாடி,
சச்சரி, கொக்கரை, தக்கையொடுத குனிதம், துந்துபி, தாளம்,
வீணை,
மத்தளம், கரடிகை, வன்கை, மென்தோல், தமருகம், குடமுழா,
மொந்தை.......''

என்று, அத்தனை வாத்தியங்களும் முழங்க, ஆடிடும் திருக்கோலமல்லவா! காரைக் காலம்மையார் கண்டு மகிழ்ந்ததை நாமும் இங்கே கண்டு இன்புறுகிறோம்.

அடுத்ததாக, ஆடலிலே தோற்ற காளி, அம்மையாய் ஊடல் கொண்டு நிற்கிறாள். ஆடல் வெற்றிபெற்ற பெருமான், ஊடலின் முன்பு தோற்று நிற்கிறார்! அம்மையின் தாழ்வாயில் கை வைத்துச் சமாதானம் செய்கிறார். அகிலம் ஆளும் அப்பனே கொஞ்சும்போது, அன்னையின் மனம் குழையாதா! அந்த அழகுக் கோலத்தைப் பக்கத்திலே பார்த்து மகிழ்கிறோம். சிவனும் சக்தியுமாய் நமக்கு அருள் வழங்குகின்றனர். சிற்பி, தன் கைத்திறனை இங்கேயும் காட்டத் தவற வில்லை. இறைவன் தலையிலிருந்து கங்கை நீர் கீழ்நோக்கி ஓடிவழிகிறது. ஆனால் அந்த நீரில் மீன்கள் எதிர் நீச்சல் போட்டு மேல் நோக்கிச் செல்கின்றன. கல்லில் கலையை வடித்துக் கொடுக்கக் கற்றுக் கொண்ட சிற்பி உலகத்து உயிர்களின் இயல்பையும் மறந்து விடவில்லை!

கணவன் மனைவியரிடையே உண்டாகும் ஊடலையும் கூடலையும் அடுத்தவர் உற்றுப்பார்ப்பது முறையில்லையல்லவா? அதனால், ஓரக் கண்ணால் பார்த்த படியே புன்னகை பூக்கிறார், பக்கத்திலிருக்கும் புவியளந்த பெருமாள். ஆம், இங்கே நின்ற திருக்கோலத்தோடு காட்சி தருகிறார் இந்த லட்சுமி நாராயணர். மார்பில் கவுஸ்துவமணியும், இருகரங்களிலும் சங்கு சக்கரங்களும் இருந்தாலும் இருகரங்களை வரத — அபய கைகளாக்கி நமக்கு அடைக்கலம் தந்து அருளைப் பொழிகிறார். பக்கத்திலே உலகுக்கெல்லாம் படியளக்கும் பெருமான் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

அடுத்துள்ளது கொஞ்சம் விநோதமான உருவம். மூன்று கை, மூன்று கால், மூன்று முகம். இது என்ன உருவம்? விவரம் தெரியாமல்;, திகைப்பு ஏற்படுகிறதல்லவா? ''தாந்திரிக மதம்'' என ஒரு மதம் நம் நாட்டில் இருந்த துண்டு. இப்போது அந்த மதப்பெயர் மறைந்து விட்டதென்றாலும், அதன் கோட்பாடுகள் பல இந்திய மதங்களில் ஊடுருவி இன்றும் நிலைத்து நிற்கின்றன. அவற்றில் ஒன்று இங்கே நம் சிந்தனைக் குரியது. அதாவது, மனிதனுக்கு ஏற்படும் இன்னல்கள் பல. ஒவ்வொன்றையும் நீக்கிட ஒவ்வொரு இயற்கை சக்தி உண்டு. அதனை வழிபட்டால், வந்த துன்பம் வந்த வழியே போய்விடும். இவை அந்த மதத்தின் கொள்கைகள். அத்தகைய கொள்கைகளின் விளைவுதான் இந்த உருவம். இதற்கு ''ஜுரஹரேஸ்வரர்'' என்று பெயர். இவரை வணங்கினால், ஜுர நோய் நீங்கும் என்று சொல்கிறார்கள்.

அடுத்துள்ள கால பைரவருக்குப் பக்கத்தில் 'பிருங்கி முனிவர்' இருக்கிறார். நரம்பு தெரிய எலும்பும் தோலுமாய்க் காட்சி அளிக்கிறார். இன்னும் பல சிற்பங்கள். அக்கினி வீரபத்திரர், பிரதேஷ நாயகர் பக்கத்திலே காளி நிற்கிறாள். சோகம் நிரம்பிய பாவம். ஆடல் வல்ல நாதனை எதிர்த்து, ஆடித் தோற்றதால், வாடிப்போன முகத்துடன் காட்சி தருகிறாள். நமக்கும் கொஞ்சம் பரிதாபமாகத் தானிருக்கிறது. எதிரில் உள்ள தூணில் ஒரு சிறிய புடைப்புச் சிற்பம். காளிக்குத்

தோழி இவள். கையை உயர்த்தி ஒரு விரலை நீட்டி, காளியிடம் ஏதோ சொல்கிறாள். என்ன சொல்கிறாள்? 'தாயே, ஆடல் வல்ல நாயகனை எதிர்த்துப் போட்டி போடாதே! பின்னால் வாடாதே என்று, அப்போதே சொன்னேனே, கேட்டாயா?' என்று இடித்துரைக்கின்றாளோ!

தெற்குப் பிரகாரத்திலும் பல சிற்பங்கள்! மெய்யாய் உருகி நிற்கும் அடியார்க்கு அருள் செய்யும் அய்யப்பனும், நமது கருவாசம் நீங்கிடத் திருவாசகம் அருளிய மணிவாசகரும், இருக்கிறார்கள். பக்கத்திலே, மணல் லிங்கத்தை வழிபட்டு இன்புற்ற அன்னை காமாட்சியும் காட்சி தருகின்றனர். அம்மைக்கு அருளும் அப்பன் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்னும் ஐந்து முகங்களோடும் காணப்படுகிறார். இறைவனை இவ்வாறு ஐம்முகச் சிற்பமாய்க் காண்பது கொங்குநாட்டில் மிக அருமை.

உயிர்கள் ஒன்றையொன்று விரும்புவது இயற்கை. ஓரறிவு முதல் ஆறறிவு வரை அன்று தொட்டு இன்றுவரை, இந்த அற்புதம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது! அதற்கு ஏற்றபடி ஆணும், பெண்ணும், ஒருவரை ஒருவர் விரும்பி அன்பு செய்யத் தூண்டும் அழகு தேவனும், அழகு தேவியும் இங்கே காட்சி தருகின்றனர். ஆம். ரதியும், மன்மதனும், பேரெழில் கோலங் கொண்டு இருக்கின்றனர். இளமைப் பொலிவும், ஆண்மை வீரமும், கொண்ட இந்த வடிவம் மன்மதனுடையது. காதில், மகர குண்டலங்கள்! கையிலே கரும்பு வில்! பக்கத்திலே ஐந்து மலரம்புகள்! கிளி வாகனம்! எதிரிலே ரதி தேவி! தேவனுக்கேற்ற தேவி என்பது உண்மைதான்! நீண்ட கருங்கூந்தல்! அதனை முடிந்திருக்கும் குஞ்சங்கள்! இடக்கை விரலில் மூன்று மோதிரங்கள்! முழங்கைக்கு மேலே கோமேதகம் பதித்த கடகங்கள்! கழுத்திலே முத்து மாலை! மாணிக்கம் பதித்த நெற்றிச் சுட்டி! காலில் தண்டை! இடையில், மணிமேகலை! கையிலே வில்லும் அம்பும்! ஊரையெல்லாம் மயக்கும் மன்மதன், இவளைக் கண்டு மயக்குவதில் வியப்பில்லையல்லவா? போதாக் குறைக்கு இவளே, அந்த அடிகளை மயக்க மலரம்பு தொடுகிறாள். ஆனால், விதி யாரை விட்டது? ஆணவத்தால், அறியாமையால், சிறுபிள்ளைத்தனமாய் செய்த செயலால், சிவனார் எரிக்க, சாம்பலானான். ரதி தேவியின் வேண்டுதலால், அவளுக்கு மட்டும் தெரிகிறான்.

நம் தமிழகச் சிற்பத்திறனை இங்கேயும் காண முடிகிறது. ரதியிருக்குமிடத்திலிருந்து பார்த்தால் மன்மதன் தெரிகிறான். ஆனால், நேர் எதிரே இருந்தும் மன்மதன் இருக்குமிடத்திலிருந்தும் பார்த்தால் ரதியின் முகம் தெரிவதில்லை. கணக்கியலும், கட்டட இயலும், கலை நலமும் ஒன்று சேர்ந்து பளிச்சிடும் அற்புதமல்லவா இது?

வழியிலுள்ள பல சிற்பங்களையும் கண்டு மகிழ்ந்தபடியே, அர்த்த மண்டபத்துக்குள் நுழைகிறோம். அடடா! ஓ, என்ன அருமை! என்ன அழகு! ''கல்லைக் கனியாக்கி'' என்று சொல்வார்களே அது பொய்யன்று. இங்கே கல்லை, கனியினும் மெல்லிய பூவாக்கியிருக்கிறார்கள். அர்த்த மண்டப நுழைவாயில் தூண்களில் அத்தனை அழகிய வேலைப்பாடுகள்! பூக்கோலங்கள்! வளைவுகள்! நெளிவுகள்! ஒய்சள—கலைப் பாணியில் அமைந்து நம் கண்ணையும், கருத்தையும் கவர்கின்றன. ''கண் கொள்ளாக் காட்சி'' என்று வருணித்தாலும் வார்த்தையிலடங்காத சிற்ப ஜாலங்கள் இவை!

இங்குள்ள தூண் ஒன்றிலே மூன்று சிற்பங்கள் உள்ளன. மேலே, வாலியும் சுக்ரீவன் மனைவி தாரையும் தனித்திருக்கின்றனர். அங்கு வந்த சுக்ரீவன் இதனைப்

பார்த்து விடுகிறுன். அவ்வளவுதான்! அடுத்துக் கீழுள்ள சிற்பத்தில், அவர்கள் கட்டிப் புரண்டு போரிடுகின்றனர். இதற்கு ஓரளவு எதிரே இம்மண்டபத்தின் கடைசியில் உள்ள தூணில் அந்தக் கம்பராமன் சரம் தொடுக்கிறுன்.

''எடுத்துப் பாரிடை எற்றுவன் பற்றி' என்று இளவல்
கடித்தடத்தினும், கழுத்தினும், தன் இரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல், கோல் ஒன்று வாங்கித்
தொடுத்து நாணெடு, தோள் இறுத்து இராகவன் துரந்தான்''

என்று இக்காட்சியை கம்பர் மிகச் சுவைபட வருணிக்கிருர்.

வாலி நிற்குமிடத்திலிருந்து பார்த்தால் இராமன் தெரிவதில்லை என்பது தான் இங்கே வியப்பான அமைப்பு! நாமும் வியக்கிறேம்!

கலை அமுதம் உண்டு திளைத்த நாம், கலையின் காரணமாய் இருக்கும் கயிலாச நாதர் முன் வந்து நிற்கிறேம். இங்கேயும் ஏதாவது இருக்காதா, என்ற ஆவலுடன் விதானப் பகுதியைப் பார்க்கிறேம்.

வியப்பால் விரிந்த நம் வாய் அப்படியே நின்று விடுகிறது! கண்கள் அப்படியே குத்திட்டு நின்று விடுகின்றன! என்ன அது? மனிதரைக் கண்டு மருண்டு ஓடும் கிளிக் கூட்டம். நம்மை லட்சியம் செய்யவில்லையே! அதோ அந்த இருபத்தி நான்கு இதழ்த் தாமரையின் தேனைப் பருகிப் பரவசம் அடைந்த கிளிகள், அதன் மகரந்தத்தையும் இப்போது சுவைக்கின்றன. அந்த எட்டுக் கிளிகளும் நம்மைக் கண்டு மருளாமைக்குக் காரணம் இப்போது நமக்குப் புரிகிறது. மலர்த் தேனை உண்டு மயங்குகின்றன, அந்தக் கிளிகள்! கலைத்தேனை உண்டு உண்டு நாமும் மயங்குகின்றேம்!

அம்மட்டோ! கைக்கு அடங்காத தாமரைப் பொகுட்டில், கல் வளையம் ஒன்றும் காணப்படுகிறது. எப்படி நுழைந்தது இந்த வளையம்! சுற்றிப் பார்த் தால் சுழலுகிறது. இந்தத் தாமரையைச் சுற்றி, நாலு பக்கமும் எட்டு சங்கிலி கள், தொங்குகின்றன. எல்லாம் கல் சங்கிலிகள் தாம். இந்தப் புறம் திரும்பு கிறேம். யாளிகள் விழித்துப் பார்த்துக் கண்ணைச் சுற்றுகின்றன. ஆம். கல்லில் செதுக்கிய உருண்டைக் கண்கள் தாம் அப்படிச் சுழல்கின்றன!

இவை மட்டுமா? தூண்களுக்கு மேலே விதானப் பகுதிக்குக் கீழே, உத்தரம் பதித்திருக்கும் இடமெல்லாம், நூற்றுக் கணக்கான புடைப்புச் சிற் பங்கள். மாற்றுக் கண் சிகிச்சை முறையைக் கையாண்டு கண்ணொளி தமிழ்நாட் டில், ஏன் உலகிலேயே முதன்முதல் கண்ணொளி வழங்கிய கண்ணப்பர் முதலாகப் பல சைவ, வைணவ புராணச் சிற்பங்கள் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன. மாசித் திங்களில் மூன்று நாள் மட்டும் கோயில் முகப்பில் உள்ள நந்தியின் கொம்பு கள் வழியாக, இறைவன் நெற்றி மேல் கதிரொளி படுமாம்.

இலைஞனின் கற்பனையும்-கைத்திறனும் கருங்கல்லைக் கலைநலம் நிரம்பிய சிலையாக்குகிறது.

இதனேடு தெய்வீகம் சேரும்போது, வெறும் சிலை, வணக்கத்துக்குரிய கடவுளாகிறது. அதனை நாம் வணங்கும்போது கடவுளையும், கலையையும் சேர்த்தே வணங்குகிறேம்.

கால வெள்ளமும், அரசியல் மாற்றமும், கலைச் சின்னங்களை அழித்து விடக்கூடாது என்பதற்காக இவ்வண்ணம் கலையைக் கடவுளுக்காக்கி, ஒரு சேர இரண்டையும் வணங்க வைத்திருக்கும் நம் முன்னேரை எண்ணிப் பெருமைப் படாமல் இருக்க முடியுமா?

"வானொலி மலர் மணம் பரப்பிட எங்கள் வாழ்த்துக்கள்"

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் — தருவாயே
குறமாதைப் புணர்வோனே, குகனே, சொற்குமரேசா,
அறநூலைப் புகல்வோனே, அவிநாசிப் பெருமாளே.

— அருணகிரிநாதர்

இட உதவி - - -

# என். மகாலிங்கம் கம்பெனி

டாக்டர். நஞ்சப்பா சாலை

**கோயம்புத்தூர்**

# *கொங்குநாட்டுப் பண்டிகைகள்

கா. வெள்ளிமலை எம்.ஏ.,
(தமிழ்த் துணைப் பேராசிரியர், பூ.சா.கோ. கலைக்கல்லூரி, கோவை.)

''கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா'' என்பது ஔவை மொழி. அதை உணர்ந்தமையால் தான் கொங்கு நாட்டின் சிற்றூர் தோறும் கோவில்கள் விளக்கம் பெறுகின்றன போலும். அதுவும் உற்சவம் இல்லாத நாளில்லை. என்று சொல்லும் அளவிற்கு அவை எப்பொழுதும் விழாக் கோலம் பூண்டிருப்பதைக் காண்கின்றோம்.

மக்கள் தம் வயிறு வளர்க்க உடலை வருத்தி நாளெல்லாம் உழைக்கின்றார்கள். அவ்வுடலின் களைப்பு நீங்க உற்சாகம் அளிக்கக்கூடிய பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். அப்பண்டிகைகள் மக்களுக்கு இன்பமும் தருகின்றன. நாள்தோறும் செய்யும் வேலைகளிலே அவை ஒரு மாற்றத்தை உண்டாக்கத்தான் செய்கின்றன. மக்களது வாழ்க்கையில் இயற்கையாலும், செயற்கையாலும் உண்டாகும் குறைகளைக் களைவதன் நிமித்தமும் இத்திருவிழாக்கள் கொண்டாடப் படுகின்றன.

கொங்குநாட்டில் ஊர்தோறும் மாரியம்மனுக்கு விழா எடுக்கப்படுகின்றது. மழை வேண்டியும், நலம் நாடியும் அவ்வம்மனை வழிபடுகின்றார்கள். முக்கோண மரக்கொம்பில் கும்பம் வைத்து முளைப்பாரி அமைப்பதும், தீக்குண்டம் மிதிப்பதும், மாவிளக்கு எடுப்பதும் அம்மனுக்கு உகந்தவையாகும்.

கோவை தண்டு மாரியம்மன் விழாவில் பூச்சாட்டும், மாவிளக்கும் காண வரும் பெண்கள் கூட்டம் எங்கும் நிரம்பி வழியும். சூலக்கல் மாரியம்மன் விழாவும் குறிக்கத்தக்க ஒரு பண்டிகையாகும்.

கானகம் சூழப் பண்ணாரியில் கோயில் கொண்டிருப்பவள் பண்ணாரி மாரியம்மன். பரம கருணை புரியும் பரம தேவதை அவள். மண்ணும் விண்ணும் போற்றும் கண்கண்டதாய் அவள். சுயம்பு லிங்க வடிவிலே அமைந்துள்ள அத்

---

* 25—5—77-ல் ஒலிபரப்பாயிற்று.

தாயினைக் கிறித்தவரும், முகம்மதியரும்கூட வணங்குகின்றூர்கள். பங்குனி மாதத்தில் அவ்விழா நடைபெறுகின்றது. நெருப்புக் குண்டத்தில் பக்தர்கள் இறங்குவர். சிலர் தம் முடிகளைக் களைவர். சிலர் பொங்கலிட்டுத் தம் வாழ்வு சிறக்கவேண்டுவர் சோலகர் என்னும் மலைவாழ் மக்களின் வாத்தியங்களும், பறை முழக்கமும் விழாவினைச் சிறப்பிக்கும். இங்குள்ள குண்டத்தில் ஆடுமாடுகளும் இறங்குவது குறிப்பிடத்தக்கது. விழாக் காலத்தில் நிரம்பிய மக்களின் வெள்ளமே, கொடிய வெப்பத்தினைத் தணித்து விடும்.

விண்ணுக்கு ஒரு மருந்தாகவும், வேத விழுப் பொருளாகவும் விளங்கும் சிவனது ஆற்றலே சக்தியாவாள். அச்சக்தியே பல்வேறு வடிவுடன் ஆங்காங்கு கோயில் கொண்டு உலக உயிர்களைக் காத்து வருகின்றது. தந்தையினும் தாய் சாலப் பரிந்து ஊட்டுபவள் அல்லவா! அத்தகு தாயாம் அம்பிகைக்கு அமைந்த கோயில்கள்தாம் எத்துணை! எத்துணை!

கோவை மாநகரின் காப்புத் தெய்வமான கோனியம்மனை அறியாதார், அறியாதாரே! மற்றையஅம்மன்களிலும், இவ்வம்மன் வேறுபட்டவள் ஆயிற்றே! ஆம். எட்டுக் கரங்களைக் கொண்டவள் இவள். ஒரு காதில் தோடும், மற்ருென்றில் குண்டலமும் விளங்குகின்றன. இத்தகைய அன்னைக்கு மாசி மகத்தில் விழா எடுக்கப்படுகிறது. இவ்விழா பதினைன்கு நாட்கள் நீடிக்கின்றது. பக்தர்கள் அம்மனை வழிபட்டுத் தம் கண் நோய், நரம்பு நோய் முதலியன நீங்கி, நலம் பெறுகின்றூர்கள். கட்டிளங் காளையர்களுக்கும், கன்னியர்க்கும் இவ்விழா பெரு விருந்தாகும். நகரில் இக்கோனியம்மன் பெயர் சிறப்பானது. தேரோடுங்கால் பக்தர்கள் பக்திப்பெருக்கால் பழங்களை எறிவார்கள். உப்பை வாரிஇறைப்பார்கள்

காளப்பட்டி மாரியம்மன் ஏழு ஊர்க் கவுண்டர்களால் பல ஆண்டுகளுக்கொருமுறை விழா எடுத்துக் கொண்டாடப் படுகிருள். அப்போது ஒவ்வொரு வீடும் திருமண வீடு போல் பொலிவுடனும், பூரிப்புடனும் விளங்கும். மாவிளக்கு எடுத்தல் காணவேண்டிய ஒன்று. பூரண்டாம்பாளையம் மாரியம்மன் சக்தி மிக்கவள். அவள் மடைப்பள்ளிச் சம்பலே பலரது நோயைக் குணமாக்குகின்றது.

பம்பை அதிரோசை அங்காளம்மனுக்கு உரியது. இருகூரில் சிவன் ராத்திரி யன்று தொடங்கும் இவ்விழா ஏழு நாட்கள் நடை பெறுகின்றது. அதன் தொடர்ச்சியாகப் பேச்சியம்மன் விழாவும் கொண்டாடப் பெறுகின்றது. குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் இவ்வம்மனிடம் நம்பிக்கை வைத்து வழிபடுகின்றனர். இங்குள்ள குண்டத்தில் சிருவரும் இறங்குவர்.

பாரியூர்க் காளியம்மனும், பெருமாநல்லூர்க் காளியம்மனும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றனர். கோபிக்கு வடக்கே மூன்று கல் தொலைவில் தனித்துள்ளது பாரியூர்க் கோவில். மார்கழி விழாவில் முத்துப் பல்லக்கில் அம்மன் பவனி வருவாள். இரண்டு இலட்சம் மக்களுக்குமேல் வழிபடுவர்.

மேட்டுப்பாளையத்திற்கு மேற்கே நான்கு கல் தொலைவில் காட்டில் குடி கொண்டிருப்பவள் வன பத்ரகாளியம்மன். காட்டில் குடி கொண்டிருந்தாலும் அமாவாசை தோறும் விழாக்கோலம்தான். அரி விரட்டை, சூலூர், இராமநாத புரம், ஒத்தக்கால் மண்டபம் ஆகிய இடங்களிலும் இவளுக்கு விழா உண்டு. ஒத்தக்கால் மண்டபத்தின் குண்டம், ஆளை மறைக்கும் அளவு ஆழமானது. குன்னூர்த் தந்தி மாரியம்மன் கலச ஊர்வலமும், அந்தியூர் பத்ரகாளியம்மன் கோவிலில் குண்டம் மிதித்தலும் பார்க்கப் பரவச மூட்டக் கூடியவை.

நாட்டுத் தலைவர் பெயரிலும் விழாக்கள் அமைந்துள்ளன. நாட்ரையனே, நாட்டரராயன் என்று இன்று அழைக்கப் பெறுகின்றான். இக்கோவிலில் ஆடாத பேயெல்லாம் ஆடும் என்பார்கள். பெண்களைப் பிடித்த பேய் நீங்குமென்பார்கள். சேலம் மாவட்டத்தில் கருப்பராயனுக்குப் பண்டிகை கொண்டாடுகிறார்கள்.

அத்தனூர் புதூரில் அத்தனூரம்மனுக்கும், அவள் தங்கை அடியாளைப் பெற்ற அம்மனுக்கும் விழா எடுக்கிறார்கள். பின்னவள், தலைகீழாக நிலத்தில் இறங்குவதுபோல் காட்சியளிக்கின்றாள். அதனால் அம்மனின் கால்கள் மட்டுமே வழிபடப் பெறுகின்றன.

சோமனூருக்குக் கிழக்கே மூன்று கல் தொலைவில் உள்ள ஐயம்பாளையத்தில் இருப்பது வாழைத் தோட்டத்தய்யன் கோவில். ஐயன் சிவகதி அடைந்த திருவாதிரை அன்று குருபூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நச்சுப் பூச்சிகள், பாம்பு, தேள் ஆகியவற்றால் தீண்டப் பெற்றவர்கள் நாட்கணக்கில் ஏன் மாதக்கணக்கில் கூட தங்கி, நோய்கள் குணமான பின் செல்வர். கிளுவை மரத்தடியில் வளரும் பாம்புப் புற்றின் மண்ணே இந் நோய்களுக்கு ஏற்ற மருந்தாகின்றது. கொங்கு நாட்டின் சங்கரன் கோவில் இதுவே.

> ''குலவிய நாகம் எது கடித்திடினும் கூடும் நின்றன் திருப்பெயரைச்
> சொல உறும் போதே அகலும்..........''

என்ற வரிகள் ஐயன் பெருமையைப் பறை சாற்றும்.

வசந்த காலத்தில் மன்மதனுக்கு விழா எடுப்பர். இக் காமன் பண்டிகையன்று எரிந்த காட்சி, எரியாத காட்சி, பாட்டுப்போட்டி நடைபெறும். இதுவே லாவணி. சேலம் மாவட்டத்தில் இதனைக் 'கம்மட்டா' விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

பச்சாபாளையம், பூரண்டாம்பாளையம், அரசூர், பல்லவராயன்பாளையம் ஆகிய ஊர்களில் சிவன் ராத்திரியன்று பண்டிகை கொண்டாடுகிறார்கள். சிவன் கோவிலின் வெண்ணெய், நோய் போக்க உதவுகின்றது. கோவில்பாளையத்திற்கு பக்கத்தே வாதப் பிள்ளையார் கோவில் உள்ளது. வாத நோயாளர்கள் இங்கு வந்து நோய் நீங்கிச் செல்கிறார்கள்.

குன்னத்தூருக்குப் பக்கத்தில் அப்பிச்சிமார் மடம் உள்ளது. இங்கும் சிறப்பாக உற்சவம் நடைபெறுகின்றது. இம்மடத்திற்குப் பக்கத்தில் திங்களூர் இருப்பதால் இது அப்பர் சாமி மடமாக இருக்கக் கூடும்.

பழனியம்பதியில் முருகனுக்கு நித்தமும் திருவிழா. உத்தரத் திருநாள், அக்னி நட்சத்திர விழாநாட்களில் வழிபட வரும் பக்தர்கள் கூட்டம் சொல்லி முடியுமோ! மொட்டை யாண்டியைக் காணத் தாமும் மொட்டை யடித்துக் கொண்டு, அம்முருகனின் கோலத்திலே செல்லும் பக்தர்களின் அன்புதான் என்னே! காவடி தாங்கி மலையேறும் பாங்கினைக் காணாத கண்கள் என்ன கண்கள்! அச் சரவணனே மருதாசல மூர்த்தியாக, மருதமலையில் வீற்றிருக்கின்றான்.

கொங்கு நாட்டின் மேற்கெல்லையான வெள்ளிமலை உற்சவமும் மிகச் சிறப்பானது. மாசி முதல் வைகாசி வரை பக்தர்கள் இம்மலைக்குச் செல்கிறார்கள்.

உச்சி மலையில் மக்கள் ஏறுவதும், இறங்குவதும் அருவி விரைந்து ஓடி வருவது போலிருக்கும். 'காலடி பதனம்', 'வெள்ளியங்கிரி ஆண்டவனுக்கு அரோகரா' என்னும் முழக்கம் எங்கும் எதிரொலிக்கும். ஒவ்வொருவரும் கையில் மூங்கில் குச்சியைக் கொண்டு செல்வர். வீட்டு விலக்கான பெண்கள் மலையேற மாட்டார்கள்.

தேர்களில், அவினாசித் தேர் குறிப்பிடத் தக்கது. அலங்கரித்த தேரை அண்ணாந்து பார்த்தால் தலைப்பாகை அவிழ்ந்துவிடும். அந்த அளவு உயரம். மக்கள் அத்தேரோட்டத்தை நினைந்தும், உணர்ந்தும், நெகிழ்ந்தும் போவார்கள்.

கூத்தாண்டை எனப்படும் அரவான் பண்டிகை குறிச்சி, சிங்காநல்லூர், வெள்ளலூர் ஆகிய ஊர்களில் கொண்டாடப் பெறுகின்றது. பாண்டவர் வெற்றிக்காக தன்னையே காளிக்குப் பலியிட்ட அரவானின் தியாக வரலாறே இந்த விழா. வியாசர் சிறப்பித்துக் கூறாத இவ்வரவானை வில்லிப்புத்தூரார் போற்றுகிறார். இதில், பாரதத்தில் இல்லாத பொம்மி, அரவானுக்கு மனைவியாக அமைகின்றாள்.


மூன்று நாள் பொங்கல் விழா. இதில் மாட்டுப் பொங்கல் மிகச் சிறப்பு. இதனைப் 'பட்டி நோம்பு' என்பர். மறுநாள் கன்னிப் பெண்கள், பிள்ளையார்களை ஆற்றிலேயிட்டு,

''ஓலையக்காள் கொண்டையிலே ஒரு கூடைத் தாழம்பூவாம்''

என்னும் பாட்டைப் பாடுவார்கள். கோலாட்டம், கும்மி விளையாட்டில் திளைப்பார்கள்.

இவை தவிர, கொல்லிமலை கொங்கலாயி அம்மன் பண்டிகையும், நைனாமலை வரதராஜப் பெருமாள் பண்டிகையும், ஆடி முதல் நாளில் கொண்டாடும் தலையாடிப் பண்டிகையும், பேரூரில் பங்குனி உத்தரத் திருவிழாவும், ஆருத்திரா தரிசனமும் குறிக்கத்தக்கன.

கொங்கு நாட்டில் பூசை செய்வோர், வாய் கட்டியே பூசை செய்வதும் தனிச் சிறப்பு. அகத்தும், புறத்தும் காட்சி தந்து அருள் பாலிக்குந் தெய்வத்தை இவ்வண்ணம் விழாவெடுத்து மகிழ்கின்றார்கள் மக்கள். அத்தகைய விழாக்கள் மேன்மேலும் பெருகுக!



# *கொங்குநாட்டு நடுகற்கள்

சு. வேலுசாமி *B.Litt.*,
தமிழாசிரியர், கொமரப்பா செங்குந்தர் உயர்ப்பள்ளி, சென்னிமலை.

பண்டைத்தமிழ் மக்களது பண்பட்ட வாழ்வை நாம் உணர உதவுவன அகப்புறப்பொருள் பற்றிய இலக்கண இலக்கியங்களாம். அகம்புறம் பற்றிய செய்திகள் புலவர்களின் கற்பனைகளா? என்றால் இல்லை; அவை தமிழர் தம் வாழ்வில் கைக் கொண்டிருந்த ஒழுக்கங்களே என்பதை உறுதிப்படுத்துகின்றன தொல்பொருள் துறையினரது ஆய்வுகள்.

வீரம்மிக்க மறவர் பகைவரொடு போர் செய்து இறந்துபடின் அவர் நினைவாக அவரது பெயரும் பெருமையும் பொறித்த கல் நடப்பட்டது. அப்படி நடப்பட்ட கல்லே ''நடுகல்'' எனப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் ''Hero-Stone'' என்பர்.

தமிழ் மறையாம் திருக்குறளில் வீரன் ஒருவன் தலைவனின் படைச் செருக்கினைக் கூறுமிடத்து,

''என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர்; பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர்''—என்று கூறுகின்றான்.

என் தலைவனுடன் போரிட்டவர்கள் அனைவரும் நடுகற்களாக நிற்கிறார்கள். எனவே, என்தலைவனை எதிர்க்காதீர் என்று எச்சரிக்கின்றான் அவ்வீரன்.

வீரருக்கு மட்டுமின்றிச் செயற்கரிய செய்தோர்க்கு எல்லாம் நடுகல் நட்டு, அவர்களை வழிபட்டனர். நடுகல் வழிபாடு ஒல்காப் புகழ் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. இச்செய்தி,

''காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்
சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபிற் கல்''—

---

* 3—5—78-ல் ஒலிபரப்பாயிற்று

என்ற தொல்காப்பியச் சூத்திரப் பகுதியில் கூறப்பட்டுள்ளது. நடுகல் வழிபாடே இன்றைய உருவ வழிபாட்டிற்கு அடிப்படை எனலாம். வரலாற்றுத் தொடக்க காலத்து,வீரர் போரில் இறந்துபடின், வறிதே மூடாமல், அக்குழிகளின்மேல் கற்களைக்கு வியலாக வைத்தனர். இவற்றைக் கற்பதுக்கை, கல்திட்டை என அழைத்தனர். இப்படிப்பட்ட கற்பதுக்கைகளின் மேல் உருவம் பொறிக்கப் படாத நீண்டுயர்ந்த கற்களை நட்டு அதனையே வழிபட்டனர். பின்னர் அப்படிப்பட்ட நடுகற்களில் இறந்துபட்ட வீரனின் பெயரும் பெருமையும் எழுதி, மயிற்பீலி சூட்டி, மாலை அணிவித்து, மதுவைப் படைத்து, செம்மறியாட்டினைப் பலியிட்டு வழிபட்டனர், என்பதனை இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

> ''மாலை துயல, மணியெறிந்து, மட்டுஉகுத்து,
> பீலி அணிந்து, பெயர்பொறித்து,—வேல் அமருள்
> ஆண்டக நின்ற அமர்வெய்யோற்கு, இஃதுஎன்று
> காண்டக நாட்டினர் கல்''

என்பது தொல்காப்பிய உரை மேற்கோள் வெண்பா. புறநானூற்றில் உறையூர் இளம் பொன் வணிகனார்.,

> ''பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி
> மரல்வகுத்துத் தொடுத்த செம்பூங் கண்ணியொடு
> அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
> இனிநட் டனரே கல்லும்''

என நடுகல் பற்றிக் கூறுகிறார். தமது குல தெய்வங்களாக ''பட்டவன்'', ''கருப்பண்ணன்'', ''சடையப்பன்'', ''அண்ணன்மார்'', ''வேடியப்பன்'' என்ற பெயரில் கிராம மக்கள் இன்றும் நடு கற்களை வழிபடுகின்றனர்.

தமிழகத் தொல்பொருள் துறையினர் வடார்க்காடு மாவட்டம் செங்கம் பகுதியில் அறுபது நடுகற்களைக் கண்டுபிடித்து; அவை பற்றி ஆய்ந்து நூலாக வெளியிட்டுள்ளனர். கொங்கு நாட்டில் தருமபுரி, சேலம், கோவை மாவட்டங் களில் இத்தகைய நடுகற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

புறத்திணையில் வரும் போர்முறைகள் உண்மையே என்பதை நடுகற்கள் நமக்கு அறிவிக்கின்றன. ''வெட்சிநிரை கவர்தல்; மீட்டல் கரந்தையாம்''— என்பது இலக்கணம். இதற்கு எத்தனையோ இலக்கியங்களில் எடுத்துக்காட்டுகள் உள்ளன. மலையமான் திருமுடிக்காரியின் வெட்சிப் போரினை,

> ''மாயிரு முள்ளூர் மன்னர்; மாவூர்ந்து
> எல்லித் தரீஇய இனநிரை''

என்று நற்றிணை 291-ஆம் பாடல் நமக்குக் காட்டுகிறது.

இரண்டாம் நரசிம்ம பல்லவன் காலத்து வெட்சிப் போர் பற்றி, வடார்க் காடு மாவட்டம் சாத்தனூரிலுள்ள நடுகல், கல்வெட்டு,

''கோவிசைய நரசிங்க பருமற்கு இரண்டாவது வாண கோன் அதிரைசர் சேவகர் மீக்கொன்றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பறையமாளியர் தொறுக் கொண்ட ஞான்றுபட்டார்'' என்று வருணிக்கிறது. தொறு என்றால் பசு,

எருமை மந்தைகள் ஆம். பசுக் கூட்டத்தைக் கவர்ந்து வந்த வாணகோனது படை வீரன் மீக் கொன்றை நாட்டுமேல் வேளூர் மாளியார் போரில் இறந்துபட, அவன் நினைவாக நடுகல் நட்டு அவன் செயலைப் பொறித்துள்ளனர்.

பகைவர் கவர்ந்து சென்ற பசுக் கூட்டங்களை மீட்டுவருதல் கரந்தைத் திணையாம். கரந்தைப் போரில் இறந்துபட்ட வீரனுக்கு நடுகல் நடப்பட்டதைப் புறநானூறு 263-ஆம் பாடல்

''பல்லாத் திரள்நிரை பெயர்தரப் பெயர்ந்து
கல்லா இளைஞர் நீங்க, நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்க
கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லே''

என்று கூறுகிறது. செங்கம் நடுகல்லில் இக்கரந்தைத் திணைக் காட்சியை,

''கோவிசைய பருமற்குயாண்டு ஆருவது கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் சாகாடச் சிற்றன் மீக் கொன்றை நாட்டுப் புளியூர் எருமை கொண்ர ஞான்று பூச லோடி மேல் வேணுட்டு மணிக்கல் வடவூரில் முட்டி எருமைத் தொறு மீட்டுப்பட்டான் சாகாடச் சிற்றன்''— என்றுவருணிக்கிறது.

கொங்குநாட்டு ஈரோடு வட்டம் எழுமாத்தூரில் வாழ்ந்த வேளாளரில் சாகாடை குல கோத்திரத்து வீரனுகிய சிற்றன் தன் எருமைக் கூட்டத்தைக் கள்ளர் கவர்ந்து செல்ல அவர்களைத் துரத்திச் சென்று; அதை மீட்கும் பணியில் செங்கம் பகுதியில் மணிக்கல வடவூரில் நிகழ்ந்த போரில் இறந்துபட அவ்வீர னுக்கு நடுகல் நட்டு அப்பகுதியினர் போற்றியுள்ளனர்.

கருவூரில் இரயில் பாலத்தருகில் ஒரு வீரனின் நடுகல் உண்டு. அதில் ''ஸ்ரீ வஞ்சிவேள் அடியான்''—என்று வட்டெழுத்துக்களால் ஆன கல்வெட்டுத் தொடர் உள்ளது. அதன் அருகிலே மற்றுமொரு வீரனுடைய நடுகல்லில் ''கோகலியன் மகன் கருவூரிடை தன் ஆநிரை கொளல் எறிந்து பட்டான்''— என்ற தமிழ்க் கல்வெட்டுப் பகுதியையும் காணலாம். இந்நடுகற்கள் 8-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவை.

வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பைத் திணைக்காட்சிகளை நடு கற்கள் நமக்கு விரிவாகக் காட்டுகின்றன.

''போர்க்களத்து மிக்கார் செருவென்றது வாகையாம்''—என்பதுவாகைத் திணை இலக்கணம். களவழி நாற்பதில் பொய்கையார் சோழன் செங்கணனின் கழுமல வெற்றியை,

''காவிரி நாடன் கழுமலம் கொண்டநாள்
மாவுதை மாற்ருர் குடையெலாம் கீழ்மேலாய்
ஆவுதை காளாம்பி போன்ற, புனல்நாடன்
மேவாரை அட்ட களத்து''—

என்று பாடுகிருர்.

போரில் வாகை சூடிய வீரனது வெற்றிச் சிறப்பினை ஈரோடு வட்டம் பழமங்கலத்து நடுகல் ஒன்றில் உள்ள பாடற் சாசனம் காட்டுகின்றது.

''வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெறிந்த மாற்றலரைச்
சாய்த்தமருள் வென்ற சயம்பெருக—சீர்த்தபுகல்
நிற்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேவுலகில் தான்''

என்பது கல்வெட்டுப் பகுதி. வேட்டுவ குடியில் கரைய குலத்துதித்த சொக்கனது வெற்றியைப் பறை சாற்றுகிறது இப்பாடல்.

''களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''—என்று கடமை பாடுகிருள் சங்க கால மறக்குலப் பெண். களிறென்ன? கொல்புலியொடு பொருது அதனைக் கொன்று தானும் இறந்துபட்ட வீரன் நினைவாக, அவ்வீரன் புலியொடு போரிடும் காட்சியுடன் காணும் நடுகற்கள் ''புலிக்குத்திக்கல்'' எனப்படும். இப்படிப்பட்ட புலிக் குத்திக்கற்கள் கொங்குநாட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன. ஒரு வீரன் 150 புலியினைக் கொன்றதைக் கல் வெட்டுக் கூறுகிறது. சென்னிமலைக்கு மேற்கேயுள்ள பாழத் தொழுவு கிராமத்தில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட புலிக்குத்திக் கல் பின்னப்படாது அழகுடன் விளங்குகிறது. அதில் அவ்வீரன் ''தம்பான் மகன்'' என்று எழுதப்பட்டுள்ளது.

வடக்கிருந்து உயிர்நீத்த கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் நட்டுப் போற்றியதைப் பொத்தியார் பாடிய புறநானூற்றுப் பாடலால் அறியலாம். அப்பாட்டில் நடுகல்லாய் நின்ற மன்னனைக் கண்ட புலவர் பொத்தியாரது அவலம் நமக்கும் அவலம் ஊட்டும்.

செஞ்சிக் கருகிலுள்ள திருநாதர் குன்றத்து வாழ்ந்த ''சந்திரநந்தி'' என்ற சமணமுனிவர் 57 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். அவர் நினைவாக நடப்பட்ட அவரது உருவம் பொறித்த நடுகல் இன்றும் உள்ளது. சமண முனிவரது நடுகற்கள் ''நிசீதிகை'' எனப்படும்.

சமணப் பெண்பால் துறவியர் ''சல்லேகனை'' என்ற விரதமிருந்து உயிர் துறப்பர். இவ்வாறு உயிர் துறந்த பெண்பாலர்க்கும் ''நிசீதிகை'' என்ற நடுகல் எடுக்கப்பட்டது. கொங்கு நாட்டில் சமணப் பெரிய கோயிலாகவிளங்கும் விஜய மங்கலம் ஸ்ரீசந்திரப்பிரபாதீர்த்தங்கரர் கோயிலான ஸ்ரீவீரசங்காதப் பெரும் பள்ளியில் கி.பி. 10-ஆம் நூற்ருண்டில் கர்நாடகத்திலுள்ள சிரவண பௌகுளம் கோமடேஸ்வரர் சிலையைச் செய்தமைத்த கங்க அரசனது தளபதி சாமுண்ட ராயனின் தங்கை ''புளியம்மைக்கு நிசீதிகை'' எடுக்கப்பட்ட செய்தி உள்ளது.

தன் கணவன் மாண்டவுடன் உடன்கட்டையேறி உயிர்நீத்த கற்புடைப் பெண்கள் நினைவாக நடப்பட்ட நடுகல் மாஸ்திக் கல், மாசதிக் கல், சதிக் கல் எனப்படும். இப்படிப்பட்ட நடுகற்கள் கொங்கு நாட்டிலும்; கர்ஞடகத்திலும் உண்டு. உடன்கட்டை ஏறுதலுக்குத் ''தோள் கொடுத்தல்'' என்று கன்னடத்தில் கூறுவது வழக்கம். கர்ஞடகப் பகுதியில் இத்தகைய நடுகற்களில் உருவமே பொறிக்கப்பட்டிருக்கும். இந்நடு கற்களை ''வியாபர்னம் தோஞ கல்லு'' என்பர்

தமிழகத்தும் உடன்கட்டை ஏறிய பெண்ணுடன் அவள் கணவன் உருவத்தையும் பொறித்து அவற்றைத் தெய்வமாகக் கருதி வழிபட்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட நடுகற்களுக்கு ஆங்கிலத்தில் ''Dolemen'' என்று பெயர். கோவை மாவட்டம் சென்னிமலைக்கு அருகிலுள்ள பணியம்பள்ளி, சேவூர், பெரும்புலியூர், கொடுமுடிக்கு அருகிலுள்ள துக்காச்சி ஆகிய இடங்களிலும் சேலம் மாவட்டம் இராசீபுரம் வட்டம் பொன்பரப்பி போன்ற இடங்களிலும் இத்தகையநடுகற்களைக் காணலாம்.

திருவரங்கம் பெரிய கோயிலில் நித்திய பூஜைகள் கூடச் சரிவர நடக்காத அவநிலை ஏற்பட்டபோது அப்பாவையங்கார் என்ற பெரியவர் பூசைகள் சரிவர நடக்க எத்தனையோ முயன்றும் முடியாமற் போனதால் கிழக்குக் கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்து உயிர் துறந்தார். அவர் நினைவாக நடுகல் ஒன்று கிழக்குக் கோபுரத் தருகில் இருந்ததாக மெக்கன்சி குறிக்கின்றார். இன்று கிழக்குக் கோபுர நிலவு கால் தூணிலும், ராயர் கோபுர நிலவுகால் தூணிலும் அப்பெரியாரது உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் செய்த செயல் பற்றிய கல்வெட்டும் உள்ளது.

கொற்றவைக்குத் தலையரிந்து கொடுத்த வீரர் பற்றி சிலம்பு, பரணி முதலிய இலக்கியங்களில் காணலாம். சோழன் பூர்வ பட்டயம், சென்னிமலையில் நரபலி கொடுத்த நிகழ்ச்சியினை,
''பால குமாரனை அழைத்து, திருமஞ்சன மாடுவித்து, திருநீற்றுக் காப்புமிட்டு, ஆடையுடுத்தி; ஆபரணங்கள் பூட்டி; அலங்கரித்துப், பாலசன மிடுவித்துப், பரிமளகளப கஸ்தூரிகள் பூசி, வீரசந்தன மிடுவித்து, பாக்கு வெற்றிலை கையில் கொடுத்து, வீரகொம்பு, வீரகாளம், வீரமல்லாரி, வீரசிகண்டி, வலம்புரிச் சங்குடனே வீரமேள வாத்தியம் முழங்க, பஞ்சவண்ணக் குடையும், பஞ்ச முகத் தீவட்டிகையும், விருதுரணவீரவளை, வேங்கைப் புலிக் கொடியுடனே, நடை பாவாடையுடனே, நடைபாவாடைமேல் நடந்து, நடன சங்கீத ராகமேள வாத்தியம் முழங்கிவர, சென்னிமா நகரில் நாலுவீதி வீரமறமனையும் வருவித்து, சென்னி மாகாளிக்கு எதிர் நிறுத்தி, அந்தப்பால குமாரனைச் சமய முதலியாகிறவர் நாம் முன்பு சொன்ன நரபலியும் உமக்கு வந்தது' ' என்று அந்தப் பாலகுமாரனை வெட்டிப் பலி ஊட்டி வைத்து,.......... ஒரு கல்விக் கிரகமும் அவனைப் பார்த்தாப் போலப் பார்க்கிறமுகமாக அடிப்பித்து; அந்த சிலையைச் சென்னியங்கிரி ஆலயத்து நிறுத்தி வைத்து, குமார சுப்ரமணிய பண்டிதரைக் கொண்டு அந்தச் சிலைக்குப் புண்யாங்க அஷ்ட மந்திரப் பிரதிஷ்டையும் செய்வித்து, எல்லோரும் தரிசித்துக் கொண்டு ........'' என்று கூறுகிறது. நரபலி கொடுத்த பாலனது சிலையுள்ள சிறு கோயில் சென்னிமலைக்கு மேல் செல்லும் ப்டி வழியில் உள்ளது. இத்தகைய நடு கற்களைக் கோவை மாவட்டத்து சென்னிமலை, பேரூர், அன்னூர், அந்தியூர், அவினசி முதலிய இடங்களிலும் செங்கற்பட்டு மாவட்டம் கோயம்பேடு போன்ற இடங்களிலும் காணலாம்.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய அதியமானுக்கு நடுகல் எடுத்து வழிபட்ட காட்சியை ஔவையார் பாடலால் அறியலாம். கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரியின் சிலையை இன்றும் இராசீபுரம் சிவன்கோவிலில் காணலாம்.

போரில் உயிர்நீத்து வீரசுவர்க்க மடைந்த வீரர் நடுகற்கள் மூன்று நிலைகளையுடையது. கீழ்ப் பகுதியில் போர்க் காட்சியும் நடுப்பகுதியில் போரில் வீர மரணமடைந்து வீரசுவர்க்கம் புகும் வீரனைத் தேவமாதர் உபசரிக்கும் காட்சியும்; மேல்பகுதியில் அவ்வீரனது சமயநிலையை உணர்த்தும் சிவன் அல்லது விஷ்ணு சிலையும் செதுக்கப்பட்டிருக்கும். இத்தகைய நடுகல் தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் பள்ளியப்பட்டியில் உள்ளது.

கொங்கு ஏழு சிவதலங்களுள் ஒன்றாகிய வெஞ்சமாக்கூடல் கோவிலுக்கு அருகில் ஒரு வீரனது உருவச்சிலையை இன்றும் காணலாம். பதினெண் சித்தர் களுள் பலர் கொங்குநாட்டில் வாழ்ந்தவர்கள். கருவூரார், போகர், புலிப் பாணி, சிவவாக்கியர், சத்தியஞானி, பாம்பாட்டிச் சித்தர் போன்ற பெரியார்


களது நினைவுச் சின்னங்களைப் பழனி, கருவூர், சிவன்மலை, சென்னிமலை, மருதமலை போன்ற இடங்களில் காணலாம். பழைய கற்பதுக்கையே பிற்காலத்துச் சமாதி என வழங்கப்பட்டது.

ஆட்டையாம் பட்டிக்கருகில் சேலம் செல்லும் பாதையில் துப்பாக்கி பிடித்த உருவில் ஒரு நடுகல்லைக் காணலாம். அவனை வேல் கொண்டு தாக்க வரும் வீரனது உருவமும் உள்ளது. வீரர்களுக்கு நடுகல் நடும் பழக்கம் அண்மைக் காலம்வரை இருந்துள்ளது.

வீரமரணம் அடைந்த வீரர்க்கேயன்றி விலங்குகளுக்கும்—ஏன்?, பறவைகளுக்கும்கூட நடுகல் நட்டு வழிபட்டுள்ளனர். செங்கம் நடுகற்களுள் ஆநிரையைக் கவர்ந்து சென்ற கள்ளர் இருவரைத் துரத்திச் சென்று கடித்துக் குதறியுள்ளது ஒரு நாய். அந்நாயின் உருவமும் அதன் பெயரும், பெருமையும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. அந்நாயின் பெயர் ''கோவிவன்'' என்பதாம்.

பண்டைத் தமிழகத்து ஆட்டுக்கடா, கோழி, காடை முதலியனவற்றின் சண்டைக் காட்சிகளை இலக்கியங்களில் காணலாம். கோழிச் சண்டையைக் கொங்கு நாட்டில் ''சேவற் கட்டு'' என்பர். சேவலொன்று சண்டையில் தன்னை எதிர்த்த சேவலின் இறகுகளெல்லாம் உதிரக் கொத்தி, வெற்றி பெற்றது. அந்த வெற்றிச் சேவலுக்கும் நடுகல் நட்டு அதன் பீடும்பெயரும் பொறித்துள்ளனர். செங்கற்பட்டு மாவட்டம் அச்சிராப்பாக்கம் அருகில் உள்ள இந்தளூர் என்ற ஊரில் சேவலின் நடுகல்லையும், அதில் ''கீழைச்சேரி சேவல் பொடுகொத்த'' என்று எழுதப்பட்டிருப்பதையும் காணலாம்.

இதுவரை நாம் நடுகற்கள் பண்டைத் தமிழரது பண்பட்ட வாழ்வை உணர உதவுகின்றன என்பதைப் பார்த்தோம். நடுகற்கள் நாட்டு வரலாறு உணர உதவும் கருவிகள் என்பதை உணர்வோமாக.



**கோவை-நீலகிரி-சேலம் மாவட்ட மக்களுக்குப் பணி செய்யவெனத் தொடங்கப்பட்ட கோயம் புத்தூர் வானொலி நிலையத்தின் ''ஒலிபரப்பி 10 கி. வா. (மத்திய அலை) திறன் உடையது.**

# ARC PARCEL SERVICE


**(Props: ANAMALAI AGENCIES)**

*Administrative Office*

15/1 Mettupalayam Road □ COIMBATORE 641 011

Phone: 36255 (5 Lines)

Tel : "CARGOKING"
Telex: 0855-330-ARC IN




## ARC PARCEL SERVICE

**REGULAR PARCEL SERVICE & TRANSPORT CONTRACTORS**

*OUR CONTROLLING OFFICES*

| | | |
|---|---|---|
| MADRAS | Phone | 87337 & 87807 |
| | Telex | ARC-MS 7697 |
| TRICHY | Phone | 23224 |
| SALEM | Phone | 3000 |
| MADURAI | Phone | 33840 |
| TIRUNELVELI | Phone | 2255 |
| BANGALORE | Phone | 41490 & 67770 |

ஒலி பரப்பின்
பொன் விழாவினைக் கொண்டாடும்
அகில இந்திய வானொலி
ரசிகர்கள் மலருக்கு
எங்களுடைய நல்வாழ்த்துக்கள்

**மல்லிசேரி பீடிகள்**

புகைக்கச்
சிறந்தது!

போன்:
24031




**மல்லிசேரி பீடி ஒர்க்ஸ்**
கோயமுத்தூர்-641001

INSIST ON

**Mallisseri**
**Beedies**

FOR SMOKING PLEASURE


**MALLISSERI BEEDI WORKS**
**Coimbatore 641 001**

MB/OSR

"இந்திய ஒலிபரப்பின் பொன் விழா மலருக்கு எங்கள் நல் வாழ்த்துக்கள்"

*"மாலோன் மருகனை, மன்றுடி மைந்தனை, வானவர்க்கு
மேலான தேவனை, மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்,
சேலார் வயல்பொழியில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே"*

—கந்தரலங்காரம்.



இட உதவியளித்தவர்கள்-

# ஆனைமலை
# ரீட்ரெட்டிங் கம்பெனி

**தலைமையகம்: கோயமுத்தூர்-641 018**

கிளை-திருநெல்வேலி-627 002

**(ஏ. பி. டி. குழுவைச் சார்ந்த ஒரு நிறுவனம்)**


"Wishing the all India Radio's
Coimbatore Studios More Years of
Useful Service to the Nation".

*FOR STAPLE FIBRE REQUIREMENTS CONTACT*

**G. V. DORAISWAMY NAIDU & SONS**

DEALERS IN COTTON AND STAPLE FIBRE
(SUB-AGENTS FOR RHONE POULENC TEXTILE
PARIS, STAPLE FIFRE OF ALL STAPLE
AND DENIER)

**No. 2, Avanashi Road**
**Peelamedu**
**COIMBATORE 641 004**
Poone: PP 25766
Grams: C/o RAJTEX



PHONE 25405

# SAKTHI GENERAL AGENCIES

235 OPPANAKARA STREET


UKKADAM

COIMBATORE 641 001

*

**PRINTERS & BINDERS**

**மலர் மணம் எங்கும் பரவ எங்கள் வாழ்த்துக்கள்!**



## "நவமணிகளின் தன்மை"

| | குணம் | குற்றம் |
|---|---|---|
| வைரம்— | கனம் இல்லாமை, சமமான என் பட்டை, மிக்க ஒளி, தூய்மை, அறு கோணம் | கறுப்பு, புள்ளி, இரேகை, ஒளீ நடுக்கம், (உதறல்) காக்கைக் கால். |
| முத்து— | பருமை, வட்டம், உருண்டை, ஒளிஸடமை, தெண்மை, மழமழப்பு | காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை, மசூர உரு, திரிபுட உரு, ஆமை உரு, கமண்டல உரு, கறுப்பும் உரு, மஞ்சளும் கலந்த நிறம், நீல நிறம். முதலியன. |
| மரகதம்— | அருகம் புல் இதழ் போன்றது, வழவழப்பாக உள்ளது. சம்பாப் பயிரின் நுனி போல் இருப்பது, கிளிழன் சிறகு போன்றது, துளசியிலை நிறம், தாமரை இலை போன்றது. | தோஷலோசாந்விதம், தோஷமூர்ச்சிதம், துஷ்டம், தோஷலேசம், மந்ததோஷம். |
| மாணிக்கம்— | துவிச் சாயம், துவி பதம், பின்னம், கர்க் கரம், லசுநாபதம், காமலம், ஜடம், துமரம், இவை ஸ்மிருதி சரோத்திரத்தின்படி | துளை, கரடு முரடு, பார்வைக்கு விகாரம் அவல் வடிவு, இலேசு, கோணல், மங்கல் சிதறிய ஒளி, (இவை வாகடம் சொல்வன) |
| நீலம்— | கனம், மனங்கவரும் ஒளி, நல்ல பூரிப்பு, பக்க பூரிப்பு, புல்லைப் பிடிக்கும் தன்மை, இவை ஸ்மிருதி சாரோத்திரப்படி | அப்ரகம், ஸசர்க்கம், த்ராஸம், பீன்னம் மிருத்திகா கர்ப்பம், அச்ம கர்ப்பம் |
| புட்பராகம்— | பருமை, அழகிய தோற்றம், தெளிவு, கனம், மென்மை, கோங்கு இலவ மலர் போன்ற நிறம், இரட்டிப்பான வெண்மை நிறம் | ஒளியின்மை, நாசனே, கருமை, மஞ்சள் நிறங்கள், மேடு பள்ளம், கலங்கல், கரு வெண்மை, வெண்மை |
| வைடூரியம்— | கறுப்பு கலந்த சிவப்பு, சமநிறமாக இருத்தல், மாசற்ற தன்மை கனம் நல்ல ஒளி, வெண்மையான மேலொளி, ஒளிச் சுழற்சி | கருமையான நீர் போன்ற நிறம், பலகையாக இருத்தல், கனமின்மை, சொர சொரப்பு, மேலே ரேகைகளின் சுற்று முதலியவை |
| கோமேதகம்— | தேன்துளியின் நிறம், உருக்கிய நெய்த் துளியின் நிறம், பசுவின் சிறுநீர் நிறம், சிவந்த பொன் நிறம், தூய்மை, திண்மை, முதலியன. (பரஞ்சோதியார்) | மங்கிய நிறம், கனமின்மை, மேடுபள்ளம், உப்புக் கசிவு, பாசி படர்ந்திருத்தல், அவல்போல் பலகையாய் இருத்தல், ஒளி இன்மை, உருக்குக் கல்போல இருத்தல். |
| பவளம்— | கொவ்வைக் கனி நிறம், வட்டம், நீளம், மேடு பள்ளம் இல்லாமை, மழமழப்பு, காயமில்லாதது. பெரியது. (வாகடம்) | வெண்மை, சாம்பல் படிந்திருத்தல், குரூரத் தோற்றம், சிதைவு, துளைபட்டிருத்தல் கனமின்மை, துய வெண்மை (வாகடம்) |


தொகுப்பு:

# கே. ஆர். எஸ். மணி, கே. ஆர். அண்டு சன்ஸ்,

தங்கம் மற்றும் வைர அணிகலன்கள் விற்போர்

**பெரிய கடைவீதி, கோவை**

THE
LAKSHMI MILLS
COMPANY
LIMITED

Telegram
'LAKSHMI" COIMBATORE
"LAKSHMIMIL" KOVILPATTI

Telex
COIMBATORE: 0855—212

Telephone
COIMBATORE: 30251 to 30255
KOVILPATTI: 613
PALLADAM: SULUR 88250

*BRANCHES AT:*
**KOVILPATTI & PALLADAM**

**SPINDLES 1,60,096 LOOMS: 394**

*MANUFACTURERS OF*

**FINEST QUALITY COTTON, STAPLE FIBRE, POLYESTER YARN & FABRICS**

*ASK BY NAME OUR FOLLOWING PRODUCTS*

"POLY CROWN"
POLYESTER/VISCOSE SUITING IN POPULAR SHADES

"GOLD CROWN"
POLYESTER/COTTON SHIRTING IN PASTAL SHADES

"MARQUISS"
2x2 POLYESTER/COTTON SHIRTING IN FASCINATING SHADES

"YUVARAJA"
80% POLYESTER 20% COTTON SHIRTING IN PASTAL SHADES

"DEMOCRAT"
POPLINS IN BLEACHED MERCERISED AND IN PLEASING SHADES

"BALLERI×A & PRITI"
PRINTED VOILES, SUPERFINE MERCERISED, WOVEN FROM


SUPERIOR COTTON YARN

PHONE 30040

# Super Agencies

144 A Crosscut Road

COIMBATORE 641 012



DEALERS IN

TRACTOR — DRAWN

TRAILERS

AGRICULTURAL IMPLEMENTS

AUTOMOBILE TYERS ETC.


*With the Best Compliments From*

Telegram: "CENTURY"

Phone: Off: 35975
23387
God: 27597
Res: 31707

# C. B. MUTHUSWAMY CHETTIAR & SON

384 RAJA STREET □ COIMBATORE 641 001



*DISTRIBUTORS*

M/s. THE TATA OIL MILLS COMPANY LIMITED

LAKME LIMITED

OR. Vanaspathi, Refined Oil

M/s. MALHOTHRA INTERNATIONAL P. LIMITED

for their Blades

*DEALERS*

Wheat products of M/s. AUROFOOD P. LIMITED and

M/s. CENTURY FLOUR MILLS LIMITED

தமிழ் மணம் பரப்பும் மலருக்கு எங்கள் மனம் கனிந்த வாழ்த்துக்கள்!

*

பாடற் கினிய வாக்களிக்கும்;
பாலும் சோறும் பரிந்தளிக்கும்;
கூடற் கினிய அடியவர்தம்,
கூட்டம் அளிக்கும்; குணமளிக்கும்;

ஆடற் கினிய நெஞ்சே! நீ
அஞ்சேல், என்மேல் ஆணைகண்டாய்!
தேடற் கினிய சீரளிக்கும்,
சிவாயநம என்றிடு நீறே!

—வடலூர் வள்ளலார்,
834—2—25-புண்ணிய விளக்கம்-1

*

இடம் தந்து உதவியவர்கள்

**இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம் மானுபாக்சரிங் கம்பெனி**

**மேட்டுப்பாளையம்**

# ஏற்காட்டில் தொழிலாளர் கல்வி முகாம்

**இந்த ஆண்டில் பின்வரும் புதிய நிகழ்ச்சிகளுக்கு கோயமுத்தூர் தொழிலாளர் கல்வி மண்டல அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.**

1. நாமக்கல், ஓசூர் மற்றும் பத்து இடங்களில் கிராமத் தொழிலாளர் முகாம்.
2. மாவட்டத் தலைநகர்களில் தொழிற்சங்கத் தலைமைப் பயிற்சி.
3. ஏற்காடு, மேட்டூர் அணைப் பகுதியில் தொழிலாளர் கல்வி முகாம்கள்.
4. வால்பாறை, கூடலூர், ஏற்காட்டில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒருமாத சிறப்புப் பயிற்சி.
5. தொழிற்சங்கங்களுக்கு மானியத் திட்டம்.

விபரங்களுக்கு அணுகுக

மண்டல இயக்குநர்

இந்திய அரசு தொழிலாளர் கல்வித் திட்டம்

ஆர். எஸ். புரம்

**கோயமுத்தூர்: 641 002.**

WITH BEST COMPLIMENTS FROM

# Tribhovandas Vendravan & Bros.



R. G. Street

Post Box No. 141

Coimbatore 641 001

Phone

Trunks: 22081

Locals: 22082-83-84

WITH THE BEST COMPLIMENTS FROM

# TEXMO INDUSTRIES

POST BOX No. — 5303

**GNANAMBIKAI MILLS POST ● COIMBATORE 641 029**

Manufacturers of

ELECTRIC MOTORS * MONOBLOCKS * SINGLE PHASE MONOBLOCKS

CENTRIFUGAL PUMPS * CENTRIPETAL PUMPS * JET PUMPS

PISTON PUMPS * SUGAR CANE CRUSHERS * SUBMERSIBLE MOTOR PUMPSET, ETC.

BRANCHES

**MADRAS ● MADURAI ● SALEM ● TRICHY**

**VIJAYAWADA ● SECUNDERABED ● CHITTOOR**

"கோவை வானொலியில் தமிழ் மணம்"

- மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

சாதிமதம் சமயம்எனும் சங்கடம்விட்டு அறியேன்,
சாத்திரச்சேறு ஆடுகின்ற சஞ்சலம் விட்டறியேன்,
ஆதிஅந்த நிலையறியேன், அலையறியாக் கடல்போல்,
ஆனந்தபெரும் போகத்து அமர்ந்திடவும் அறியேன்,
நீதிநெறி நடந்தறியேன், சோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தைஅறி வேனே,
ஏதிலார்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்,
யார்க்குரைப்பேன், என்னசெய்வேன்,
ஏதும்அறிந்தி லனே.

— இராமலிங்க வள்ளலார்
(39919-6-6-முறையீடு-7)

இடம் தந்து உதவியவர்கள் —

# கவுண்டர் அண்ட் கோ

டாக்டர் நஞ்சப்பா ரோடு
கோயமுத்தூர்

*With the best compliments from:*

APPROVED DYERS & PRINTERS

Phone : 2958

# CHITRA TEXTILE INDUSTRIES

**ARTISTIC PHOTO SCREEN PRINTERS**

W 1/D 114 Surampatti P O


Post Box No. 96

ERODE- (Tamil Nadu) 638009

SPECIALISTS FOR


ROLLER & SCREEN PRINTING of Coating
Chntz & Shirting
Batik Lungies, Shirting & Chints

'தமிழ் மணம்' மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்!




# VIVIN & COMPANY

**COIMBATORE 641 012**



தமிழ் மணம் பரப்பும் மலருக்கு
எங்கள் மனம் கனிந்த வாழ்த்துக்கள்

ஸ்கூட்டர் முதல் டிராக்டர்
வரையிலான டயர் ரிட்ரேடிங்
செய்ய சிறந்த ஸ்தாபனம்



AA ரிட்ரேடிங் கம்பெனி

15/1 மேட்டுப்பாளையம் ரோடு
கோயமுத்தூர்-641011
போன் : 36255 (5 லைன்)

TEL ROMAYOR
POST BOX No 424

PHONE { OFFICE 20931
WORKS 21679
RESI 20243

# MUTHU OFFSET PRINTERS

FINE ART LITHOGRAPHERS OFFSET PRINTERS &
CALENDER MANUFACTURERS SPECIALISTS
IN HOSIERY TOP LABELS, CARD BOARD CARTONS
BEEDI LABELS & MATCH BOX LABELS ETC.,

"Muthu Nilayam" Kamaraj Road,
TIRUPUR-638 604

BEST WISHES FROM

# SREE ANNAPOORNA
# SREE GOWRI SHANKAR,

**M/s. K. Dhamodaraswami Naidu & Bros.,**

29/29, Subramaniam Road,
R. S. Puram, COIMBATORE-2

**FOR DELICIOUS SWEETS, HOMELY MEALS & TASTY SNACKS**

**Sree ANNAPOORNA**
**D. B. Road,**
**R. S. Puram, Coimbatore**

**Sree GOWRI SHANKAR,**
**Cross Cut Road,**
**Gandhipuram, Coimbatore**

**Sree ANNAPOORNA Branch**
**Municipal Central Bus Stand,**
**Jail Road, Coimbatore**

**Sree GOWRI SHANKAR Branch**
**Arts College Road,**
**Opp. Dist. Sessions Court,**
**Coimbatore**

and Tiruppur SREE ANNAPOORNA
"INDIA HOUSE"
67-A, Kumaran Road,
TIRUPPUR.

**Telephones : 33052, 33053, 33374, 27221 and 24540 Coimbatore,**

இந்திய ஒலிபரப்பின்
பொன் விழாவினைக் கொண்டாடும்
கோவை வானொலி நிலையத்துக்கும்
ரசிகர் வெளியிடும் மலருக்கும்
எங்கள் மனங்கனிந்த
வாழ்த்துக்கள்!



# M/s. Metafab

16, Trichi Road
Coimbatore
641 018

★ FABRICATORS
★ STEEL STRUCTURAL DOORS
★ WINDOWS
★ GATES & MANUFACTURERS OF HIGH POWER TANKS ETC

கண்ணைக் கவரும் அழகிய உத்திரவாதமுள்ள
தங்க ஆபரணங்களுக்கு



## ஸ்ரீ லக்ஷ்மி ஜுவல்லரி

**தலைமையகம்**

309 ராஜவீதி கோவை 641 001
போன்: 24483

**கிளைகள்**

### ஸ்ரீ லக்ஷ்மி ஜுவல்லரி ஷோரூம்

292, பெரியகடை வீதி,
கோவை 641001 போன் 33665

### ஸ்ரீ லக்ஷ்மி டைமண்ட்ஸ்

340-A. பெரியகடை வீதி,
கோவை 641001

**வியாபாரப் பெருமக்களின் கவனத்திற்கு**

ஸ்ரீலக்ஷ்மி ஜுவல்லரி தலைமையகத்துடன்
இணைந்த முறையில் குளியலறை வசதியுடன்
தங்கும் ரூம்களுக்கு

### ஸ்ரீலக்ஷ்மி லாட்ஜ்

312, ராஜ வீதி,
கோவை 641 001 - போன் 33330

MANUFACTURERS OF

**'ROLON'**
**AUTOMOTIVE & INDUSTRIAL CHAINS**

# L G Balakrishnan & Bros Limited

GANAPATHY POST COIMBATORE 641 006

Branch Offices

104 REWA CHAMBERS
NEW MARINE LINES
BOMBAY 400 020

201 PRABHAT KIRAN
17 RAJINDRA PLACE PUSA ROAD
NEW DELHI 110 060

**Distributors for Southern Zone**

Automobile Chains

**M/s T V Sundaram Iyengar & Sons Limited**
WEST VELI STREET
MADURAI

**M/s Madras Auto Service**
**M/s Sundaram Motors**
37 MOUNT ROAD
MADRAS 6

Industrial Chains

**M/s South Roller Chain Stores**
304 LINGHI CHETTY STREET
MADRAS

